விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 மாசி 26 செவ்வாய்க்கிழமை (10.03.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 081

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

# மோடியிடம் 13 ஐ வலியுறுத்துவேன்


## ரணிலுக்கும் தக்க பதில் கொடுப்பேன் - விக்னேஸ்வரன்



(கொழும்பு)

13 ஆவது அரசியல் திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டியது இந்தியாவின் தார்மீகப் பொறுப்பு ஆகும். அதனை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் வலியுறுத்தவுள்ளதாக தெரிவித்துள்ளார் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். மாறான கருத்துக்களை வெளியிட்டுவரும் பிரதமர் ரணிலிற்கு விரைவில் தக்கபதில் அளிப்பேன் எனவும் தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## கல்வி அமைச்சின் அலுவலகத்தை பூட்டி ஆசிரியர்கள் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

கல்வி வலயங்களால் விடுவிக்கப்பட்டும் இடமாற்றம் வழங்கப்படாத ஆசிரியர்கள் தமக்கான இடமாற்றத்தை உடனடியாக வழங்கக் கோரி வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அலுவலகத்தினை முற்றுகையிட்டு அலுவலக உத்தியோகத்தர்கள் எவரையும் வெளியேறவிடாது போராட்டத்தில் ஈடுபடிருந்தனர்.

அதி கஷ்ரம், கஷ்ரம் பிரதேசங்களான வன்னி, வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, மன்னார், துணுக்காய், மடு, தீவகம், வடமராட்சிக் கிழக்கு ஆகிய 24ஆம் பக்கம் பார்க்க....

## சீனா உடன்பாட்டை பாதுகாக்க முயற்சி

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தினால் இடைநிறுத்தப்பட்ட 1.4 பில்லியன் டொலர் பெறுமதியான கொழும்பு துறைமுக நகரத்திட்ட உடன்பாட்டைப் பாதுகாப்பதற்கான இராஜதந்திர முயற்சிகளை சீனா மேற்கொண்டுள்ளது.

கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தை தற்காலிகமாக இடை நிறுத்த அமைச்சரவை கடந்த புதன்கிழமை முடிவு எடுத் 24ஆம் பக்கம் பார்க்க....

## மைத்திரி குழுவிற்கு பலத்த பாதுகாப்பு

(லண்டன்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் தூதுக் குழுவினருக்கு லண்டன் பெரு நகர பொலிஸாருக்கு மேலதிகமாக சாதாரண உடையணிந்த பொலிஸாரும், குதிரைப்படை பொலிஸாரும் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

ஜனாதிபதிதங்கியிருக்கும்ஹோடடல், பொதுநலவாய நாடுகளின் செயலகம் 23ஆம் பக்கம் பார்க்க....

## ஐரோப்பிய தடை நீங்கும் சாத்தியம்


(கொழும்பு)

இலங்கையின் மீன்வள ஏற்றுமதி மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை நீங்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுவதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் சர்வதேச வர்த்தகக்குழு உப தலைவரும ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினருமான ஜான் செஹ்ராடி தெரிவித்தார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு வந்த ஜான் 23ஆம் பக்கம் பார்க்க....

## தேசிய அரசை அமைப்பது இலகுவான விடயம் அல்ல!

### இலண்டனில் ஜனாதிபதி தெரிவிப்பு



(லண்டன்)

இலங்கையில் ஒரு அரசியல் கட்சி தனது இருப்புக்காக ஏனைய கட்சிகளை உடைத்து பலமற்று போக செய்யும் அரசியல் கலாசாரம் காரணமாக அனைவரும் எதிர்பார்த்தபடி தேசிய அரசாங்கம் ஒன்றை உருவாக்குவது 24ஆம் பக்கம் பார்க்க....

## வெளியே செல்ல முடியாதபடி கோத்தாவிற்கு நீதிமன்று தடை



(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேற முடியாதபடி நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

காலி நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. காலித் துறைமுகத்தில் தடுததுவைக்கப்பட்டிருந்த 24ஆம் பக்கம் பார்க்க....

## கொழும்பு நீதிமன்றில் இன்று ஜெயக்குமாரி ஆஜர்

### பிணை கிடைக்க வாய்ப்பு

(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெயக்குமாரி உட்பட அரசியல் கைதிகள் சிலர் இன்று கொழும்பு நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர்.

கொழும்பு நீதிமன்றில் 8 ஆம் இலக்க அறையில் இவர்கள் இன்று ஆஜர் படுத்தப்படும்போது ஜெயக்குமாரிக்கு பிணை வழங்கக் கூடிய சாத்தியப்பாடு 24ஆம் பக்கம் பார்க்க....

## விரக்தியின் விளிம்பில் அரசியல் கைதிகள் ! விடுதலையை வலியுறுத்தி ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

நெடுங்கால சிறைவாசத்தை அனுபவித்துவரும் நாம் பட்டறிவுகளைப் பாடமாகக்கொண்டு இனி வரும் நாட்களை இனிய நாட்களாக எதிர்கொள்ள திடசங்கற்பம் பூண்டுள்ளோம்.

எனவே எம்மையும் இந்த நாட்டுப் பிரஜைகளாகக் கருதி, விடுதலைசெய்ய அமைதியும் சாந்தமும் கொண்ட இலங்கை நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுக்கவேண்டும் என தமிழ் அரசியல் கைதிகள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுகுறித்து அவர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கோரிக்கை மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு, கடந்த மூன்றரை தசாப்த கால உள்நாட்டுப் போர்ச்சூழலால் அவசரகால, பயங்கரவாத தடைச்சட்டங்களின் கீழ் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து சந்தேகத்தின் பெயரால் கைது செய்யப்பட்டு மிக நீண்ட காலமாக நாம் சிறைகளில் அடைககப்பட்டுள்ளோம். சூழ்நிலைக கைதிகளான எம்மில் இளைஞர்கள், யுவதிகள், 23ஆம் பக்கம் பார்க்க....

## அகதிகளுக்கான உடன்படிக்கையை அவுஸ்திரேலியா மீறியுள்ளது

### புதிய அறிக்கையில் ஐ.நா குற்றச்சாட்டு

(கொழும்பு)

அகதிகளுக்கான சர்வதேச உடன்படிக்கையினையும் சட்டத்தையும் அவுஸ்திரேலியா மீறியுள்ளதாக ஐ.நாவின் புதிய அறிக்கையில் வெளியாகியுள்ளது.

அகதிகளை நடத்தும் விதம் சித்திரவதைகளுக்கு ஒப்பான முறையில் அமைந்திருப்பதாக உள்ளதாகவும் இது சர்வதேச சட்டத்தை மீறும் செயற்பாடாக உள்ளத்ாக அறிக்கையில் குறிப் 24ஆம் பக்கம் பார்க்க....

## ஊழலை விசாரிக்க புதிய ஆணைக்குழு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ ஆட்சி காலத்தில் இடம்பெற்ற பாரிய ஊழல் மோசடிகளை விசாரணை செய்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் 5 பேர் அடங்கிய விசேட வசாரணை ஆணைக்குழுவொனறு நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆணைக்குழுவில் உச்ச நீதிமன்ற நீதிபதிகளான பிரியசாத் டேப்த், அனில் குணரத்ன, உயர் நீதிமன்றம் நீதிபதி கிஹான் ஹமான்ஷ குலதுங்க, 24ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

### யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி

# வலம்புரியின் செய்திக்கு பீடாதிபதி விளக்கம்

(யாழ்ப்பாணம்)

வலம்புரியின் நேற்றைய பதிப்பில் வெளியாகிய வார இறுதி நாட்களில் வீடு செல்ல அனுமதிக்குக-பெற்றோர் கோரிக்கை என்ற செய்திக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கம் விளக்கம் அளித்துள்ளார். இது தொடர்பில், அவர் அளித்த விளக்கம் வருமாறு,

எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி 2000 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் தலைசிறந்த ஆசிரியப் பயிற்சி நிறுவனமாகும்.

அந்த வகையில் மத்திய அரசாங்கத்தின் கீழ் இயங்கும் இந் நிறுவனங்களை வழி நடத்த பிரதம ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவரின் அனுமதி பெற்றே கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர் தொடர்பான முடிபுகளை எடுக்க முடியும். அத்துடன் கடித இலக்கம் ED/3/19/4/3-1 2015.01.30 ஆம் திகதி கடிதத்தின்படி பிரதம ஆணையாளரின் அனுமதி இன்றி கல்லூரிக்கு வெளியில் செல்ல ஆசிரிய மாணவர்களை அனுமதிக்க முடியாது. இது ஆசிரிய மாணவர்களுக்கும் தெளிவாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேநேரம் சனிக்கிழமைகளில் அவர்களுக்கான பயிற்சிகள் இடம்பெறும். தவிர ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை பெற்றோர்கள் ஒவ்வொரு வாரமும் தங்கள் பிள்ளைகளை (ஆசிரிய மாணவர்களை) சந்திப்பார்கள். எனினும் தங்கள் செய்தியில் ஆசிரிய மாணவர்கள் வீடு செல்ல அனுமதிக்கவில்லை என குறிப்பிட்டுள்ளீர்கள். இது முற்றிலும் தவறானது.

வதிவிடப் பயிற்சி என்ற காரணத்தினால் பாடசாலைத் தவணை விடுமுறையின் போதே மாணவர்களை விடுவிக்க முடியும்.

மேலும் 2015.02.27 அன்று கல்வி இராஜாங்க அமைச்சர் வி.இராதாகிருஷ்ணன் மற்றும் மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் கல்வியியற் கல்லூரிக்கு வருகை தந்தபோது இவர்களை ஆசிரிய மாணவர்கள் தனியாகச் சந்திப்பதற்கு அனுமதிக்கப்பட்டது. அந்த சந்திப்பு அன்றையதினம் மாலைவேளையில் நடந்தது. இருந்தும் தங்கள் பத்திரிகையில் கல்வி இராஜாங்க அமைச்சரை, ஆசிரிய மாணவர்கள் சந்திக்க நிர்வாகம் அனுமதிக்கவில்லை என பிரசுரிக்கப்பட்டுள்ளது இது முற்றிலும் தவறானது என பீடாதிபதி எஸ். அமிர்தலிங்கம் அனுப்பி வைத்துள்ள விளக்கக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# அகதிகள் தொடர்பிலான ஐ.நாவின் கருத்துக்கள் தவறு

### அவுஸ்ரேலிய பிரதமர் தெரிவிப்பு

தஞ்சம் கோரி வருபவர்களை அவுஸ்திரேலியா நடத்தும் விதம் குறித்து ஐ.நாவின் சித்திரவதைகளுக்கான சிறப்புத்தூதுவர் கூறியிருக்கும் கருத்துக்கள் தம்மை எரிச்சலூட்டுவதாக இருப்பதாக அவுஸ்திரேலிய பிரதமர் டொனி அபொட் கூறியுள்ளார்.

குறிப்பாக அவுஸ்திரேலியாவின் நாட்டுக்கு வெளியேயான தஞ்சக் கோரிக்கையாளர்களுக்கான தடுப்பு முகாம்களில் இருப்பவர்கள் நடத்தப்படும் விதம், சித்திரவதை குறித்த சர்வதேச சட்டங்களை மீறுவதாக இருப்பதாக ஐ.நா கூறியுள்ளது.

மனுஸ் தீவுகளில் உள்ள தஞ்சக் கோரிக்கையாளர்களுக்கான தடுப்பு முகாம்களின் நிலை குறித்து மனித உரிமைக் குழுக்களும் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று திங்களன்று சமர்ப்பிக்கப்பட்ட ஒரு அறிக்கையில், 60 நாடுகளில் சித்திரவதைகள் குறித்து சிறப்புத் தூதுவர் ஜோன் மெண்டஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

போதுமான தடுப்பு முகாம் வசதிகளை செய்யாமை, சிறார்களை தடுத்து வைத்தல், மனுஸ் தீவுகளில் வன்செயல்கள், மனித நேயமற்ற வகையிலான நடத்தைகளை தடுக்க தவறியமை ஆகியவை குறித்து அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஆனால், அவுஸ்திரேலிய அரசாங்கம் இந்த அறிக்கையை நிராகரித்துள்ளது. (செ-11)

## மோசடியை ஆராய விசாரணைக்குழு நியமனம்

மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனின் நெருங்கிய உறவினர் குறித்து முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆராய்வதற்கு விசாரணை குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனையின் பேரிலேயே மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.அபேகோன் இக்குழுவை நியமித்துள்ளார்.

மத்திய வங்கி ஆளுநரின் மருமகன் மீது மத்திய வங்கி திறைசேரி பிணைப் பத்திர விநியோகத்தில் மோசடி இடம்பெற்றமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## மரத்திலிருந்து வீழ்ந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

ஆட்டுக்கு குழை வெட்டுவதற்காக அரச மரத்தில் ஏறிய குடும்பஸ்தர் ஒருவர் தவறி விழுந்ததில் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் கொக்குவில் மேற்கில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த 4 பெண் பிள்ளைகளின் தந்தையான மயில்வாகனம் வெற்றிவேலாயுதம் (வயது 58) என்பவரே உயிரிழந்தவராவார்.

கீழே விழுந்தவர் உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் கொண்டு செல்லப்பட்ட போதும் வழியிலேயே உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சடலமானது யாழ்.போதனை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (செ-11)

# முகமறைப்பு தலைக் கவசங்களுக்கு தற்போதைக்கு தடையில்லை-ஜோன்

முகத்தை முழுமையாக மறைக்க கூடிய தலைக் கவசங்களை தடைசெய்வது குறித்த சட்டம் தற்போதைக்கு அமுல்படுத்தப்பட மாட்டாது என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் செலுத்துவோர் முகத்தை முழுமையாக மறைக்கக்கூடிய வகையிலான தலைக்கவசம் அணியக் கூடாது என்ற சட்டம் இந்த மாதம் 21-ம் திகதி முதல் அமுல்படுத்தப்படவிருந்தது.

எனினும் இந்த சட்ட அமுலாக்கத்திற்கு பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். சுய பாதுகாப்பு காரணிகளுக்காகவே முகத்தை முழுமையாக மறைக்கக்கூடிய தலைகவசம் அணிவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதனால் குறித்த சட்டத்தை தற்போதைக்கு அமுல்படுத்த வேண்டாம் என உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்க உள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

முழுமையாக முகத்தை மறைக்க கூடிய தலைக்கவசங்களை பயன்படுத்தி பல்வேறு குற்றச் செயல்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவித்தே இந்த வகை தலைகவசங்கள் பயன்படுத்துவதற்கு முன்னர் தடை விதிக்கப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-11)

## ரணிலின் கருத்துக்கு காங்கிரஸ் கண்டனம்

எல்லை தாண்டும் இந்திய மீனவர்களை சுடுவதில் தவறில்லை என இலங்கை பிரதமர் அண்மையில் அளித்த செவ்வி இந்தியாவிற்கு இழைக்கப்பட்ட மாபெரும் துரோகம் என இந்திய காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் வீ.நாராயணசுவாமி தெரிவித்துள்ளார்.

ரணிலின் இக்கருத்து தொடர்பாக இராஜதந்திர மட்டத்தில் பதில் பெற்று தருமாறு இந்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜிடம் காங்கிரஸ் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இப்படியான ஒரு சூழலில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயம் தொடர்பாக மீண்டும் ஒரு முறை சிந்திக்குமாறு வீ.நாராயண சுவாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கை, இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பாக தீர்வு வழங்காமல் மீனவர்களை சுட்டு தள்ளுவது தான் இலங்கை பிரதமரின் தீர்மானமா என வீ.நாராயணசுவாமி கேள்வி யெழுப்பியுள்ளார்.

மேலும் இலங்கை பிரதமரின் அவ்வாறான கருத்து இரு நாடுகளுக்கு இடையிலான இராஜதந்திர உறவை முறிக்கும் ஒரு செயலாகும். கடந்த காலங்களில் இலங்கை தமிழ் மக்கள் முகங்கொடுத்த சகல பிரச்சினைகள் தொடர்பாக தமிழ் நாட்டிலும் எதிர்ப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் நாராயண சுவாமி சுட்டிக் காட்டியுள்ளார். (செ-11)

## மரண அறிவித்தல்



### P.K.குமாரகுலசிங்கம்

(இளைப்பாறிய ஓவசியர்-நீர்ப்பாசனத் திணைக்களம்-புத்தளம், மன்னார்)

சிவலிங்கப்புளியடி வண்ணார்பண்ணையைப் பூர்வீகமாகவும், பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பெரியதம்பி கந்தையா குமாரகுலசிங்கம் (இளைப்பாறிய ஓவசியர் நீர்ப்பாசனத் திணைக்களம்) 08.03.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கந்தையா செல்லமுத்து தம்பதியினரின் மகனும், காலஞ்சென்ற P.K பாலசிங்கம் (படியாதவன்) இளைப்பாறிய முதன்மை ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர் (விஞ்ஞானம்), கல்வி அமைச்சின் முன்னாள் விஞ்ஞான பாடநூல் எழுத்தாளர்) மற்றும் யோகேஸ்வரி கந்தையா (இளைப்பாறிய பிரதி அதிபர், யாழ்.இந்து மகளிர் கல்லூரி), திருமதி இராஜேஸ்வரி சுந்தரநடராஜா (இளைப்பாறிய பிரதி அதிபர் முஸ்லிம் மகா வித்தியாலயம், வவுனியா), திருமதி இரட்ணேஸ்வரி ஜெயபாலன் (இளைப்பாறிய முகாமைத்துவ உதவியாளர் பிரதேச செயலகம், யாழ்ப்பாணம், உடுவில்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் P.K.B.பாலஸங்கர் (முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம்-கோப்பாய்), P.K.B.பாலமயூரகன் (கனடா) ஆகியோரின் சிறிய தகப்பனும், J.சாந்திபூஷன் (கனடா), திருமதி மேனகாசாந்தி சுதாசன் (கனடா), திருமதி ஜெனித்தாசாந்தி மணிபல்லவன் (லண்டன்), திருமதி துதிப்பிரியா சிவகுமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பொது வைத்தியசாலை, வவுனியா), திருமதி பிரியலக்ஷனா சாந்தரூபன் (முகாமைத்துவ உதவியாளர் நீர்ப்பாசன திணைக்களம், வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி சிவபதிமலர் பாலசிங்கம், N. சுந்தரநடராஜன் (இளைப்பாறிய அதிபர் கணேசபுரம் விநாயகர் வித்தியாலயம், வவுனியா) மற்றும் காலஞ்சென்ற R.ஜெயபாலன் (நிர்வாக உத்தியோகஸ்தர், நெல் சந்தைப் படுத்தும் சபை கிளிநொச்சி யாழ்ப்பாண மாவட்டம்) ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 12.03.2015 வியாழக்கிழமை காலை 8 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் 10 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

விதானை சங்கரியர் வளவு
478/3 K.K.S.வீதி,
சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.

தகவல்:-
P.K.B.பாலஸங்கர்
(பெறாமகன்)

(சி-322)


## வேலையாள் தேவை

சங்கானைப் பகுதியில் உள்ள மருந்தகத்தில் வேலை செய்வதற்கு வேலையாள் தேவை.

தொடர்பு:-0777702817

(9727)



## பணிநிலை வெற்றிடம்

### பெண்-பராமரிப்பாளர்

ஜெயந்திநகர், கிளிநொச்சி என்னும் முகவரியில் அமைந்துள்ள மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்தில் கீழ்க்காணும் பணிநிலை வெற்றிடம் உண்டு.

**குழந்தைகளைப் பராமரிப்பதற்கான பெண் பராமரிப்பாளர்கள் தேவை** (Warden)

**தகைமைகள்:**

1.க.பொ.த சாதாரண தரத்திற்கு குறையாத கல்வித் தகைமை.

2.அரச பதவிகளில் பணியாற்றி ஓய்வுபெற்ற அதிபர், ஆசிரியர்கள், ஏனைய அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பராமரிப்புத் துறையில் அனுபவம் மிக்கவர்கள் இப் பதவிக்கு விண்ணப்பித்தல் விரும்பத்தக்கது.

3.வயதெல்லை 25-65

4.விடுதியில் தங்கியிருப்பது அவசியம். உணவு, தங்குமிடம் என்பன இலவசமாக வழங்கப்படும்.

5.விண்ணப்பதாரர் தேகாரோக்கியம் உடையவராகவும் இல்லக் குழந்தைகளை அன்போடும், பாசத்தோடும்,, அரவணைத்து சைவநெறி ஒழுக்கத்திற்கு அமைவாக வழிப்படுத்தும் ஆற்றல், தியாக சிந்தனை, சமூக அர்ப்பணிப்புமிக்க உணர்வோடு இருத்தல் வேண்டும்.

■ சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

விண்ணப்ப முடிவுத் திகதி:-20.03.2015

தொடர்புகளுக்கு:
தி.இராசநாயகம், தலைவர்,
மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்,
ஜெயந்திநகர், கிளிநொச்சி.

(அ-321)

தொலைபேசி இலக்கம்:-0770604950, 0214923118

# கடலில் மீன்பிடித்தால் சுடலாம் என்பது எவ்வாறு நீதியாகும்

## கருணாநிதி கேள்வி



(சென்னை)

**கடலில் மீன்பிடித்தால் அவர்களை சுடலாம் என்பது எவ்வாறு நீதியாகும், அதற்கு சட்டம் அனுமதி வழங்குகிறதா? என திராவிடர் முன்னேற்றக்கழகத் தலைவர் கேள்வியெழுப்பியுள்ளார்.**

அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழர்களின் வாழ்வைச் சூறையாடிய மகிந்த ராஜபக்ஷ வெளியில் தலைகாட்ட முடியாத அளவுக்கு பாரிய தோல்வியை தழுவியுள்ளார்.

அவரை தோல்வியடைய செய்து ஆட்சிக்கு வந்துள்ள மைத்திரி பால சிறிசேனவின் காலத்தில் தமிழர்கள் இழந்த உரிமைகளை மீண்டும் பெறுவார்களா? என்பது தற்போது கேள்விக்குறியாகவே அமைந்துள்ளது.

இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் போது விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்களின் படகுகள் தாய்நாட்டை வந்து சேர்வதற்குள் மீனவர்கள் மீதான தாக்குதல் மற்றும் கைதுகள் தொடர்கின்றன. இது இவ்வாறிருக்க இலங்கை பிரதமர் இந்திய ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வி பெரிதும் துன்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய மீனவர்கள் வங்கக்கடலில் மீன்பிடிக்க செல்லும் போது இலங்கையின் எல்லை எங்கிருந்தது என அறிவதற்கு எவ்விதமான தடயங்களோ, அடையாளங்களோ இல்லாத நிலையில் அப்பாவித்தனமாக மீன்களை பிடிக்கும் போது இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டு அவர்களை கைது செய்யும் நடவடிக்கை தொடர்கின்றது.

மீனவர்கள் தம் வாழ்வாதாரத்திற்காக மீன்பிடிப்பதை இலங்கை பிரதமர் அவரது வீட்டில் கொள்ளையடிப்பதற்கு ஒப்பிட்டு கருத்து தெரிவித்திருப்பது எவ்வாறு சாத்தியமாகும் என அவர் கேள்வியெழுப்பியுள்ளதுடன், இது போல் கச்சதீவை நாங்கள் விட்டுக்கொடுக்க போவதில்லை, ஒப்பந்தத்தில் கொடுக்கப் போவதுமில்லை என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்திய பிரதமரின் இலங்கை விஜயத்தின் போது இலங்கை பிரதமர் இவ்வாறு முகத்திலடித்தாற் போல செவ்வி வழங்கியிருப்பது கண்டனத்திற்குரியதொன்றாகும்.

மீனவர்கள் பிரச்சினையை சுமுகமாக தீர்ப்பதற்கு முனையாமல் இலங்கை பிரதமர் இவ்வாறு தெரிவித்து மேலும் மேலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளமை மனவருத்தம் அளிக்கின்றது. இந்திய பிரதமர் தனது இலங்கை விஜயத் தின் போது வெறுமனே 13 ஆவது சீர்திருத்த சட்டம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தாமல் வட, கிழக்கு மாகாணங்களிலுள்ள இராணுவத்தை திரும்ப பெறுதல், சுவகரிக்கப்பட்ட தமிழ் மக்களின் காணிகளை மீள வழங்குதல், மாகாண சபைக்கு காவல்துறை நில நிர்வாகம், நில வருமானம், மீன்பிடி தொழில் தொடர்பான அதிகாரங்கள் அனைத்தையும் பெற்றுத்தரும் வரையில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

ரணில் விக்ரமசிங்க தமிழர்களையும், விடுதலைப்புலி இயக்கத்தினரையும் தற்போது குற்றஞ் சுமத்தியுள்ளார், ஆனால் அவர் இதே போராளிகளை சந்தித்துத் தான் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

தமிழர்கள் செறிந்து வாழும் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரை திரும்பப் பெறுவோம், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வோம், என வாக்குறுதியளித்து அவர் பிரதமரானார்.

ஆனால் பதவிக்கு வந்த பின்னர் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாது தமிழர்களையும், விடுதலைப்புலி இயக்கத்தினரையும் குறை சொல்வதில் சற்றும் நியாயம் இல்லை. இலங்கை ஜனாதிபதி இந்தியாவுடனான நட்பினை விரும்புவதால், இலங்கை தமிழர்களின் நல்வாழ்வுக்கான உரிமைகளை இந்திய பிரதமர் இச் சந்தர்ப்பத்தில் பெற்றுத் தர முடியும். இதுதான உலகவாழ் தமிழர்கள் அனைவரினதும் எதிர்பார்ப்பு என மு.கருணாநிதி குறிப்பிட்டுள்ளார். (3-5)

**தேவை**

துறைமுகம்/ விமான நிலையம் சேவைக்கு கல்வித்தகைமை உள்ள/ அற்ற பயிற்சியுடைய/ பயிற்சியற்ற 18-55 வயதிற்கு இடைப்பட்டவர்கள் உடனடியாக தேவை. (உணவு, தங்குமிடத்துடன் உயர்ந்த சம்பளம்) தொடர்புகளுக்கு:- 077 2926 934 (9634)

**தொழில் வாய்ப்பு**

உங்களது எதிர்காலத்துக்கு நல்லதோர் தொழிலை தேடுகின்றீர்களா? இதோ இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம், டொபி, பிஸ்கட், சோயா, பால்மா, ஆடை போன்ற பல தொழிற்சாலைகளில் மற்றும் தனியார் துறைமுகம், விமான நிலையம், மேசன், இலக்றீசன், பெயின்டர், தச்சு, வெல்டர் போன்ற பல வெற்றிடங்கள் 17-50 வயது ஆண், பெண் உடனடியாக தேவை. சம்பளம் 18000/=, 26000/=, 45000/= உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் வருகை தரும் நாளிலே வேலை. (சி-318)

தொடர்புக்கு- 077 683 8231, 077 111 6770

**பவள விழாவும் சிறப்பு நூல் வெளியீடும்**



பேராசிரியர் கலாநிதி S.ஜெபநேசன்

காலம்: 11.03.2015 புதன்கிழமை

நேரம்: பி.ப.3.30 மணி

இடம்: சென்.ஜோன்ஸ் கல்லூரி மண்டபம் (சுண்டுக்குளி)

அகவை வழிபாடு

தலைவர்

அருட்பணி சுப்பிரமணியம் மனோபவன் (அவுஸ்திரேலியா)

அருளுரை

அதி.வண. கலாநிதி இராயப்பு யோசப் (ஆண்டகை, மன்னார் மறை மாவட்டம்)

பகிரங்கக்கூட்டம் நடத்துநர்

செந்தமிழ்ச் சொல்லருவி எஸ்.லலீசன் (துணை அதிபர், ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்)

வாழ்த்துரை

ஸ்ரீலஸ்ரீசோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் (குருமுதல்வர், நல்லை ஆதீனம்)

பேராசிரியர் S.சிவலிங்கராஜா

அருட்பணி S.P.நேசகுமார் (குருமுதல்வர், இலங்கைத் திருச்சபை, நுவரெலியா)

ஏற்புரை

விழாநாயகன்

பேராயரின் அபிமானிகள், மாணவர்கள் யாவரையும் இவ்வழைப்பை ஏற்று வருகைதந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

விழா ஏற்பாட்டுக் குழுவினர்.

## குறுந்திரைப்படவிழா இன்று

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் குறுந்திரைப்பட விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சு.முரளிதரன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொள்ளவுள்ளார். (3-23)

## யாழ்.பல்கலையில் மகளிர் தினம்

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறையினரால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள மெயப்பட வைப்போம் எனும் மகளிர் தின நிகழ்வு இன்று பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெறவுள்ளது. இந்நிகழ்வில் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களின் கருத்துரைகள், சொல்லாடல்கள் இடம்பெறவுள்ளன. (3)

## இராசி பலன்

10.03.2015

மாசி 26, செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் காலை 6.20 மணிக்கு

சதுர்த்தி காலை 6.50 மணிவரை

சுவாதி முன்னிரவு 7.53 மணிவரை

இராகுகாலம் 3.23-4.53 மணிவரை

சுபநேரம் 10.53-12.23 மணிவரை

வளவன்

**மேடம்**: மறக்க முடியாத இனிய சம்பவங்கள் இடம்பெறலாம், நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், கடன் பிரச்சினையை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள்.

**இடபம்**: தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மிதுனம்**: பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கடகம்**: புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும் நாள், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும்.

**சிம்மம்**: உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட சிறப்படைவீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**கன்னி**: சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், பணியாளர் தொல்லை அகலும், வார்த்தைகளால் மேன்மையடைவீர்கள்.

**துலாம்**: எதிர்பாராத காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு, உடல்நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**விருச்சிகம்**: பிரபலமானவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.

**தனுசு**: பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மகரம்**: ஆடம்பர பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கும்பம்**: நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பயணங்களால் பலனுண்டு.

**மீனம்**: வரவும் செலவும் சமமாகும் நாள், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்களால் கூடுதல் கவனம் தேவை.

# ஆத்ம ஞானத்தைத் தேட

ஆன்மீகம் 158

## பயத்தை எதிர்கொள்ளல்

நாம் பேராசை மற்றும் பயம் என்னும் கண்ணாடிகளை அணிந்து கொண்டு நிஜத்தைப் பார்க்க அனுமதிப்பதேயில்லை. உளவியல் பூர்வமாக நீங்கள் மரணத்தை அனுபவித்துவிட்டால், மரண பயம் காரணமாக ஸ்வாதிஷ்டான சக்கரத்தில் பூட்டி வைத்திருக்கும் சக்தியை வெளியிடுவீர்கள். ஸ்வாதிஷ்டான சக்கரம் திறக்குமானால் வாழ்க்கையின் தன்மையே முழுமையாக மாறிவிடும்.

மரணம் என்பது இன்னொரு வடிவத்தில் தொடர்ச்சியே என்கிற உங்களுடைய ஏற்றுக்கொள்ளும் திறனால் உங்கள் வாழ்க்கையை மகிழ்ச்சியாக அனுபவிக்கும் திறனும் உருமாற்றமடைகிறது. உங்கள் முழு உடலுமே தளர்வாக இருக்கிறது. விழிப்புணர்வு அதிகரிக்கிறது; வாழும் திறன் விரிவடைகிறது. நீங்கள் ஏற்றுக் கொண்டாலும் இல்லாவிட்டாலும் உங்கள் வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் மரணத்தைப் பற்றிய பயம் உங்கள் உள் மனதில் ஒட்டிக் கொண்டுதான் இருக்கிறது. மரணத்தையும் மரணத்தைப் பற்றியும் பயத்தையும் புரிந்து கொள்வதன் மூலம் உங்கள் வாழ்க்கை வளம் பெறும். செல்வம் இல்லாமல் இருக்கக் கூடும். ஆனால், வாழ்க்கை வளமாக இருக்கும். வளமான தன்மையே உண்மையில் வாழ்க்கையில் முக்கியமான ஒன்றாகும்.

ஒரு சின்னக் கதை...

பிறவியிலேயே பார்வையற்ற ஒருவனுக்கு ஒரு மருத்துவர் குணப்படுத்துவதாக உறுதி கூறினார். மருத்துவர் அவனிடம், இந்த அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு உன்னால் பார்க்க முடியும்! உன்னுடைய ஊன்றுகோலை இனி நீ உபயோகப்படுத்த வேண்டிய தேவையே இருக்காது என்று உறுதி கூறினார். அதற்கு அவன் சொன்னான், டாக்டர், என்னால் பார்க்க முடியும் என்பதைப் புரிந்து கொள்கிறேன். ஆனால், ஊன்றுகோல் இல்லாமல் நான் நடப்பது எவ்வாறு சாத்தியமாகும்?



ஊன்றுகோல் அவனுடைய ஒரு பகுதியாகிவிட்டதால், பார்வை கிடைத்த பிறகு அவனால் ஊன்றுகோல் இல்லாமல் நடக்க முடியும் என்பதைக்கூட தொடர்புபடுத்திப் பார்க்க முடியவில்லை! ஒரு பார்வையற்ற மனிதனுக்கு அவன் பார்வை கிடைத்து விட்டால் ஊன்றுகோல் தேவையில்லை என்பதை எவ்வாறு விளக்குவீர்கள்? இப்பொழுது அவன் மிகவும் அஞ்சுகிறான். அதனால் நீங்கள் செய்ய முடிந்ததெல்லாம் அவனுக்கு அறுவைச் சிகிச்சை செய்து அவனையே பார்க்க வைக்க வேண்டியதுதான். அவ்வளவுதான். பிறகு அவனாகவே ஊன்றுகோலைத் துக்கி எறிந்து விடுவான்!

அதே போல, உங்கள் பயமனைத்தும் இறுதியாக மரணத்தைப் பற்றிய பயம்தான், உங்கள் ஆத்மா அழிவற்றது. உங்கள் உடம்புதான் அழிகிறது என்றெல்லாம் நான் சொன்னாலும் நீங்கள் உங்கள் பயத்தைப் பற்றிய கருத்துக்களை பயத்தினாலேயே விடாமல் பிடித்துக் கொண்டிருப்பீர்கள். ஏனெனில், நீங்கள் அதை அனுபவிக்கவில்லை!

மரணம் உங்கள் விழிப்புணர்வான அனுபவம் ஆகும் வரையில் பயம் உங்களை விட்டுச்செல்லாது. ஆனால், உங்களால் ஒன்று செய்ய முடியும். இதுபோன்ற வார்த்தைகளை மீண்டும் மீண்டும் கேளுங்கள். அவற்றைப் பற்றி ஒரு உறுதியான நம்பிக்கையை வளர்த்துக்கொள்ளுங்கள்; உங்களுடைய சிறிய பெரிய பயங்கள் எவ்வாறு உண்மையில் உங்கள் மரண பயத்துடன் தொடர்பு கொண்டுள்ளது என்பதைப் பார்க்க முயற்சி செய்யுங்கள்.

உங்களுடைய பயங்களெல்லாம் எவ்வாறு ஒன்றுக்கொன்று தொடர்புடையது என்பதைப் பாருங்கள்; உங்களுடைய பயங்களிலெல்லாம் ஒரு விழிப்புணர்வைக் கொண்டு வாருங்கள்; பிறகு உங்களால் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ச்சியடைந்து உண்மைக்கு அருகாமையில் வர முடியும்.

(தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**

# அதிசய உலகம்

### பாலைவனத்திற்குள் ஓர் சோலைவனம்
### நம்ப முடியாத அதிசயம்

பாலைவனம் என்றாலே நம் நினைவிற்கு வருவது வரண்ட மணல், வெப்பம் தான். ஆனால் இவையனைத்தையும் பொய்யாக்கும் விதமாக பெருநாட்டின் பெரன் பாலை



வனம் (barren desert in Peru) அமைந்துள்ளது.

அழகிய ஏரியில் ஹொட்டல்கள், வீடுகள், கடைகள் என சுற்றுலா பயணிகளைக் கவரும் இடமாக இது அமைந்துள்ளதுடன் 96 குடும்பங்கள் இங்கு வாழ்கின்றனர்.

# சமைப்போம் சுவைப்போம்

## மரவள்ளிக் கிழங்கு வடை



**தே.பொருட்கள்:-**

மரவள்ளிக் கிழங்கு - 500 கிராம்

மிளகாய்தூள் 1 - ஸ்பூன்

வேர்க்கடலை பவுடர் - 50 கிராம்

உப்பு - தேவையான அளவு

பெருங்காயப் பொடி - 1/2 ஸ்பூன்

எண்ணெய் - 500 கிராம்

**செய்முறை:**

மரவள்ளிக் கிழங்கைத் தோலுரித்து கழுவிவிட்டு துருவிக் கொள்ளவும். அதில் மிளகாய்த்தூள், உப்பு, வேர்க்கடலைப் பொடி, பெருங்காயப் பொடி ஆகியவற்றைக் கலந்து, காய்ந்த எண்ணெயில் வடைகளாகத் தட்டிப்போட்டு வெந்தவுடன் திருப்பிப் போட்டு தங்க நிறத்திற்கு வந்ததும் எடுக்கவும்.

# மீண்டும் தூக்குத் தண்டனையை அமுல்படுத்த அரசு நடவடிக்கை

## நீதியமைச்சர் உறுதிபட தெரிவிப்பு

(கொழும்பு)

**நாட்டில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களை இல்லாமல் ஒழிப்பதற்காக மீண்டும் தூக்குத் தண்டனையை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாக நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். போதைப்பொருள் கடத்தல் காரர்கள் ஒரிருவரை தூக்கிலிட்டால் நாட்டில் சமூக சீரழிவுகளை தடுக்க முடியும் என்றும் இக் கடத்தல்களின் பின்னணியில் அரசியல் செல்வாக்குள்ளவர்களே இருப்பதாகவும் அமைச்சர் குற்றஞ்சாட்டியுள்ளார்.**



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தொழில் அமைச்சில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற் றும் போதே நீதி மற்றும் தொழில் அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், தர்ம உபதேசங்கள் தினம் தினம் நடத்தப்படும் எமது நாட்டில் இன்று நாளுக்கு நாள் குற்றச் செயல்கள், பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான பாலியல் கொடுமைகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

குற்றச்செயல்கள் அதிகம் இடம்பெறும் நாடுகளின் பட்டியலில் நான்காம் இடத்தை எமது நாடு பெற்றுள்ளது.

இது பெருமைப்பட வேண்டிய விடயமல்ல. கவலைக்குரிய விடயமாகும்.

உயர்மட்டத்தினர், தலைவர்கள் நாட்டின் சட்டத்தை மதிக்காது செயற்படுவதன் காரணமாகவே சாதாரண நாட்டு மக்களும் அதனை முன்னுதாரணமாக கொண்டு குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர்.

என்வே நாட்டில் மீண்டும் தூக்குத் தண்டனையை அமுல்படுத்த வேண்டும்.

இதனை முன்பு சொன்னால் மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு தலைதூக்கும்.

ஆனால் மீண்டும் தூக்குத் தண்டனை கொண்டு வரப்பட வேண்டுமென நான் அமைச்சுப் பதவி எடுத்ததும் தெரிவித்தேன்.

இதற்கு மக்கள் மத்தியிலிருந்து எவ்விதமான எதிர்ப்பும் எழும்பவில்லை.

ஏன் மக்கள் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு நாட்டுக்குள் குற்றச் செயல்கள் அதிகரித்து விட்டன. மக்கள் பொறுமை இழந்து விட்டனர். எனவே குற்றச் செயல்களை இல்லாதொழிப்பதற்கு மீண்டும் தூக்குத் தண்டனை தேவை என்ற நிலைப்பாட்டுக்கு மக்கள் வந்து விட்டனர்.

நாட்டில் இன்று நூற்றுக்கு 45 வீதமானோர் போதை பொருளுக்கு அடிமையாகி சிறைச்சாலைகளில் முடங்கிக் கிடக்கின்றனர்.

போதை பொருள் பாவிப்பவர்கள் மற்றும் அதன் சில்லறை வியாபாரிகளை பொலிஸார் கைது செய்கின்றனர்.

ஆனால்மொத்தமாகதொகையாக போதை பொருள் கடத்தல்களில் ஈடுபடுவோரை பொலிஸார் கைது செய்வதில்லை.

ஏனென்றால் அவ்வாறான கடத்தல்களில் ஈடுபடுவோர் அமைச்சர்களாக இருக்கின்றனர். அல்லது மாகாண சபை உறுப்பினராக இருக்கின்றனர். அப்படியும் இல்லையென்றால் கண்காணிப்பு அமைச்சர்களாக இருக்கின்றனர்.

எனவே இவ்வாறானவர்களை கைது செய்வதில் பொலிஸார் அக்கறை காட்டுவதில்லை. சில்லறை வியாபாரிகளையே கைது செய்கின்றனர்.

இந்நிலை மாற வேண்டும். போதைப்பொருள் கடத்தல்காரர்கள் ஒரிருவரையாவது தூக்கிலிட வேண்டும். அப்போது தான் சமூக சீரழிவுகளை தடுத்து நாட்டையும் இளம் சமூகத்தையும் பாதுகாக்க முடியும் என்றும் அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார். (3-5)

# இனவாதத்தினை தூண்டுவதனால் தமிழர் எதிர்பார்க்கும் தீர்வு கிடைக்காது

## ரில்வின் சில்வா



தேசிய பிரச்சினைக்கு தீர்வு தேவையென தெரிவித்துக் கொண்டு இன வாதத்தினை தூண்டுவதனால் தமிழர் எதிர்பார்க்கும் தீர்வு கிடைக்கப் போவதில்லை. விட்டுக் கொடுப்பும் புரிந்துணர்வும் இரு தரப்பினரிடமும் இருக்க வேண்டும் என தெரிவிக்கும் மக்கள் விடுதலை முன்னணி தேசிய அரசுக்குள் ஏற்பட்டுள்ள குழப்பத்தை தீர்க்கும் வகையில் தேசிய பிரச்சினை தீராதெனவும் எச்சரித்துள்ளது.

வடமாகாண சபையின் செயற்பாடுகள் தொடர்பில் தேசிய அரசாங்கம் அதிருப்தியடைந்துள்ள நிலையில் இது தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் கருத்தினை வினவிய போதே கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய பிரச்சினைக்கு தீர்வு தேவையென்பதனையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வடமாகாண முதலமைச்சரும் ஆரம்பத்தில் இருந்தே தெரிவித்து வந்தனர். சர்வதேச பேச்சுவார்த்தைகளின் போதும் அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளின் போதும் இதனையே தெரிவித்து வந்தனர். ஆனால் இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு தேசிய அரசின் பங்காளியாக உள்ள நிலையில் வட மாகாணம் தமது முழுமையான ஆதரவினை தேசிய அரசிற்கு வழங்கிய நிலையில் இனப்படுகொலை தீர்மானமொன்றினை வட மாகாண சபையில் நிறைவேற்றியிருப்பதும் அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளாது இவ்வாறு செயற்படுவதும் அரசுடன் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் வகையிலேயே அமைந்துள்ளது.

அதேபோல் இணக்கப்பாட்டு ஆட்சியொன்று தற்போது இடம்பெற்றுக்கொண்டிருக்கின்ற நிலையில் வடமாகாண சபையில் இனவாதத்தினை தூண்டும் வகையில் செயற்படுவதாலும் அரசாங்கம் தமிழ் தரப்பினருடன் முரண்பாடுகளை தோற்றுவிக்கின்றமையாலும் இறுதியில் பாதிக்கப்போவது தமிழ் பேசும் மக்களே. எனவே இப்போது கிடைத்திருக்கும் வாய்ப்பினை சரியாக பயன்படுத்தி தேசிய பிரச்சினைக்கான தீர்வினை எட்ட வேண்டும்.

மேலும் மாற்றமொன்றினை ஏற்படுத்தவும் நல்லாட்சியினை ஏற்படுத்தவுமே தேசிய அரசாங்கம் உருவாக்கப்பட்டது. ஆனால் இன்று தேசிய அரசாங்கத்திற்குள்ளேயே குழப்பங்கள் ஏற்பட்டு விட்டன.

ஆட்சி அதிகாரம் யாருக்கு என்று போட்டி ஏற்பட்டு விட்டது. இதனை சமாளிப்பதா? அல்லது தேசிய பிரச்சினை உட்பட ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதா? என்பதில் சிக்கியுள்ளனர். எனவே இங்கு விரைவில் தேசிய அரசிலும் பிளவு ஏற்படுமெனவும் அவர் எச்சரித்துள்ளார். (3-5)

### மகிந்தவால் வெற்றி பெற முடியாது- மேர்வின் சில்வா

பசில் ராஜபக்ஷவும் கோத்தபாய ராஜபக்ஷவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இரு பக்கம் இருந்து இறுக்கியதாகவும் அவர் விரும்பிய பயணத்தை மேற்கொள்ள இவர்கள் இடமளிக்கவில்லை எனவும் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக் காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வி யில் அவர் இதனை கூறியுள்ளார்.

சோதிடம் மீது தான் நம்பிக்கை இழந்து விட்டதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தமை குறித்து கருத்து வெளியிட்டுள்ள மேர்வின் சில்வா, சோதிடம் மீது தனக்கு நம்பிக்கை இருப்பதாகவும் தவறான மருத்துவரிடம் மருந்து எடுத்தால், மரணிக்கவே வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்காதிருந்திருந்தால், தனது மகனை சிறையிலேயே கொன்றிருப்பார்கள் எனவும் தன்னை வெள்ளை வானில் கடத்தியிருப்பார்கள் எனவும் வெள்ளை வான் கலாசாரத்தின் ஸ்தாபகர் கோத்தபாய ராஜபக்ஷ எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் மகிந்த ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்கு வருவதை தான் விரும்பவில்லை எனவும் அவர் எதிர்வரும் தேர்தலில் போட்டியிட்டால் கண்டிப்பாக வெற்றி பெற முடியாது எனவும் மேர்வின் சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (3-5)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 02 உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L/ கனடா PR<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/4267 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 27 செவ் 2 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: DIP IN MULTI MEDIA/ NGO<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/4262 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 18 செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L/ அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/4269 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 20 செவ் 4 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: HNDIT, BIT/ தனியார் தொழில்<br>தொ.இ: G/4264 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 45 செவ் 2 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BFA/ ஆசிரியர்<br>தொ.இ: B/4270 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 53 1/2 செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSC/ ஆசிரிய ஆலோசகர்<br>தொ.இ: G/4268 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 38<br>தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/4271 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 32<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/4272 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

# திருடர்களின் தொல்லை முள்ளிப்பகுதியில் அதிகரிப்பு

## தற்காலிக பொலிஸ் நிலையம் அமைக்க கோரிக்கை

(கரணவாய்)

நெல்லியடி முள்ளிப்பகுதியில் திருடர்களின் தொல்லை அதிகரித்து காணப்படுவதால் அச்சம் காரணமாக குறித்த பகுதியால் போக்குவரத்தில் ஈடுபடமுடியாத நிலை காணப்படுவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அண்மைக்காலமாக குறித்த பகுதியில் வழிப்பறிக் கொள்ளைகள் அதிகரித்து வருவதாகவும் ஆள்நடமாட்டம் மிகவும் குறைந்த இடமாக காணப்படுவதால் கலாசார சீரழிவுகளுக்கு வழிகோலும் இடமாகவும் குறித்த பகுதி அமைந்துள்ளதாக தெரிவித்துள்ள பொதுமக்கள் குறித்த பகுதியில் கொலைகள் இடம்பெற்ற சந்தர்ப்பங்களையும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் நெல்லியடி முள்ளிப்பகுதியில் தற்காலிக பொலிஸ் நிலையம் ஒன்றை அமைப்பதன் மூலம் குறித்த பகுதியில் பயணம் செய்யும் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியுமெனவும் குறித்த பகுதிக்கு பொறுப்பாகவுள்ள பொலிஸ் அதிகாரிகள் இவ்விடயம் தொடர்பில் விரைவாக கவனம் செலுத்த வேண்டுமெனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் பொறுப்புடையவர்கள் அலட்சியமாக இருக்கும்பட்சத்தில் அநாவசியமான சம்பவங்கள் இடம்பெறுவதை தவிர்க்க முடியாது போய்விடும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (3-60)




# உரிமைகள் மறுக்கப்படும் போது இணைந்து போராடுவது அவசியம்

## மகளிர் தின நிகழ்வில் யாழ்.அரச அதிபர்

**(யாழ்ப்பாணம்)**

**உரிமைகள் மறுக்கப்படும் போது மறுக்கப்பட்ட உரிமைகளை பெறுவதற்கு அனைவரும் இணைந்து போராடுவது அவசியம்என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.**



யாழ்.சமூக செயற்பாட்டு மையம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுக் காலை 10மணியளவில் நடைபெற்ற மகளிர் தின நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வதேச மகளிர்தினம் 1910 ஆம் ஆண்டிலிருந்து பிரகடனப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

மகளிருக்கான உரிமைகள் காலம் காலமாக மறுக்கப்பட்டு வருகின்ற நிலையிலும் அவ்வுரிமைகளை பெறுவதற்கு போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் உரிமைகள் கிடைக்காத நிலையே காணப்படுகின்றது.

தமது உரிமைகளை பெற்றுக் கொள்வதற்குதனித்தனியாகப் போராடுவதனைவிட பாதிக்கப்பட்ட அனைவரும் இணைந்துபோராடுவதே பலமாகும்.

அந்த வகையில்யாழ். மாவட்டத்தில்அனைத்து மகளிர் அமைப்புக்களையும் இணைத்து மகளிர் சமாசம் என்ற ஒன்றை உருவாக்கியுள்ளோம்.

யாழ்.மாவட்டத்தில் 6 இலட்சத்து 15ஆயிரம் சனத்தொகை உள்ளது. இதில் 3 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் அதாவது 50வீதமானோர் பெண்களாகவே உள்ளனர். இவர்களில் 28 ஆயிரம்பேர் விதவைகளாகவும் உள்ளனர்.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரையில் உரிமைப் போராட்டம், வாழ்க்கைப் போராட்டம் என்ற இரண்டு நிலைகள் உள்ளன.

யாழ்ப்பாணம் மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுகளில் சிறுவர், பெண்களுக்கான தனியொரு பிரிவுகள் அமைக்கப்பட்டு சிறுவர்மற்றும்பெண்கள்தொடர்பான பிரச்சினைகள் கையாளப்படுகின்றன.

மகளிருக்கெனசிறப்புத் தன்மையுண்டு. மகளிருக்கான உரிமை மறுக்கப்படும் போது அனைத்து நிலையிலும் அவர்கள் போராட வேண்டும்.

தேர்தல்களில் போட்டியிட முன்னர் வேட்புமனுத் தாக்கல்களில்40 வீதமானவர்கள் இளைஞர்களாக இருக்கவேண்டும்· என்பது நியதி. ஆனால் இந்நியதி மகளிருக்கு இல்லை.

இவ்வாறு சட்டரீதியாக மகளிரின் உரிமைகள் மறுக்கப்படுவதனை அப்பெண்கள் தான் போராட வேண்டும்.

அரசியலில் பெண்கள் கலப்புற்றால்தான் சிறந்த சமூதாயத்தைக் கட்டியெழுப்பமுடியும்.

பெண்களின் உரிமைகள் மறுக்கப்படும்போது முன்னெடுக்கப்படுகின்ற போராட்டங்களுக்கு நான் உறுதுணையாக நிற்பேன் என்றும் அவர் தெரிவித்தார். (3-4)










யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் மகளிர்தின விழா நேற்றுக்காலை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. இந்நிகழ்வில் சுவிட்சர்லாந்தின் குடிவரவு குடியகல்வு துறை செயலர் கயநினா பொஃரெர் மங்கல விளக்கேற்றுவதையும் மாணவிகளின் கலை நிகழ்வுகளினையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-உ.சாளின்)

# வருடாந்த பொதுக்கூட்டம்

கரவெட்டி பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் தலைவர் வி.எஸ்.வீரசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக பிரதேச கணக்காளர் எஸ்.சிவரஞ்சன், யாழ்.மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய தலைவர் வி.ஸ்ரீசக்திவேல், யாழ்.மாவட்ட பகிரங்கசேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் செயலாளர் கெ.கதிரமலை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் இந்நிகழ்வில் வயதில் மிக மூத்த உறுப்பினர்களுக்குரிய கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-5)

# சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் தெற்கு கம்பன் சீமா ஸ்ரீஞானவைரவர்சுவாமிதிருக்கோவில் 1008 சங்காபிஷேக உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அதேவேளை இரவு 8 மணிக்கு வசந்தமண்டப பூசையும் தொடர்ந்து திருவூஞ்சலும் இடம்பெறும். அத்துடன் ஞானவைரவர் பெருமானின் வீதியுலாவும் இடம்பெறும். இரவு 10 மணிக்கு "மாலைக்காக வாதாடிய மைந்தன்" காத்தவராயன் சிந்துநடைக்கூத்தும் இடம்பெறவுள்ளது. (3-5)

# முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகைப்பயிற்சியும் இன்று

பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பருத்தித்துறை ஜே/401 (சுப்பர்மடம்) கிராம உத்தியோகத்தர் பிரிவில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் வேண்டுகோளுக்கிணங்க முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகைப் பயிற்சிச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இது தொடர்பில் பொதுமக்கள் அமைதியாக இருக்குமாறும் இது ஒரு ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார். (3)

# ராஜபக்ஷ குடும்பத்தில் ஒருவரையேனும் இதுவரை கைது செய்யாதது ஏன்?

## இரண்டு வாரங்களில் பதில் தரப்படும் என்கிறார் சுகாதார அமைச்சர்

(கொழும்பு)

**மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தில் ஒருவரையேனும் இதுவரையில் கைது செய்யவில்லை என்ற குற்றச் சாட்டுக்கு எதிர்வரும் இரண்டு வாரங்களில் பதிலளிக் கப்படும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.**



கொள்ளுப்பிட்டியில் நடைபெற்ற அரசாங்க பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களின் 65ஆம் ஆண்டு பொதுச்சபைக் கூட்டத்தில் நேற்று முன்தினம் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களை கைது செய்வது தொடர்பில் காட்டுச் சட்டங்களை அமுல்படுத்த முடியாது.

மிகவும் நிதானமான முறையில் நுட்பமாக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். 100 நாட்கள் திட்டத்தில் பல முக்கியமான விடயங்கள் ஏற்கனவே மேற் கொள்ளப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் சம்பளங்களை உயர்த்துமாறு கோரப்பட்டது.

எனினும், தற்போது மக்கள் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களை கைது செய் யுமாறு கோருகின்றனர். ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களை கைது செய்வதாகத் தெரிவித்தே நாம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டோம். மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரைக்கூட இதுவரையில் கைது செய்யவில்லை என குற்றஞ்சுமத்தப்படுகின்றது.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பிலான பெறுபேறுகளை இன்னும் இரண்டு வாரங்களில் பார்க்க முடியும். காட்டுச் சட்டத்தின் ஊடாக எவரையும் கைது செய்து விசாரணை செய்ய முடியாது. சுகாதாரத்துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தொழிற்சங்கங்களுடன் இணைந்து செயற்பட விரும்புவதாகவும் அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.(3-5)

# ரணில் விக்ரமசிங்கவின் கருத்துக்கு மோடி கண்டனம் தெரிவிக்க வேண்டும்

## ஜீ.கே.வாசன் வலியுறுத்து

(சென்னை)

இலங்கை பிரதமர் ரணில் விக்ரமசிங்க வெளியிட்ட கருத்திற்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி கண்டனம் தெரிவிக்க வேண்டும் என தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜீ.கே.வாசன் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்திய கடல் எல்லை தாண்டி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் மீனவர்களை சுடுவோம் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க அண்மையில் இந்திய ஊடகமொன்றிற்கு செவ்வி வழங்கியிருந்தார்.

அவரின் இக்கருத்து கண்டனத்திற்குரியது எனவும், இலங்கை விஜயத்தின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இந்திய பிரதமர் தமது கண்டனத்தையும், வருத்தத்தையும் தெரிவிக்க வேண்டும் என ஜீ.கே.வாசன் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் இலங்கை, இந்திய மீனவர்களுக்கிடையில் தொடர்ந்து காணப்படும் பிரச்சினைகளுக்கு சுமுக தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கையில் வாழும் சிங்களவர்களுக்கு வழங்கப்படுகின்ற உரிமைகள் அனைத்தும் தமிழ் மக்களுக்கும் கிடைப்பதற்கு இந்திய பிரதமர் ஏற்பாடு செய்ய வேண்டும் என ஜீ.கே.வாசன் கோரிக்கை விடுத்துள்ளார். (3-5)

### முன்னாள் இராணுவத்தினர் 10 பேருக்கு

# அடைக்கலம் கொடுத்த வழக்கில் சரத் பொன்சேகாவுக்கு விடுதலை



இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்ற 10 பேருக்கு 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது அடைக்கலம் கொடுத்து அவர்களை அரசாங்கத்திற்கு எதிராக மாற்றினார் என்ற குற்றச்சாட்டில் இருந்து முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா மற்றும் அவரது தனிப்பட்ட உதவியாளர் சேனக்க ஹரிப்பிரிய சில்வா ஆகியோர் குற்றச்சாட்டுகளில் இருந்து முற்றாக விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தேவிகா டி லிவேரா தென்னகோன் நேற்று இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டை முறைப்பாட்டு தரப்பினர் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறியுள்ளதாக நீதிபதி கூறியுள்ளார்.

இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்ற 10 பேருக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்கி சட்டவிரோத செயல்களுக்கு அவர்களை பயன்படுத்தியதாக பொன்சேகா மற்றும் சேனக்க சில்வா ஆகியோருக்கு எதிராக 41 குற்றச்சாட்டுக்களின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

சட்டமா அதிபர் தாக்கல் செய்த இந்த வழக்கில் முறைப்பாட்டு தரப்பினரின் சாட்சியங்கள் நேற்று நிறைவடைந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (3)

# பேசும் படம்-48

இடம்:- யாழ்ப்பாணம்



ஆடி அடங்கும் வாழ்க்கையடா ஆறடி நிலமே சொந்தமடா...

குறிப்பு : அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampesumpadam@gmail.com
facebook: www.facebook.com/valam.puri.16
தபால் முகவரி :ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
அல்லது நேரில்.

அனுப்பியவர்:
வி.விபுலானந்த்
யாழ்ப்பாணம்.

உங்கள் புகைப்படங்களை பிரசுரிக்க விரும்பினால் பேசும் படத்துடன் அனுப்பி வைக்கவும்.

# ஹில்டன் ஹோட்டலை பலவந்தமாக பசில் ராஜபக்ஷ பறித்தெடுத்தார்

## கேர்ணல் பெரேரா தெரிவிப்பு



சொந்தப் பணத்தில் நான் கட்டிய ஹில்டன் ஹோட்டலை முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ பறித்தெடுத்து கொண்டார் என கேர்ணல் பெரேரா தெரிவித்துள்ளார். ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

பசிலுக்கு பாராளுமன்றத்தில் அப்போதிருந்த பெரும்பான்மையை பயன்படுத்தி பாராளுமன்றத்தில் பிரேரணையை சமர்ப்பித்து, ஒரே நாளில் அதை நிறைவேற்றி எனது ஹோட்டலை பறித்துக் கொண்டார் என கேர்ணல் பெரேரா குற்றஞ்சுமத்தியுள்ளார்.

பசிலின் இந் நடவடிக்கைக்கு முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸும் உடந்தையாக இருந்தார் என்பதை கூறுவதற்கு நான் பயப்படவில்லை.

நீதிமன்றத்தில் கூட எனக்கான நீதி மறுக்கப்பட்ட நிலையிலும், தொடர்ந்தும் என் ஹோட்டலை நான் பெற்றுக்கொள்வதற்கான முயற்சியில் ஈடுப்பட்டு வருகின்றேன்.

இதேவேளை ஜனாதிபதி தேர்தலின் போது அரசாங்கம் மாறியது நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் கிடைத்த மாபெரும் வெற்றியாகும் வட கிழக்கு மற்றும் இலங்கையை குறித்து பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் சிந்தனைகளையும், திட்டங்களையும் நான் நன்கு அறிவேன்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன் கூட இவ்விடயத்தில் கவனம் செலுத்தியுள்ளதுடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிச்சயமாக நிவாரணங்களை பெற்றுக் கொடுப்பார் என கேர்ணல் பெரேரா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மேலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையானதை முதலில் செய்து விட்டே அபிவிருத்திப் பாதையில் செல்ல வேண்டும் என்பதில் ஜனாதிபதியும், பிரதமரும் உறுதியாகவுள்ளனர்.

இதேவேளை கடந்த அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட துறைமுக நகர திட்டத்தினால் சுற்றுச் சூழலுக்கும், மீன்பிடித்துறைக்கும் பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புண்டு. கடற்பரப்பில் 100 ஏக்கர் கொடுக்கப்படும் போது நிலப்பரப்பின் அடிப்படையில் எமது நாட்டிற்குத்தான் நட்டம்.

அதுமாத்திரமல்லாது அவர்கள் கப்பலிலோ, நீர்மூழ்கி கப்பல்களிலோ விசா இல்லாமல் வந்து செல்பவர்களை யாரால் தடுக்க முடியும் என கேர்ணல் பெரேரா கேள்வியெழுப்பியுள்ளார். (3-5)

# கூட்டுறவுத் துறையின் உருவாக்கத்தில் அச்சாணியாக இருந்த ஆர்.ஆர்.இராஜரட்ணம்




வடக்கு மாகாணத்தின் பொருளாதார நெருக்கடி, வாழ்க்கைத்தரம், வேலை வாய்ப்பு முதலான விடயங்கள் தொடர்பிலான உரத்த சிந்தனையை ஊக்குவிக்கும் முகமாக Jaffna Managers Forum ஆரம்ப கலந்துரையாடல்களை நிகழ்த்திய போது சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு கைகொடுத்து உதவவல்லது கூட்டுறவு என்பது கணடறியப்பட்டது.

அரசியலமைப்பின 13 ஆவது திருத்தச்சட்டத்தின் வாயிலாக மாகாணசபைக்கு முற்றாக கையளிக்கப்பட்ட கூட்டுறவு தொடர்பில் வடமாகாணம் சிறந்த தலைமைத்துவத்தை வழங்கி வழி நடத்துவதனூடாக வடக்கு மாகாணத்தின் பொருளாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்ற கருத்து வலுப்பெற்றது.

இக்கலந்துரையாடல்களில் முழு ஈடுபாட்டுடன் பங்கு கொண்டதன் வாயிலாகவும் இது தொடர்பான ஆவணங்களை கையளிக்குமுகமாக கௌரவ கூட்டுறவு அமைச்சரும், முதலமைச்சருமான நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரனை சந்தித்து கலந்துரையாடியதன் வ்ாயிலாகவும், வட பகுதியில் 1977 களின் முன் முன்னணியில் திகழ்ந்த கூட்டுறவு தொடர்பான எனது தேடல் தொடரலாயிற்று.

இவ்வகையில் எனது நினைவை கவர்ந்தவர் ஆர்.ஆர்.இராஜரட்ணம். கூட்டுறவு அலுவலராக அரசாங்க சேவையில் இணைந்து கூட்டுறவுச் சங்கங்களின சிரேஷ்ட் உதவிப் பதிவாளராக ஏறத்தாழ 40 வருடங்கள் ஒரு அரசாங்க அலுவலராக கூட்டுறவுத் துறையின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் உழைத்தவர்.



மானிப்பாய் இந்துவின் மாணவனாக...

வடபுல பாடசாலைகளுக்கு நிகராக மானிப்பாய் இந்துக் கல்லூரியை உயர்த்த வேண்டும் என்ற இலக்கு நோக்கிப் பயணித்த அதிபர் வீரசிங்கம் அவர்களுடன் அவர் இலட்சியம் நனவாக உறுதுணை புரிந்தவர். ஆம்! ஏழு வருடங்களாக அசைக்க முடியாத வெற்றி வீரர்களாக திகழ்ந்த உதைபந்தாட்ட குழுவில் அங்கம் வகித்ததோடு 1926 ஆம் ஆண்டு அகில இலங்கை விளையாட்டுப் போட்டியில் உயரம் பாய்தல் மற்றும் 120 யார் தடைதாண்டல் போட்டி என்பவற்றிலும்2ஆம்இடங்களைப் பெற்று மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு பெருமை சேர்த்தவர்ஆர்.ஆர்.இராஜரட்ணம்.

"எச்செயலையும் நன்றாக ஆரம்பித்தால் அரை வாசி முடிந்ததாகும்" என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்த அதிபரின் சொற்படி தனது தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டவர். வெள்ளிக்கிழமைகளில் பாடசாலை ஒன்று கூடலில் கூறப்பட்ட இந்து சமய ஞானிகளின் கருத்துக்களைத் தனது வாழ்வாதாரமாகப் பற்றிக் கொண்டவர்.

அரசாங்க அலுவலராக கூட்டுறவுப் பணியில்...

பின்னாளில் தான் ஒரு அரசாங்க அலுவலராக, கூட்டுறவுத் துறையின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட பொழுது தனது மதிப்புக்குரிய அதிபர் வீரசிங்கம் அவர்களுடன் மிகுந்த நெருக்கம் கொண்டார். க.வீரசிங்கம் வடமாநிலக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவராக தொடர்ந்து 26 வருடங்கள்தலைமை தாங்கியதோடு இலங்கை கூட்டுறவுச் சங்கங்களினாலும் தலைவராக கூட்டுறவு விருத்தியே அவரது நோக்காக கொண்டு செயற்பட்டு 1964 டிசெம்பர் 5 இல் இயற்கை எய்தியபின் அவர் நினைவாக முற்றவெளியில் ஒரு மண்டபம் அமைக்க வேண்டும் என்ற கூட்டுறவாளர் சிந்தனைக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து செயற்பட்டவர் ஆர்.ஆர். இராஜரட்ணம். வீரசிங்கம் மண்டபம் 1968 ஜூலை முதற் சனிக்கிழமை அதாவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தில் திறந்து வைக்கப்பட்ட போது தென்கிழக்காசியாவிலேயே மிகப் பெரிய பொது மண்டபமாக இருந்தது. மின் உயர்த்தி (LIFT) பூட்டப்பட்ட முதல் மண்டபமும் இதுவே யாகும். மூன்று மாடிகளைக் கொண்டமைந்த இக்கட்டடத்தின் திறப்புவிழாவில் பரிமாறப்பட்ட உணவின் சுவையை இன்றும் நினைவு கூரும் கூட்டுறவாளர்கள் நம்மத்தியில் வாழ்கிறார்கள். அதாவது பொதுச்சேவை என்பது அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் மக்களின் கூட்டான செயல்களை ஒனறிணைத்து இலக்கு நோக்கிச் செயற்படுவது என்பதைப் புரிந்து கொண்டு மக்கள் பணியை மகேசன் பணி என ஆற்றியவர் ஆர்.ஆர். இராஜரட்ணம்.

ஒரு தலைமையின் சிறந்த பண்பு என்பது, எல்லாம் தானாக நடந்தது போல்தோனறும் என்பர். இதனையே வெற்றிக்கு ஆயிரம் தந்தையர் என்றும் சொல்வதுண்டு. அதாவது அன்று பொறுப்பு வாய்ந்த அரசாங்க அலுவலராக இருந்த ஆர்.ஆர். இராஜரட்ணம் கூட்டுறவாளர் ஒன்று கூடி உழைக்கவும் அதன் வெற்றிக்கனியைகூட்டுறவாளர் சுவைக்கவும் களம் அமைத்துக் கொடுத்து அத்தனை செயற்பாட்டிற்கும் அச்சாணியாக இருந்து அமைதியாகப் பணியாற்றினார் என்பது மிகையல்ல. கூட்டுறவுச் சங்கங்களின் சிரேஷ்ட உதவிப் பதிவாளராக, மக்கள் வங்கியின் நெறியாளர்சபை உறுப்பினராக பணியாற்றிய ஆர்.ஆர்.இராஜரட்ணம் ஓய்வின் பின் தன்னை ஒரு கூட்டுறவாளராக மாற்றிக்கொண்டவர்.



கூட்டுறவாளனாக...

இவர் 1967 கூட்டுறவு தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை ஆரம்பித்து வைக்கையில் வெளியிட்ட கருத்துக்கள் வருமாறு.

1. கூட்டுறவு இயக்கத்தைக் கௌரவத்துடன் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமானால் தன் கையே தனக்குதவி என்ற அடிப்படையில் இயக்கவேண்டும்.

2. ஒவ்வொரு அங்கத்தவனும் சங்கம் தன்னுடையது என்று உணர வேண்டும். இந்த உணர்ச்சி இல்லாதுவிட்டால் சங்கம் முன்னேற்றமடையாது.

3. சங்கத்தின் சரியான இயக்கம் அங்கத்தவர்களிலே தான் தங்கியிருக்கின்றது. உததியோகத்தர்களில் அல்ல.

4. ஊழல்களின் விளைநிலங்கள் என கூட்டுறவு இயக்கத்தைக் கண்டிக்கும் பெரிய மனிதர்கள் இந்த இயக்கத்தில் சேர்ந்து பொறுப்பான விடயங்களில் கைகொடுத்துதவ மறுத்து விடுகிறார்கள். இவர்கள் கூட்டுறவு இயக்கத்தில் சேர்வதன் மூலம் ஆக்கபூர்வமான கடமைகளைப்புரிந்து அதைப் புனரமைப்புச் செய்ய வேண்டும்.

5. சங்கங்களிடையே ஊழல்கள் தொடர்ந்து நிலவுமேயானால் அரசாங்கத்துடன் தமது உரிமைக்காகப் போராட முடியாது. இவ்வியக்கம் தானாகவே ஊழல்களிலிருந்தும் நேர்மையீனத்தில் இருந்தும் சுததியடைந்து கொள்ளவேண்டும். இதற்கு கூட்டுறவு பற்றிய கோட்பாடுகளில்அறிவு அவசியம்

இதற்காகவே எங் கும் கருத்தரங்குகள் நட த்துவது வழக்கத்திற்கு வந்து ள்ளது. ஏனெனில் இத்த கைய அறிவைக் கருத்தரங்குகளே பரப்ப உதவியுள்ளன.

தொகுத்து நோக்கின் "கடமையே கண்கண்ட தெய்வம்" என உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் பணியாற்றிய. சமூகப் பொறுப்புணர்வு மீளப்பெற்றால் மட்டுமே நாம் நமக்கான நல்லாட்சியை வடக்கு மாகாண சபையில் நடைமுறைச் சாத்தியமாக்கலாம்.

அரசாங்க அலுவலர்கள் மதில் மேல் பூனைகளாகச் செயற்படுவதைத் தவிர்த்து உணர்வு பூர்வமாக உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் மக்கள் சார்பான சிந்தனைப்போக்குடன்செயற்பட்டால் மட்டுமே வடமாகாணத்தின் கூட்டுறவு மற்றும் சமூக, பொருளாதார மேம்பாடு சாத்தியமாகும்.

"அன்பைக் கலக்காமல் தயாரிக்கப்படும் றொட்டி சுவைக்காது. அது கசக்கும். ஒரு மனிதனின் பாதிப்பசியைத்தான் அது போக்கும்" என்பதைப்போல மனம் ஒன்றி வேலை செய்யாத ஒருவரால் முழு வெற்றியை அடைய முடியாது. அரைகுறை வெற்றிக்கு கிடைத்த வெற்றி கசப்புணர்வைப் பரப்பும் என்கின்ற கருத்தை முன்வைக்கிறார் டாக்டர் அப்துல்கலாம்.

ஆக மாகாண சபையின் செயற்பாட்டில் துறைசார்ந்த அலுவலர்கள், கூட்டுறவாளர்கள் ஒன்றிணைந்து தமது தனிப்பட்ட பண்பு, ஆளுமை, உள்ளார்ந்த குறிக்கோள்கள், இதய த்திற்குள் சுடர் விட்டுக் கொண்டிருக்கும் கனவுகள் இவற்றின் அடிப்படையில் இலட்சியப்பற்றுடன் செயற்பட்டால் கூட்டுறவு சுயாட்சியை, சுயநிர்ணய உரிமையை, மக்களாட்சியை மலரச் செய்யும் சாதனமாகலாம்.

வி.நிறஞ்சன்,
இணைப்பாளர்,
யாழ்.முகாமையாளர் சங்கம்.





புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், ஓய்வுபெற்ற அதிபர் சண்முகலிங்கம் மங்கல விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வேலணை பிரதேச செயலர் மஞ்சுளாதேவி சதீசன் சான்றிதழ் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# புதுமுறிப்பு குளத்தின் கீழ் 800 ஏக்கரில் சிறுபோகம்

(கிளிநொச்சி)

**இவ்வாண்டு சிறுபோக நெற்செய்கையை புதுமுறிப் புக் குளத்தின் கீழ் 800 ஏக்கரில் செய்யமுடியும் எனவும் குளக்கட்டு சாத்தியமான முறையில் உயர்த்தப்பட்டுள்ள தால் நல்லமுறையில் நெற்செய்கையை மேற்கொள்ள முன்வரவேண்டும் எனவும் இக்குளத்தின் கீழான நீர் வரி இடாப்பு மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும் எனவும் பிரதிப்பணிப்பாளர் தெரிவித்தார்.**

கிளிநொச்சி மாவட்ட புதுமுறிப்பு. குளத் தின் கீழான சிறுபோக நெற்செய்கை கூட்டம் நேற்று காலை கரைச்சி பிரதேச செயலர் பிரிவு திட்டமிடல் பணிப்பாளர் ச.பி.அமல்ராஜ் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தின்போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

மேலும் இக்கூட்டத்தில் மத்திய வகுப்பு காணிகளுக்கு தலா 12 ஏக்கர் வீதமும் சிறு மத்திய வகுப்பு காணிகளுக்கு 5ஏக்கர் வீத மும் சிவநகர் மற்றும் ஜெயந்தி நகர் காணி களுக்கு தலா ஒன்றரை ஏக்கர் வீதமும் நெற் செய்கை மேற்கொள்ளலாம் என தீர்மானிக் கப்பட்டது.

மூன்று,மூன்றரை மாத நெல்லினங்கள் விதைக்கப்படவேண்டும் எனவும் நீர்வழங்கல் திகதி,நீர்வழங்கல் முடிவுத்திகதி,கால்நடை கட்டுப்பாடு கமவிதானை தெரிவு ஆகியன ஒழுங்கு செய்யப்பட்டன. இதில் 276 பங்காளி கள் பயிர்ச் செய்கையில் ஈடுபட வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தற்போது இக்குளத்தின் நீர்மட்டம் 18 அடி ஒரு அங்குலமாக உள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட நீர்ப் பாசன பிரதிப்பணிப்பாளர் என். சுதாகரன், நீர்ப்பாசன பொறியியலாளர் ஜீ.செந்தூரன், விவசாய திணைக்கள ஆராய்ச்சி பணிப்பா ளர் Dr. எஸ்.ஜே.அரசகேசரி, காணி அலுவலர் கு.சிவகுமார்,கமநலசேவை பணிப்பாளர், திணைக்களத்தினர், விவசாய போதனாசி ரியர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்ட னர். (அ-254)



வவுனியா மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளின் கல்வி நிலை தொடர்பில் ஆராயும் கூட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியா பட்டானிச்சூர் தேசிய பாடசாலையில் நடைபெற்றது. வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் அமைச்சருமான றிசாத் பதியுதீன் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் வவுனியா வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர்கள், அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# நாம் எந்த இனத்திற்கும் எதிரானவர்கள் அல்ல!

## வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு

(வவுனியா)

வவுனியாவின் எல்லையோரங்களில் இருந்த சிங்கள மக்களையும் மீள்குடியேற்ற வேண்டும் என மீன்பிடி, போக்குவரத்து மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா கற்பகபுரம் பகுதியில் இடம்பெ ற்ற மக்கள் சந்திப்பில் அண்மையில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இத னைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்.

வவுனியாவில் உள்ள பல கிராமங்களில் வீட்டுத் திட்டம் உள்ளிட்ட பல பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றை தீர்ப்பதற்கு நாம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். இந்த பிரதேச மீள்குடியேற்றம் தொடர்பிலும் நாம் கவனம் செலுத்தி வருகின்றோம்.

நாம் எந்த இனத்திற்கும் எதிரானவர்கள் அல்ல. சகல மக்களையும் ஒன்றிணைத்துச் செயற்பட வேண்டும்.சிங்கள மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல. இந்த மாவட்டத்தின் எல்லையோரங்களில் சிங்கள மக்கள் குடியிருந்தார்கள். அவர்கள் மீள்குடியேற்றம் செய்யப்படுவதற்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக் கவில்லை.

ஆனால் புதிய சிங்களக் குடியேற்றங் களையே நாம் எதிர்க்கிறோம். இது தவிர. இங்கு நடைபெறும் நிகழ்வில் இனிவரும் காலங்களில் இந்து. இஸ்லாம். கத்தோலிக்க. பௌத்த மதங்களினுடைய தலைவர்க ளையும் கட்டாயம் அழைக்க வேண்டும். சகல மதத் தலைவர்களும் இருக்கும் போது அந்த சமூகத்தில் உள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து இணக்கப்பாட்டை ஏற்படுத்த முடியும். எனவே அவர்களையும் அழை யுங்கள் எனத் தெரிவித்துள்ளார். (அ-2)




## குடிநீரை பெறுவதில் சிரமம்

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வேட்டையன் முறிப்பு மாளிகைத் திடல், மினுக்கன் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

குறித்த கிராமங்களில் சில பகுதிகளுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட் டாலும் பல பகுதிகளுக்கு குடிதண்ணீர் வழங் கப்படவில்லை. இந்த விடயம் குறித்து கிராம மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத் திற்குக்கொண்டு சென்றிருந்தபோதும் அது பயனளிக்கவில்லை.

மக்களின் நிலை கருதி தனியார் தொண்டு நிறுவனம் ஒன்று இப்பகுதியில் தண்ணீர் தாங்கி ஒன்று அமைத்துக் கொடுத்துள்ளது. இதேவேளை குறித்த தண்ணீர்த் தாங்கிக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கென குழாய்க்கிணறு ஒன்றும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்தக் கிணற்றுத் தண்ணீர் பயன் பாட்டுக்கு உகந்ததாக இல்லை என்று மக்கள் தெரிவிக்கின்றனர். (அ-2)

# தமிழர் கல்வி 30 வருடங்களாக பலவீனப்படுத்தப்பட்டு வந்துள்ளது

## இ.தொ.கா.வன்னி அமைப்பாளர் கருத்து

(செட்டிகுளம்)

கல்வியின் வளர்ச்சியே தமிழர்களின் எதிர்காலத்தை சுபீட்சமாக்கும் என இல ங்கை தொழிலாளர் காங்கிரஸின் வன்னி மாவட்ட அமைப்பாளர் எஸ். கோவிந்தராஜ் தெரிவித்தார். வவுனியா, செட்டிக்குளம் - நீலியாமோட்டை கிராமத்தில் முன்பள்ளிக் கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்.

வடக்கு, கிழக்கு, மலையக தமிழர்கள் கல்வி யில் தன்னிறைவு பெறுவதற்கு பெற்றோர், புத்திஜீவிகள், சமூகப்பற்றாளர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். அதன மூலமே எமது இனம் சிறந்த பெறுபேற்றை அடையும்.

ஒரு இனம் தனது பூர்வீக இன அடை யாளம், பாரம்பரிய, பண்பாட்டு விழுமி யங்களையும் தான் வாழும் பூர்வீக தாயக மண்வாசனையும் இன வரலாற்றையும் பாதுகாக்கும் பேராயுதமே கல்வியாகும்.

கடந்த முப்பது வருடங்களாக வடக்கு, கிழக்கு தமிழ் மக்களது கல்வியை இல்லாது செய்யவும் பலவீனப்படுத்தவும் கபடத்தன மாகவும் நயவஞ்சகமாகவும் பல காரியங்கள் பேரினவாத அதிகாரவாதிகளால் வெற்றி கரமாக முன்னெடுக்கப்பட்டன. இதனால் எமது மாணவ சமுதாயம் பல்வேறு இன்னல் களுக்கும் சவால்களுக்கும் முகம்கொடுத்தே தனது கல்வியை தொடர்ந்தது.

மழை விட்டாலும் தூவானம் விடவில்லை என்பதைப் போல் இன்றும் வடக்கு, கிழக்கில் பல கல்விக் கூடங்களில் இராணுவம் குடிகொண்டுள்ளது. அத்துடன் பௌதீகவளம், ஆளணி, தேவையான கட்டட வசதி இல்லாது ள்ளது. காலத்திற்கு ஏற்ப கல்வி வளர்ச்சி யினை தமிழ் மாணவர்கள் அடைய முடி யாது பலமான முட்டுக்கட்டைகள் உள்ளன. இவற்றை சமீபத்தில் வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள் புள்ளிவிபர ரீதியாக வெளிப்படுத்தினர். ஆனால், அவையனைத்தும் செவிடன் காதில் ஊதிய சங்கு போன்ற கதையாகியுள்ளது.

எனவே, தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சி அடைய இந்த இனத்தில் பிறந்த ஒவ்வொ ருவரும் தனது பங்களிப்பை செலுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)



# சிறுவர் அரங்கம்

(1086)






## சிறந்த ஆயுதம்!

..."வெறும் பிதற்றல்! நீ ஆபத்தில் சிக்கிக்கொள்ளும்போது உன் மூளை எப்படி வேலை செய்கிறது என்று பார்க்கிறேன்!" என்று அக்பர் கிண்டல் செய்ய, சபையோர் அவருடன் சேர்ந்து பீர்பாலை எள்ளி நகையாடினர்.

"சமயம் வரும்போது நான் கூறியது உண்மை என்று நீங்களே தெரிந்து கொள்வீர்கள்!" என்றார் பீர்பால்.

மறுநாள், அக்பர் சில பிரமுகர்களுடன் நதிக்கரையில் உலாவிக் கொண்டிருந்த போது, பீர்பாலும் உடனிருந்தார். அப்போது, ஒரே கூச்சலும், கூக்குரலும் கேட்க, மக்கள் தலைதெறிக்க ஓடிக்கொண்டிருந்தனர். சக்கரவர்த்தியைக் கண்ட அவர்கள் ஓடோடி



வந்து, "பிரபு! ஆபத்து! அபாயம்! பட்டத்து யானைக்கு திடீரென மதம் பிடித்துவிட்டது.

அது இந்தப் பக்கம்தான் ஓடி வந்து கொண்டிருக்கிறது. நீங்கள் உடனே ஓடி விடுங்கள்!" என்று கூச்சலிட்டனர். அவர்கள் கூறி முடிப்பதற்குள் தொலைவில் மதயானை ஓடி வருவது தெரிந்தது..

உடனே, அக்பர் தன் இடையிலிருந்து வாளை உருவ, கூடியிருந்த அனைவரும் தங்கள் வாள்களை உருவிக் கொண்டனர். ஆனால், மதம்பிடித்த யானையை வாள் கொண்டு சமாளிக்க முடியாது என்று உணரந்ததும், அவர்கள் திக்பிரமை பிடித்து சிலைகளாக நின்றனர். தன்னைப் பெரிய ஆபத்து எதிர்நோக்கியிருக்கிறது என்பதை அக்பரும் உணர்ந்தார்..

வாளினாலோ, ஈட்டியினாலோ யானையை ஒன்றும் செய்ய முடியாது என்று தெரிந்தது. ஆனால் கோழையைப் போல் பயந்து ஓடவும அவருடைய தன்மானம் இடம் தரவில்லை. எல்லாரும் செய்வதறியாது செயலற்று நிற்க, பீர்பால் சட்டென்று அங்கிருந்த ஒரு பூனையைப் பிடித்து யானையின் முதுகில் வீசியெறிந்தார். யானையின் முதுகில் விழுந்ததால் மிரண்ட பூனை, தன் நகங்களினால் யானையைப், பிறாண்டியது.

வலி பொறுக்க முடியாத யானை, தன் தும்பிக்கையினால் பூனையைப் பிடிக்க முயல, அது தப்பித்துக் கீழேயிறங்கி ஓடியது. யானையின் கோபம் முழுவதும் பூனையின் பால் திரும்ப, அது பூனையைத் துரத்திக் கொண்டே எதிர் திசையில் ஓடியது.

தனது பருத்த உடலைத் தூக்கிக்கொண்டு யானையினால் விரைவாக ஓட முடியவில்லை. போக்குக் காட்டிக் கொண்டே ஓடிய பூனை, சாலையோரப் புதர்களின் உள்ளே மறைய, யானை புதர்களுக்குள் புகுந்து அதைத தேடியது. இவ்வாறு, யானையின் கவனம் திசை திரும்ப, அக்பரும் மற்றவர்களும் யானையிடம் சிக்காமல் தப்பித்தனர்.

சற்றுநேரம் சிலையாய் நின்ற அக்பர் தெளிவடைந்தவுடன் பீர்பாலைக் கட்டித் தழுவிக்கொண்டார். "பீர்பால்! சபாஷ்! அறிவுதான் சிறந்த ஆயுதம் என்பதை நிரூபித்துக் காட்டிவிட்டாய்! சூழ்நிலைக்கேற்றவாறு மூளையைப் பயன்படுத்தி சிந்தித்து செயற்படுவதே சாலச்சிறந்தது என்ற உண்மையை எங்களுக்குப் புரிய வைத்து விட்டாய்! நீ சொன்னதே சரி! உன்னைப் போன்ற அறிவாளி அருகிலிருந்தால் எந்த அபாயத்தையும் எதிர்கொள்ளலாம்!" என்று மனதாரப் பாராட்டினார். (முற்றும்)

03.2015
10

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1535 - பனாமாவின் ஆயரான ஃபிறே டொமாஸ் டெபேர்லாங்கா என்பவரின் தலைமையில் வந்த கப்பல் பெருவுக்குச் செல்லும் வழியில் கலாப கசுத் தீவுகளில் தரையிறங்கியது.
- 1629 - இங்கிலாந்தின் முதலாம் சார்ல்ஸ் நாடாளும்மனறத்தைக் கலைத்தான். அடுத்த பதினொரு ஆண்டுகளுக்கு நாடாளுமன்றம் இயங்கவில்லை.
- 1735 - ரஷ்யாவின் முதலாம் பவுல் மன்னனுக்கும் ஈரானின் நாதிர் ஷாவுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி ரஷ்யப் படைகள் அசர்பைஜானின் பக்கூ நகரில் இருந்து வெளியேறின.
- 1801 - பிரித்தானியாவில் முதலாவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இடம்பெற்றது.
- 1804 - லூசியானா அதிகாரபூர்வமாக பிரான்சிடம் இருந்து ஐக்கிய அமெரிக்காவுக்குக் கையளிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.
- 1814 - பிரான்சில் லாவோன் என்ற இடத்தில் நெப்போலியன் பொனபார்ட்டின் படைகள் தோற்கடிக்கப்பட்டன.
- 1876 - அலெக்சாண்டர் கிரகம் பெல் உலகின் முதல் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டார்.
- 1893 - ஐவரி கோஸ்ட் பிரெஞ்சுக் குடியேற்ற நாடாகியது.
- 1902 - அசையும் படம்பிடிகருவியை தோமஸ் எடிசன் கண்டுபிடிக்கவில்லை என அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.
- 1902 - துருக்கியின் டோச்சாங்கிரி என்ற நகர் நில நடுக்கத்தினால் முற்றாக அழிந்தது.
- 1911 - இலங்கையில் ஐந்தாவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடாத்தப்பட்டதில் மொத்தத் தொகையான 4,092,973 இல் யாழ்ப்பாணத்தில் 40,441 பேர் பதிவாகினர்.
- 1922 - கிளர்ச்சியைத் தூண்டினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மகாத்மா காந்தி ஆறாண்டு கால சிறைத்தண்டனை பெற்றார். ஆனாலும் இரண்டாண்டுகளில் சுகவீனம் காரணமாக விடுதலையானார்.
- 1948 - இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.
- 1952 - கியூபாவில் ஃபுல்ஜென்சியோ பட்டீஸ்டா தலைமையில் புரட்சி வெற்றி பெற்றது.
- 1959 - திபெத்தில் பத்தாண்டு கால சீன ஆக்கிரமிப்பை எதிர்த்து லாசா நகரில் நடத்தப்பட்ட போராட்டம் தோல்வியில் முடிந்தது. ஆயிரக்கணக்கானோர் சீன இராணுவத்தினரால் ப்டுகொலை செய்யப்பட்டனர்.
- 1970 - வியட்நாம் போர்: அமெரிக்கத் தளபதி ஏர்னெஸ்ட் மெடினா வியட்நாமில் 1968 இல் நிகழ்த்திய மை லாய் படுகொலைகளுக்காக குற்றம் சாட்டப்பட்டான்.
- 1977 - யுரேனஸ் கோளைச் சுற்றி வளையங்களை வானியலாளர்கள் கண்டுபிடித்தனர்.
- 1982 - கோள்கள் அனைத்தும் சூரியனின் ஒரு பக்கத்தில் வரிசையில் காணப்பட்டன.
- 1990 - ஹெயிட்டியில் இடம்பெறற இராணுவப் புரட்சியில் புரொஸ்பர் அவரில் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.

### பிறப்புக்கள்

- 1933 - பாவலரேறு பெருஞ்சித்திரனார், தமிழறிஞர், தமிழ்த் தேசிய உணர்வாளர் (இ. 1995)
- 1933 - பழ. நெடுமாறன், தமிழ்நாட்டு அரசியல்வாதி, தமிழ்த் தேசிய உணர்வாளர்
- 1957 - ஒசாமா பின்லாடன், இஸ்லாமியப் போராளி

### இறப்புக்கள்

- 1966 - ஃபிரிட்ஸ் சேர்னிக்கே, நோபல் பரிசு பெற்றவர் (பி. 1888)
- **2001 - சி. ஜே. எலியேசர், பேராசிரியர், பிரபல கணிதவியலாளர், தமிழ் அபிமானி (பி. 1918)**
- 2006 - சி. புஷ்பராஜா, ஈழத்தில் மாணவர், இளைஞர் பேரவைகளில் முக்கிய பங்காற்றிய போராளி

## பேராசிரியர் சி.ஜே.எலியேசர்



பேராசிரியர் கிரிஸ்டி ஜெயரத்தினம் எலியேசர், பிரபல கணிதவியலாளரும் தமிழ் ஆர்வலரும் ஆவார். தமிழீழத்தின் உயர் விருதான மாமனிதர விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்.

1948 வெளியிடப்பட்ட இவரது எலியேசர் தேற்றம் இயற்பியலில் இன்றும் பயன்படுத்தப்படும் தேற்றமாகும்.

எலியேசர் அவர்கள் தனது தொடக்கக் கல்வியை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் உயர் கல்வியை கொழும்பு பல்கலைக்கழகக் கல்லூரியிலும் பெற்று, பின்னர் லண்டன் கேம்ப்றிட்ஜ் பல்கலைக் கழகத்தில் கணிதத்தில் கலாநிதி (PhD) பட்டம் பெற்றார்.

1949 இல் புகழ்பெற்ற அறிவியல் அறிஞர் போல் டிராக் (Paul Dirac, 1902-1984) அவர்களின் வழிகாட்டலில் டாக்டர் (DSc) பட்டமும் பெற்றார்..

இவர் பின்னர் கொழும்பு திரும்பி பல்கலைக்கழகத்தில் கணிதத்துறையில் பேராசிரியராகவும் அறிவியல் பீடத்தின் (துறையின்) தலைவராகவும் கடமையாற்றினார். இவர் ஜெனீவா, வியன்னா, மும்பாய் நகரங் களில் ஐக்கிய நாடுகளின் சார்பாக அமைதிக்காக அணு சக்தி என்ற தலைப் பில் சிறப்புரை ஆற்றவும் அழைக்கப்பட்டார்.

1959 இல் மலேயா பல்கலைக்கழகத்தில் கணிதப் பேராசிரியரானார். கோலாலம்பூரில் 1966 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் சுழியம் என்ற தலைப்பில் ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றை படைத்தார். 1968இல் அவுஸ்திரேலியா மெல்பேர்ணிற்குக் குடியேறி லாட்ரோப் (La Trobe) பல்கலைக்கழகத்தில் பயன்முகக் கணிதத்தில் பேராசிரியரானார். அங்கே அவர் இயற்பியல் பீடத்தின் தலைவராகவும் பல்கலைக்கழகத்தின் கூடுதல் துணை-வேந்தராகவும் இருந்தார். 1983 இல் அங்கிருந்து இளைப்பாறினார்.

அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழ் சமூகத்திற்கு இவர் ஆற்றிய பங்கு அளப்பரியது. 1978 ஆம் ஆண்டில் விக்ரோறியா மாநில "இலங்கைத் தமிழ்ச சங்கத்தின்" தொடக்கத் தலைவராக பதவியேற்று இங்கு குடியேறும் தமிழர்களுக்கு ஆணிவேராக உழைத்தது மட்டுமல்லாமல் 1983 ஆம் ஆண்டில் இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலைக்கு உட்படுத்தப் பட்டபோது முழுமூச்சாக அம்மக்களின் விடிவுக்காக உழைத்தவரும் ஆவார். 1984 ஆம் ஆண்டின் அவுஸ்திரேலிய தமிழ் சங்கங்களின் சம்மேளனம் அமைக் கப்பட்டபோது அதன் தலைவராகவும் பதவியேற்றார்.

இவர் அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழ் மக்களுக்காகவும் கணிதத்துறைக்கும் ஆற்றிய சேவையைப் பாராட்டி அவுஸ்திரேலிய அரசின் அதி உயர் Order of Australia விருது 1996 இல் வழங்கப்பட்டது.

1997 ஆம் ஆண்டு தமிழீழத்தின் உயர் விருதான மாமனிதர விருது இப்பேராசிரியருக்கு வழங்கப்பட்டது. முதன்முறையாக இவ்விருது தமிழீ ழத்துக்கு அப்பால் வாழும் ஒரு தமிழருக்கு வழங்கப்பட்டது இங்கு குறிப் பிடத்தக்கதாகும்.

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு

75

**காமெடிக் காட்சிகள்**

ராஜாவாக வரும் ரஜினிக்கு ராதா ஜோடி. சின்னராசுவாக வரும் ரஜினிக்கு நதியா ஜோடி. இரண்டு ஜோடிகளின் கலகல காமெடி, படத்துக்கு மிகப்பெரிய பலமாக இருந்தது. குறிப்பாக சின்னராசு, மாமா மகள் நதியாவிடம் தன்னை வீரனாக காட்டிக் கொள்ள சிலம்பம் கற்றுக்கொள்ளும் காட்சிகள்கூட, நகைச்சுவைப் பின்னணியில் அமைக்கப்பட்டிருந்ததை ரசிகர்கள் வெகுவாக ரசித்தார்கள்.

**இளையராஜா**

இந்தப் படத்துக்கு இளையராஜா பிரமாதமாக இசை அமைத்திருந்தார். எல்லாப் பாடல்களும் இனிமையாய் ஒலித்தன. குறிப்பாக கவிஞர் பொன்னடியான் எழுதிய "எங்கிட்டே மோதாதே, நான் ராஜாதி ராஜனடா" என்ற பாடலும், பிறைசூடன் எழுதிய "மீனம்மா மீனம்மா" என்ற பாடலும் சூப்பர்ஹிட்டாக அமைந்தன. இந்தப் படம் சென்னையில் 150 நாட்கள் ஓடியது. மதுரையில் 181 நாட்கள் ஓடியது.

சென்னையில், தொடர்ந்து 100 நாட்கள் "ஹவுஸ்புல்" காட்சிகளாக நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

**1,22,000 கேசட்டுகள்**

இந்தப் படத்தின் பாடல் கேசட்டுகள், அந்தக் காலகட்டத்தில் விற்பனையில் சாதனை படைத்தன. இலட்சத்தையும் தாண்டி ஒரு லட்சத்து 22 ஆயிரம் கேசட்டுகள் விற்பனையாயின. படத்தின் வெற்றி விழாவுக்கு அன்றைய முதல்-



ரஜினி- பிரபு -படம் தர்மத்தின் தலைவன்

அமைச்சர் கருணாநிதி தலைமை தாங்கி பிளாட்டினம் டிஸ்க்கை வெளியிட்டார்.

**பொன்னடியான். அனுபவம்**

இந்தப் படத்துக்கு பாடல் எழுதிய அனுபவம் பற்றி பொன்னடியான் கூறியதாவது:- ஒருநாள் மாலை, சென்னை கடற்கரையில் நானும், ஆர்.டி.பாஸ்கரும் (இளையராஜாவின் சகோதரர்) அமர்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அப்போது, பாஸ்கர் என்னிடம் ஊட்டியில் ராஜாதிராஜா படப்பிடிப்பு வேகமாக நடந்து கொண்டிருக்கிறது. ரஜினி பாடுவது போல்அமைந்த ஒரு பாடலை உடனே பதிவு செய்து அனுப்ப வேண்டும். அந்தப் பாடலை நீங்கள்தான் எழுதுகிறீர்கள். இதுபற்றி இளையராஜாவிடம் பேசிவிட்டேன் என்றார். மறுநாள், பிரசாத் ஸ்டுடியோவுக்குச்சென்று இளையராஜாவை சந்தித்தேன்.

கதாநாயகன் மிகவும் பயந்த சுபாவம் உடையவன். அவன் காதலி, அவனுக்கு கொஞ்சம் கொஞ்சமாக தைரியம் ஊட்டி வீரனாக்குவாள். அவன் தன் எதிரிகளுடன் மோதி, அவர்களை வீழ்த்தும்போது பாடும் பாடல்தான் இது என்றார், இளையராஜா.

ரஜினி ஸ்டைலில், அவருடைய குணாதிசயங்களையும், சமுதாய கருத்துக்களையும் வைத்து இந்தப் பாடல் வரிகளை அமைக்கலாம் என்றும் கூறினார். உடனே பாடல் எழுதப்பட்டு, அவருடைய சில திருத்தங்களையும் ஏற்று, பாடல் பதிவு செய்யப்பட்டு, அன்றிரவே படப்பிடிப்பு நடக்கும் ஊட்டிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அதுதான், "எங்கிட்டே மோதாதே- நான் ராஜாதி ராஜனடா! வம்புக்கு இழுக்காதே- நான் வீராதி வீரனடா!" என்ற பாடல்.

**ரஜினி பாராட்டு**

பிறகு ஒருநாள், படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தபோது, ரஜினிக்கு என்னை ஆர்.டி.பாஸ்கர் அறிமுகப்படுத்தினார். பல நாட்கள் பழகியது போன்ற பாசத்தோடும், நட்புணர்வோடும், என்னிடம் அன்பு காட்டினார். இசையும், உங்கள் பாடலும் ரசிகர்களைக் கவரும் வகையில் அமைந்திருந்தன என்று மனந்திறந்து பாராட்டினார், இவ்வாறு பொன்னடியான் கூறினார்.

இந்தியாவிலேயே முதன் முறையாக, யானை, முயல், குரங்கு முதலான கார்ட்டூன் படங்களுடன் ("அனிமேஷன்") ரஜினிகாந்த் நடித்தார். ஏவி.எம் தயாரித்த "ராஜா சின்ன ரோஜா" என்ற படத்துக்காக, மிகுந்த பொருட்செலவில் இந்தப் பாடல் காட்சி படமாக்கப்பட்டது. இந்தப்படம் 1989 இல் தயாரிக்கப்பட்டதாகும். கதை-வசனத்தை பஞ்சு அருணாசலம் எழுதினார். எஸ்.பி.முத்துராமன் டைரக்ட் செய்தார். *(தொடரும்)*

# கருவாச்சி காவியம்



## வைரமுத்து- 96

....சோளம் அடிச்ச களம் மாதிரி சிந்திச் செதறி நொறுங்கிக் கெடக்குற பலகையையும் தகரமும் கூரையும் கொஞ்ச நேரத்துக்கு முன்னால எங்க பேரு பொட்டிக் கடைன்னு முழியா முழிக்குதுக.

முத்துக்காமு பாவம்! மூக்குல இருந்த கோபத்தையும் காணோம்.

மூக்கையும் காணோம்.

விழுந்த கடைய நிமித்திக் குடுத்திருங்க.

ஒரு வைர மோதிரம் போட்டுருங்க கண்கலங்காம வச்சிருக்றேன் கனகாம்பரத்த.

பொண்ணு வீடு பாக்க வந்தப்ப அவன் கேட்டது இந்த ரெண்டே ரெண்டுதான். நியாயமாத்தான் தெரியுதுன்னு சரி சொல்லிட்டாரு சுப்பஞ் செட்டியாரு.

மாப்ள! குருவி மாதிரி சேத்த காசவச்சுப் போட்டுக் குடுத்திடறேன் பொட்டிக் கடையை.

தங்கச் சங்கிலி ஒண்ணு எரவல் தாரேங்கிறா பெரியமூக்கி.

பொண்ணு கழுத்துல போட்டு அனுப்புறேன்.

வைர மோதிரம் குடுத்துட்டு வாங்கிக்கிறேன்.

முடிஞ்சு போச்சு கல்யாணம். முடியல பிரச்சனை.


நாலு வருசமா அவளுக்குப் பிள்ளையுமில்ல. வைர மோதிரமும் இல்ல.

ஒரே எடத்துல ஒக்காந்து ஒக்காந்து முள்ளங்கி மாதிரி சிக்குன்னு இருந்த கனகம் ரெண்டே வருசத்துல சொரைக்கா மாதிரி பெருத்து போனா.

ஒடம்பு சொகம் கொறையக் கொறையக் குத்தங்கொரைக பெருசாத் தெரியுமா இல்லையா..? புதுசாப் போட்ட பொட்டிக் கடையில ஏவாரமும் கம்மி.

இரண்டு காதுலயும் பூரான் புகுந்த மாதிரி வைர மோதிரம் வைர மோதிரம்ன்னு அவளக் குத்திக் கொடஞ்சுக்கிட்டேயிருக்கான்.

எங்கப்பன் வச்சுக்கிட்டு ஒண்ணும் வஞ்சகம் பண்ணலேன்னு இவளும் சொல்லிச் சொல்லி பாத்தா.



கொடுக்கும் காம்பும் உள்ள பிராணின்னு அவனச் சொன்னமா இல்லையா இப்பக் காம்பக் கழத்தி வச்சுட்டுக் கொடுக்கு மட்டும் வச்சு அவளக் கொட்டிக்கிட்டேயிருக்கு அந்தப் பிராணி.

பழனிசெட்டிப்பட்டிக்கு அவ அப்பனும் வாரதில்ல.

சொக்கத்தேவன் பட்டிக்கு இவளும் போறதில்ல.

வைர மோதிரத்துக்கு என்னடா வழின்னு யோசிச்சுக் கணக்குப் போட்டுக் காய் நகத்துறான் பய.

அவ சோறு போட்டு வச்சுட்டு அந்தப் பக்கம் திரும்பி ரசத்துல கரண்டி போடுறதுக்குள்ள ஒரு உப்ப அள்ளிக் குழம்புல போட்டுட்டு கைக்கிது கைக்கிதுன்னு கத்திக் கெடுக்கிறான்.

அவன் பண்ணின இந்த மொதக் கூத்துலயே மூச்சுப் பேச்சில்லாமப் போனா அவ.

அது தெளியுமுன்ன ரெண்டாவது கூத்த ஆரம்பிச்சுட்டான்.

ஆடுக உரிக்க உரிக்க கடையிலயே கால் கடுக்க நின்னு கறியும் ஈரலுமா வாங்கிட்டு வந்தான்.

அரைவேக் காட்டுல கொழம்பு மொதல் கொதி கொதிக்க அகப்பைய விட்டு ஈரல மட்டும் எடுத்து வாயில போட்டுத் தின்டுபுட்டு ஈரலக் காணம் ஈரலக் காணம்ன்னு கத்திக் கெடுத்து ஊரக்கூட்டி அவளக் கிறுக்குப் புடிக்க வச்சுப்புட்டான். இத்தன எடக்கு மடக்குப் பண்ணி எடஞ்சல் பண்ணியும் அழுகுறாளே தவிர அவ அசையிறா இல்ல. *(தொடரும்)*

# நாட்டை திருத்துவதற்கு முன்னர் விமல் தனது மனைவியை திருத்த வேண்டும்

**(கொழும்பு)**

**நாட்டை திருத்த முன் விமல் வீரவன்ச தனது மனைவியை திருத்த வேண் டும் என சமூக சேவைகள் மற்றும் நலன்புரி அமைச்சர் பி.ஹரிஸன் தெரிவித் துள் ளார்.**

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கல ந்துகொண்டு கருத்து தெரி விக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பேரணியை நடத்தியவர்களின் இராசி போன்றே ஒவ்வொரு பேர ணிக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ள வில்லை.

ஒரு பேச்சுக்கு சொல்வார்கள் கல் பணிஸில் கல் இல்லை, முதலை பணிஸில் முதலை இல்லை, மீன் பணிஸில் மீன் இல்லை என்று அதேபோன்று தான் மகிந்தவிற்கு சார் பான கூட்டத்திற்கு மகிந்த இல்லை.

நாட்டை திருத்த முன் விமல் அவரின் மனைவியை திருத்த வேண்டும் என நான் கூறுகின் றேன். மனைவியை கண்டிக்கா மல் நாட்டை சீர்படுத்த முற்பட்டால் அனைத்தும் தலைகீழாக மாறிவிடும என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விமல் பழைய பெருமைகளை பேசிக்கொண்டு மக்களை முட்டாளா க்க முடியாது என சமூக சேவைகள் மற் றும் நலன்புரி அமைச்சர் பி.ஹரிஸன் மேலும் தெரிவித்துள்ளார். (3-5)

## இலங்கையரின் கறுப்புப்பணம் சுவிஸிலும் சவுதியிலும்

இலங்கையர்களால் சுவிஸி லும் சவுதியிலும் வைப்புச் செய்யப் பட்டுள்ள இரகசிய கறுப்புப் பணம் தொடர்பில் தகவல்கள் தருமாறு கோரப்படவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடா ளுமன்ற உறுப்பினர் சுஜீவசேன சிங்க இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

மத்தள விமான நிலையம், அம்பாந்தோட்டை துறைமுகம் மற் றும் நுரைச்சோலை அனல் மின்சார மையம் ஆகியவற்றில் இருந்து பெறப்பட்ட பணம் சிலரால் சுவிஸிலும் சவுதியிலும் வைப்புச் செய்யப்பட் டுள்ளன.

இதேவேளை முன்னைய அர சாங்கத்தின் மீது ஊழல்கள் தொடர் பில் சுமார் 2 ஆயிரம் முறைப் பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் இன்னும் 6 மாதங்களுக்குள் முன்னைய அர சாங்கத்தில் மோசடி செய்த முக்கிய மானவர்களின் விபரங்கள் வெளி யிடப்படும் என்றும் சேனசிங்க தெரிவித்துள்ளார். (3-5)

## மைத்திரி பிரதமராக போட்டியிட்டால் ரணிலுக்கு பாரிய சவாலாகிவிடும்

### ரோசி சேனாநாயக்க தெரிவிப்பு

ஜனாதிபதி மைத்திரிபால எதிர்காலத்தில் பிரதமர் பதவிக்காக போட்டியிட்டால், தற்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கு பாரிய சவாலாகிவிடும் என சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோசி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை வானொலி நிகழ்ச்சி ஒன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். நிறைவேற்று அதிகாரத்தை குறைத் தால் பிரதமருக்கும் பாராளுமன்றத்திற்கும் அதிகாரம் கிடைக்கப்படும்.

குறித்த அதிகாரத்தை பாராளுமன்றத்திற்கு வழங்கிய பின்னர் தற் போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பொதுத் தேர்தலில் பிரதம வேட்பாளாராக போட்டியிடவுள்ளதாக அண்மையில் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்திருந்தார்.

அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தது போன்று ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன போட்டியிட்டால் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கு பாரிய சவாலாகி விடும். தற்பொழுது தேசிய அரசாங்கம் அமைப்பது தொடர்பாக சகல ஏற்பாடுகளும் இடம் பெற்று வருகின்றன. அதற்கமைய எதிர்வரும் பொது தேர்தலுக்காக பிரதமர் மற்றும் துணைப் பிரதமர் பதவியை யாருக்கு வழ ங்குவது என்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளதாக ரோசி சேனாநாயக்க தெரிவித்துள்ளார். (3-5)

## மகிழ்ச்சியுடனும் நம்பிக்கையுடனும் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளேன்

### இந்திய பிரதமர் மோடி டுவிட்டரில் பதிவு



இலங்கைக்கும் இந்தியாவுக் கும் இடையிலான பலமான உறவை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் எனது இலங்கை விஜயம் அமை யும் என்று நம்புகிறேன் என இந் திய பிரதமர் நரேந்திர மோடி தெரி வித்துள்ளார்.

இலங்கை விஜயம் குறித்து இந்திய பிரதமர் நரேந்திர மோடி டுவிட்டர் தளத்தில் மேற்கொண் டுள்ள பதிவிலேயே இதனை தெரி வித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்வது தொடர்பில் ஆர்வம் காட்டி வருவ தாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எனது இலங்கை விஜயம் இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புற வினை மேலும் வலுப்படுத்தக் கூடிய வகையில் அமையும். நான் இலங்கை பாராளுமன்றத்தில் உரையாற்றவுள்ளதுடன் மஹா போதி பகுதிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்யவுள்ளேன். மிகவும் மகிழ்ச்சியுடனும் நம்பிக்கையுட னும் நான் இலங்கைக்கு விஜயம் செய்கின்றேன் என்று இந்திய பிர தமர் தனது டுவிட்டர் தளத்தில் பதிவு செய்துள்ளார்.

எதிர்வரும் 13ஆம் திகதி மோடி இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜய த்தை மேற்கொள்ளவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (3-5)

## குழந்தையை தவழ விடுங்கள்

### Health Care மருத்துவ உலகம்

உங்கள் நலம் உங்கள் கைகளில்

அப்பா-அம்மா இருவரும் வேலைக்குப் போகும் அவசரத் தில் ஆலாய்ப் பறந்துகொண்டி ருக்க... விபரம் புரியாத குழந்தை அம்மாவைத் தேடி, தவழ்ந்து போய் காலைப் பிடிக்கும். உடனே, குழந் தையைத் தூக்கி, வோக்கரில் உட்காரவைத்து விடுகிறார்கள். இந்தக் காலத்துப் பெண்கள், தங்கள் வேலைக்குத் தடை இருக் கக் கூடாது என இப்படிச் செய்யும் பெற்றோர்கள், குழந்தையின் முக்கியமான வளர்ச்சி நிலை யைத் தடை செய்துவிடுகிறார்கள்.

அதே போல, "எங்க பப்பு, தவ ழவே இல்லை தெரியுமா? குப்புற விழுந்ததுக்கப்புறம், நேரடியாக உக்காந்துடுச்சு!' என்று பெரு மையாகப் பேசுவார்கள் சில பெற்றோர்கள். அதுவும் பெருமை க்குரிய விடயம் அல்ல கவலைக் குரிய விடயம்.

தவழ்தல் என்பது, குழந்தை யின் வளர்ச்சியில் மிக முக்கிய மான மைல்கல். குழந்தை அதைச் செய்யாமல், அடுத்த கட்டத்துக்குப் போவது சரியானது அல்ல. தவழ் தலைத் தடுத்தால், பின்னாளில் குழந்தைகளின் கற்றல் திறன் மற்றும் ஒருங்கிணைக்கும் திற னில் குறைபாடு ஏற்படும்.

தவழ்தல் என்னும் செயல், குழந்தையின் இடது மற்றும் வலது மூளைப் பகுதிகள் ஒருங் கிணைந்து செயற்பட ஆரம்பிப் பதன் அறிகுறி. இந்தக் காலகட் டத்தில், குழந்தைகள் எழுந்து நட ந்து, வீடு முழுவதும் ஓடி, ஏறி, இற ங்கி எனத் துறுதுறுவென இருக் கும் நிலை.

மூளையின் இட வலப் பகுதி களின் ஒருங்கிணைப்பு என்பது, குழந்தையின் பிற்கால வாழ் க்கைக்கும் மிக அத்தியா வசியமான ஒன்று. அப் போதுதான், குழந்தை எந்த வேலையையுமே நன்கு செய்ய முடியும். படிப்பு என்பது இடது பக்க மூளையின் வேலை. ஏனைய படைப்புத்திறன் எல் லாம் வலதுபக்க மூளை யின் வேலை. எனவே, இர ண்டும் ஒருங்கிணைந்து வேலை செய்வதைப் பொறுத்துதான், குழந் தையின் ஏனைய வளர்ச்சிகள் இருக்கும்.



எனவே, குழந்தைகள், தவழும் பருவத்தில், அவசியம் அவற்றைத் தவழ விட வேண்டும். தவழும் பரு வத்தில் அதைத் தடுத்து, குழந் தையைத் தூக்கி வோக்கரில் போடு வதால், மூளையின் தூண்டு தலை நாம் தடை செய்கிறோம்.

கல்வியில் பின் தங்கி இருக் கும் பிள்ளைகள், தவழ்வதைத் தவற விட்டவர்களாக இருக்கலாம். பெற்றோர்களுககு இது ஓர் அவ சியமான ஆலோசனை.

செயல்திறன் குறைந்த குழந்தை (Clumsy child) தவழாமல் வளர்ந்த குழந் தைகள், பிற்கால த்தில் ஹக்ள மஸி சைல்ட்' என ப்படும் செயற்றி றன் குறை ந்த குழந்தைகளாக உருவாகவும் வாய்ப்பு இருக்கிறது. இவர்களுக்கு ஞாபகமறதி இருக்கும், தன் பொருட் களை ஒழுங்காக வைத்துக்கொள் ளத் தெரியாது. பேனா எடுக்க, பை எடுக்க, லன்ச் பொக்ஸ் எடுக்க என எல்லாவற்றையும் மறப்பார்கள். பெற்றோர் நினைவுபடுத்திக் கொண்டே இருக்க வேண்டும். எதற்கும் எந்தப் பதற்றமும் இருக்காது. இது போன்ற செயற்றிறன் குறை தல் மற்றும் கற்றல் குறைபாடுள்ள குழந்தைகளை, 'ரெமடியல் ரீச்சிங்' எனப்படும் சிறப்புப் பயிற்சி அளிப் பதன் மூலமாக மேம்படுத்த முடியும்.

### குழந்தை வளர்ச்சியின் மைல் கல்கள்

பிரசவத்தின் போது சாதாரண பிரசவமா, அல்லது மிக அதிக நேரம் எடுத்துக்கொண்ட பிரச வமா, குழந்தை வயிற்றுக்குள் ளேயே மலம் கழித்த பிர ச்சினை ஏதும் உள் ளதா, அறுவை சிகி ச்சையா என்பன போன்ற விடயங்கள் முக்கியமானவை.

அடுத்ததாக, குழந்தைகள் பிறந் தவுடனே அழவேண்டும் என்பது கவனிக்கப்படவேண்டிய ஒன்று. ஒருவேளை தாமதமாக அழுதால், எவ்வளவு நேரம் கழித்து அழுதது என்ற விபரத்தைக் குறிக்க வேண் டும். அதன்பிறகு, குழந்தை சாதா ரண வளர்ச்சியுடன் ஆரோக்கிய மாக இருக்கிறதா, உடல்நலப் பிரச்சினைகள் ஏதும் உள்ளனவா என்று பார்க்க வேண்டும். சில குழந்தைகளுக்குப் பிறந்ததும் கடுமையான காய்ச்சல், வலிப்பு போன்றவை வரலாம். அவற்றை யெல்லாம் கவனிக்க வேண்டும்.

அதன் பிறகுதான் குழந்தை யின் வளர்ச்சி நிலைகள் ஆரம் பக்கின்றன. உறுப்புகளின் வளர்ச் சியை 'உள்ளிருந்து வெளி வரை' என்றும் செயற்பாடுகளின் மேம பாட்டை 'தலை முதல் கால் வரை' என்றும் நாங்கள் குறிப்பிடுவோம்.

உள்ளுறுப்புகள் அம்மாவின் வயிற்றுக்குள் குழந்தை இருக் கும்போதே முழுமையான வளர் ச்சி அடைந்துவிடும். வெளியே வந்தபிறகு, கை, கால் போன்ற ஏனைய உறுப்புகள், பெரியவர்க ளுக்கு இருப்பது போன்ற தோற் றத்தில் வளர ஆரம்பிக்கும்.

முதல் 3 மாதங்களில் தலை நிற்பது, 5 மாதங்களுக்குள் குப் புறக் கவிழ்வது, பிறகு உட்கார் வது, முட்டி போட்டு தவழ்வது (நாலு கால் தவழ்தல்), அதன் பின்னர் எழுந்து நிற்பது, நடப்பது, ஓடுவது என்று சாதாரணமான குழந்தைக்கு தலை முதல் கால் வரை வளர்ச்சிகளும் சாதாரண மாக இருக்கும். ஒன்று முதல் 3 வயது வரை குழந்தை மிக துறு துறுப்பாக ஓடி ஆடுவது என்று இருக்க வேண்டும்.

# லசந்த கொலை அறிக்கை புலனாய்வுப் பிரிவிடம்



(கொழும்பு)

**சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை குறித்த அறிக்கை புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.**

மிரிஹான பொலிஸாரும் பயங்கரவாதத் தடைப் பிரிவினரும் கடந்த ஆறு ஆண்டுகளாக இந்த வழக்கு குறித்து விசாரணை நடத்தி வந்தனர்.

விசாரணை அறிக்கைகளை துரித கதியில் ஒப்படைக்குமாறு புலனாய்வுப் பிரிவினர், மிரிஹான பொலிஸார் மற்றும் பயங்கரவாதத் தடைப் பிரிவினருக்கு அறிவித்துள்ளனர்.

கொலை தொடர்பில் முன்னைய விசாரணைகளின் போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளதாக பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

கொலை தொடர்பில் சில தொலைபேசி இலக்கங்களின் ஊடாகவும் விசாரணை நடத்தப்படுகின்றது.

கடந்த 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி ல்சந்த விக்ரமதுங்க கொலை செய்யப்பட்டிருந்தார்.

லசந்த கொலை விசாரணைகள் ஏன் கிடப்பில் போடப்பட்டுள்ளன, மெய்யான குற்றவாளிகள் யார்? என்பதனை அறிந்து கொள்ளும் நோக்கில் விசாரணைகளை பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் புலனாய்வுப் பிரிவினரிடம் அண்மையில் ஒப்படைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (3-5)

# பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்க பரிந்துரைகள்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தவிர்ப்பதற்காக செயல் படையணியின் பரிந்துரைகள் செயற்படுத்தப்படும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றியபோதே ரணில் இதனை தெரிவித்தார். 2013 ஆம் ஆண்டு தம்மால் இந்தப் படையணி உருவாக்கப்பட்டது.இதனையடுத்து குறித்த படையணிபல பரிந்துரைகளை செய்துள்ளது. இதன்படி குறித்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக ரணில் மேலும் தெரிவித்துள்ளார். (3-5)



# 29 புதிய இராஜதந்திரிகள் விரைவில் நியமனமாவர்

(கொழும்பு)

வெளிநாடுகள் பலவற்றுக்கான புதிய இராஜதந்திரிகளை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக வெளிவிவகாரப் பிரதி அமைச்சர் அஜித் பீ பெரேரா தெரிவித்துள்ளார்.

இதற்காக 29 புதிய இராஜதந்திரிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முன்னைய அரசாங்கத்தின் போது அரசியல் ஆதரவுடன் பலருக்கு இராஜதத்திர நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. அவ்வாறான நியமனாங்கள் யாவும் இரத்து செய்யப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 100 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 100 | 80 |
| தக்காளி | 20 | 50 | 100 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 50 |
| கோவா | 30 | 40 | 70 | 60 |
| கரட் | 200 | 80 | 130 | 120 |
| பூசணி | 100 | 60 | 60 | 80 |
| புடோல் | 40 | 50 | 70 | 60 |
| வாழைக்காய் | 100 | 80 | 90 | 70 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 80 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 60 | 80 |
| பாகற்காய் | 150 | 80 | 70 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 40 | 60 | 100 |
| கருணைக் கிழங்கு | — | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 100 | 70 | 70 | 100 |
| லீக்ஸ் | 250 | 160 | 120 | 200 |
| பீற்றூட் | 80 | 40 | — | 80 |
| கறிமிளகாய் | 250 | 140 | 130 | 150 |
| முருங்கைக்காய் | 250 | 300 | — | 400 |
| போஞ்சி | 200 | 100 | 70 | 150 |
| கத்தரிதம்புள்ள | — | 60 | 80 | 80 |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 30 | 40 | 50 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 25-70 | 50 | 50 | 40 |
| இராசவள்ளி | 150 | 120 | 100 | 100 |
| வெங்காயப்பூ | 100 | 100 | — | 160 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 306

இலக்கியா நகுலன்

உன்னிடம் அன்பாக
பேசும் பொய்யான
உலகை விட
உன்னிடம் உரிமையுடன்
பழகும் உள்ளத்தை
நேசி.அதுவே உண்மையான
அன்பு ...

ருக்சி சிவகுமார்




நிறோஜன் கிங்




பிரவின் தாஸ்




மயூரதன் மயூரன்





தர்சன் கவிதா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழர்களும் ஐ.நா.அரங்கேற்றமும்














கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 28 வது கூட்டத்தொடரில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் அதனைப் பிரதிபலித்திருக்கின்றார்.

அது கீழ் கண்டவாறு அமைந்திருந்தது. "நாட்டின் சகல மக்களையும் உள்ளடக்கியதான நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறும் தன்மையுடனான பயணத்தின் மீது நாம் முழுமையான நம்பிக்கை வைத்துள்ளோம். அதனை திருப்திகரமாக முன்னெடுப்பதற்கான நுட்பங்கள் மற்றும் மனித வளங்களைத் தயார்ப்படுத்தி வருகின்றோம்.

ஆனாலும், இந்தப் பயணத்திற்கு சர்வதேச சமூகத்தினரின் அனுபவம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு, ஆலோசனை என்பன அவசியம்.

எமது அரசாங்கம் உலகம் முழுவதிலுமுள்ள பல்வேறு சர்வதேச அமைப்புக்கள் மற்றும் நாடுகளுடன் ஒத்துழைப்புடன் செயற்படவே விரும்புகிறது. இதற்கான எமது அணுகுமுறை பேச்சுவார்த்தைகள், ஒத்துழைப்புக்கள், புரிந்துணர்வு மற்றும் கற்றல் மூலமாக அமையுமே தவிர முரண்பாடாக அமையாது.

இதனடிப்படையில், அரசாங்கம் தென்னாபிரிக்க அரசாங்கத்துடன் கடந்தவாரம் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதுடன், ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளர் பப்லோவுக்கு இலங்கை வருமாறும் அழைப்பு விடுத்துள்ளோம்.

மனித உரிமை சமவாயத்தில் இலங்கை பங்குதாரர் என்ற ரீதியில் அனைத்து பரிந்துரைகளையும் நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்புடன் செயற்படும்.

புதிய அரசாங்கம் பதவியேற்று குறுகிய காலத்துக்குள்ளேயே பல்வேறு தடைகளைத் தாண்ட வேண்டியுள்ளது. நிர்வாகக் கட்டுப்பாடு மற்றும் கடந்த அரசாங்கத்தின் இலவாதமான மனப்பாணமை உள்ளிட்ட விடயங்கள் நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலுக்கு பெரும் சவாலாகவே இருக்கின்றன.

இந்தசவால்களை எதிர்கொண்டு வரலாற்று ரீதியான பயணத்தை அர்ப்பணிப்புடன் முன்னெடுப்பதற்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த முயற்சிக்கு இந்த சபை (மனித உரிமைகள் பேரவை), ஆணையாளர், பங்குதாரர்கள், சர்வதேச அமைப்புக்கள் மற்றும் இலங்கை டயஸ்போராக்கள் (புலம்பெயர் ஈழத் தமிழர்களும், அவர்கள் சார் அமைப்புக்களும்) எம்மீது நம்பிக்கை வைத்து எமது செயற்பாடுகளைப் பலப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கோரிக்கை விடுக்கின்றேன்." மனித உரிமைகள் பேரையில் மங்கள சமரவீர ஆற்றிய மேற்கண்ட உள்ளடக்கங்களைக் கொண்டிருந்த உரை, இலங்கை அரசாங்கத்தினால் மாத்திரம் தயார் செய்யப்பட்டிருக்கின்றது என்ற நிலையைத் தாண்டி அமெரிக்கா உள்ளிட்ட மேற்குநாடுகளில் கைகாட்டல்களுக்கு அமைய எழுதி வாசிக்கப்பட்டிருக்கின்றது.

குறிப்பாக, சர்வதேசத்தோடு ஒத்துழைப்பது, ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளரை நாட்டுக்கு வருமாறு அழைத்தல் மற்றும் புலம்பெயர் தமிழ் மக்களுடன் இணக்கமாக செயற்பட விரும்புவது என்று அந்த உரையில் இனிப்புத் தடவிய பெரும்பகுதி காணப்பட்டது.

மஹிந்த ராஜபக்ச காலத்து அமைச்சர்கள் மேற்குநாடுகளையும், ஐக்கிய நாடுகளையும்; புலம்பெயர் தமிழர்களையும் நோக்கி வைக்கும் குற்றச்சாட்டுக்கள் எதுவும் மங்கள சமரவீரவின் உரையில் இல்லை. இவ்வளவு இணக்கமான அரசாங்கமொன்று இலங்கையில் இருக்கின்றது.

ஆகவே, அனைத்துப்பிரச்சினைகளையும் உள்நாட்டில் பேசித் தீர்ப்போம். அதற்கான அர்ப்பணிப்பு எம்மிடம் இருக்கின்றது என்கிற அறிவித்தலை அந்த உரை பிரதிபலித்திருக்கின்றது.

உண்மையிலேயே மஹிந்த ராஜபக்ச காலத்து உரைகளை விட மங்கள சமரவீரவின் இந்த உரையை தமிழ் மக்கள் பெரும் அச்சுறுத்தலாக உணர வேண்டியுள்ளது.

ஏனெனில், இறுதி மோதல்களின் போது விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதை "பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட்டமை சிறப்பான விடயம்" என்று குறிப்பிட்ட மங்கள சமரவீர, எந்தவொரு இடத்திலும் போர்க்குற்றங்கள் அல்லது மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றது என்ற விடயங்களை குறிப்பிடவில்லை.

அதனை, மிக இலாவகமாகத் தவிர்த்திருந்தார். அந்த உரையினை வெளிப்படையாகப் பார்த்தால் காணப்படும் இனிப்புத் தடவிய பகுதிகளுக்குப் பின்னால் பெரும் விஷமுள்ள பகுதிகள் ஒழித்திருக்கின்றன.

கடநத சில நாட்களுக்கு முன்னர் முன்னணி அரசியல் தலைவரொருவர் ஃபேஸ்புக் நிலைத் தகவலில் சில விடயங்களை எழுதியிருந்தார். அது, மேற்கு நாடொன்றின் தூதுவருடனான உரையாடல்.

"இலங்கையில் ஆட்சிமாற்றமொன்று ஏற்பட்டு புதிய அரசாங்கம் பதவியேற்றிருக்கின்றது. ஆக, அதனை ஓரளவுக்கு விட்டுப் பிடிக்க வேண்டிய தேவை எமக்கு (மேற்கு நாடுகளுக்கு) உள்ளது.

ஆனால், தமிழ் மக்கள் தொடர்ந்தும் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அதன்னை தமிழ்த் தலைமைகள் முன்னின்று நடத்த வேண்டும்..." என்றிருக்கின்றார் அந்த தூதுவர்.

தமிழ் மக்கள் போராடிக் கொண்டிருக்க வேண்டும் என்கிற விடயத்துக்குப் பின்னால் நியாயமான காரணங்கள் இல்லாமல் தமிழ் மக்களை கருவிகளாக கையாளும் தந்திரம் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. அந்த அரசியல் தலைவரின் இறுதி வரிகளும் அதையே வெளிக்காட்டியிருந்தது.

ஆட்சி மாற்றமொன்று ஏற்பட்டு தமக்குச் சார்பான அரசாங்கம் இலங்கையில் இருந்தாலும், அந்த அரசாங்கம் தன்னுடைய கட்டுப் பாட்டுக்குளிருந்து மீறும் தருணங்கள் வரலாம். அதனைக் கையாள்வதற்கான மீண்டும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை முன்வைக்கலாம் என்பது மேற்குநாடுகளின் காலம் காலமான உத்தி.

அப்படிப்பட்டவர்கள் எமக்கான தீர்வினைப் பெற்றுத் தந்து விடுவார்கள் என்று நம்புவது எவ்வளவு அபத்தமானது. அதனையே, ஐக்கிய நாடுகளும், மனித உரிமைகள் பேரவை அமர்வுகளும் தொடர்ந்தும் பிரதிபலித்து வருகின்றன.

இப்படியான போக்குள்ள அனைத்துத் தரப்புக்களையும் எதிர்கொண்டு வெற்றிகரமாக கையாள்வது தொடர்பில் பெரும் அக்கறையோடு இருக்க வேண்டியது தமிழ் மக்களின் அவசியம். இல்லையென்றால், சர்வதேச அரங்காற்றுகைக்குள் அடிபட்டு ஆணி வேர் பிடுக்கப்பட்டு தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக தூக்கி எறியப்படுவார்கள்.

-மிரர்- (முற்றும்)

# கூட்டமைப்பினர் ஒற்றையாட்சிக்கு எதிரெனில் சம்பந்தனின் உருவப்பொம்மை ஏன் எரிக்கப்பட்டது

## சமுர்த்தி அமைச்சர் சஜித் பிரேமதாச கேள்வி



(கொழும்பு)

**தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஒற்றையாட்சிக்கு எதிரானதாயின் இங்கிலாந்தில் உள்ள விடுதலைப்புலிகளுக்கு சார்பானவர்கள் இரா. சம்பந்தனதும் சுமந்திரனதும் உருவப் பொம்மைகளை ஏன் எரித்தனர் என வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சர் சஜித் பிரேமதாச கேள்வியெழுப்பியுள்ளார்.**

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாட்டைப் பிளவு படுத்தவோ வேறு இராஜ்ஜியத்தை உருவாக்கவோ முன்வராது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சர் சஜித் பிரேமதாசவின் நிதியுதவியினால் முல்கிரிகல தேர்தல் தொகுதியில் அமைக்கப்பட்ட ஹதுகல விகாரையின் கட்டடமொன்றை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் அங்கு கருத்து தெரிவிக்கையில்.

இன, மத, சாதி வேறுபாடுகளை மறந்து அனைவரையும் சமமாக மதிக்க வேண்டும் என்பதே புத்தபெருமானின் போதனையாகும். பௌத்த தர்மத்தினைக் கடைப்பிடிப்பவர்களில் சிறு தொகையானோர் தேசப்பற்றுள்ளவர்கள் •என தெரிவித்து நாட்டில் வாழும் இனங்களுக்கிடையில் விரிசலை ஏற்படுத்த முனைகின்றனர்.

இனங்களுக்கிடையில் பிரிவினையை ஏற்படுத்தாமல் ஐக்கியத்தை ஏற்படுத்துவதே பௌத்த தர்மத்தின் போதனை. இதுவே மைத்திரி ஆட்சியின் முக்கிய இலக்காகும்.

அத்தோடு அண்மைக்காலங்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆதரவளித்தமை தொடர்பில் பல்வேறு போலியான கருத்துக்கள் பரப்பப்பட்டன. எனினும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

இலங்கை ஒரு ஒன்றுபட்ட நாடாகும். இதனை உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது. இதே வேளை அண்மையில் இங்கிலாந்திலுள்ள விடுதலைப்புலிகள் அமைப்பை சேர்ந்தவர்கள் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோரின் உருவப்படங்களை எரித்தனர். இங்கிலாந்தில் உள்ள புலம்பெயர்ந்தவர்கள் ஏன் வடக்கு தலைவர்களின் உருவப்பொம்மையை எரிக்க வேண்டும்? இது எம்மிடமுள்ள பாரிய கேள்வியாகும்.

இதனூடாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஒற்றையாட்சிக் கொள்கைக்கு எதிரானவர்கள் அல்ல என்பது தெளிவாகின்றது. இலங்கையை பிளவுக்குட்படுத்தி வேறு இராஜ்ஜியத்தை அமைக்க கூட்டமைப்பு ஒரு போதும் முயற்சிக்காது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது தமிழர்களுக்கு நாட்டில் சம அந்தஸ்துடன் வாழக் கூடிய வரப்பிரசாதத்தை பெற்றுக்கொடுக்கும் பயணத்திலேயே உள்ளது.

எனவே அனைத்து இனத்தவர்களையும் சமமாக மதிக்கக் கூடிய நாட்டை உருவாக்குவதே இலங்கை அரசியல் அமைப்பின் பிரதான இலக்காகும். எனவே இதற்கு எதிராக சில தேசப்பற்று என்ற நாமத்துடன் நாட்டைப் பிளவு படுத்தும் நிகழ்ச்சி நிரலையே செயற்படுத்த முனைகின்றனர் என அவர் மேலும் கூறியுள்ளார். (3-5)

# மகிந்தவின் பாதையை ரணில் பின்பற்றினால் மீண்டும் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவோம்

## அத்துரலிய ரத்ன தேரர் சூளுரை



(கொழும்பு)

மக்களின் எதிர்பார்ப்புக்கள் தேசிய அரசாங்கத்தின் மூலம் நிவர்த்தி செய்யப்படும் என்ற காரணத்தினாலேயே தேசிய அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவித்தோம். பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் மகிந்த ராஜபக்ஷவின் பாதையை பின்தொடர்வாராயின் மீண்டும் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவோம் என தூய்மைக்கான நாளைய அமைப்பின் தலைவரும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பிரதித் தலைவருமான அத்துரலியே ரத்ன தேரர் சூளுரைத்துள்ளார்.

தேசிய அரசாங்கத்தின் மீதும் விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில் தேசிய அரசின் நம்பகத்தன்மை தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், மக்களின் எதிர்பார்ப்புக்களும் நோக்கமும் நாட்டில் நல்லாட்சி உருவாக்கப்பட வேண்டும் என்பதே ஆகும்.

எனினும் யுத்த வெற்றிக்கதைகளும் போலியான அபிவிருத்தி கதைகளும் மக்களை கட்டிப்போட்டு விட்டன. இவற்றில் இருந்து மக்களை மீட்டெடுக்கவும் பயணித்துக் கொண்டிருந்த சர்வாதிகார ஆட்சியினை மாற்றியமைக்கவும் நாம் அரசில் இருந்து வெளியேறி தேசிய அரசில் கைகோர்த்தோம். நாம் தேசிய அரசாங்கத்தினை அமைத்த நாளில் இருந்து நூறு நாட்களில் அத்தியாவசிய மாற்றங்களை ஏற்படுத்துவதில் தெளிவாக இருக்கின்றோம். அதே போல் இனவாத அரசியல் பாதை இனி இலங்கைக்கு அவசியமற்றது.

என்வே மூவின மக்களின் ஆதரவுடனும் தேசிய அரசாங்கத்தை கொண்டு செல்ல எமது முழுமையான பங்களிப்பினையும் செய்து கொண்டிருக்கின்றோம். நூறு நாட்களில் தேர்தல் முறைமையில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும். விகிதாசார முறைமையினை மாற்றி சாதகமானதொரு முறைமையினை அரசு கொண்டு வர வேண்டும்.

வெறுமனே அதிகாரப் பகிர்வு மற்றும் 17 ஆவது திருத்தத்தினை மட்டும் அமுல்படுத்துவது பெரியளவில் எவ்வித மாற்றத்தினையும் ஏற்படுத்திவிடப் போவதில்லை. எனவே பொதுத் தேர்தலுக்கு செல்ல முன்னர் தேர்தல் முறைமையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். அதன் பின்னர் தனிக்கட்சி ஆட்சியமைப்பது தொடர்பாக சிந்திக்கலாம்.

அதேபோல் ஐக்கிய தேசியக் கட்சியினை அதிகாரத்தில் அமர்த்தவோ அல்லது ரணில் விக்ரமசிங்கவை பிரதமராக்கவோ நாம் முயற்சிக்கவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ செய்த தவறினை ரணில் விக்கிரமசிங்கவும் விடக்கூடாது. அதே தவறுகள் இந்த கட்சியிலும் இடம்பெறுமாயின் நாம் இவர்களையும் வீழ்த்தி புதிய அரசாங்கத்தினை உருவாக்குவோம் எனவும் அவர் குறிப்பிட்டார். (3-5)

# இன்று ஒரு தகவல்

## வேலை தேடும் வேலை

வேலை என்பதில் எந்த வேறுபாடும் இல்லை. இந்த வேலை உயர்ந்தது. இந்த வேலை தாழ்ந்தது. இதைச் செய்வது அவமரியாதை அப்படி என்பதே கிடையாது. வேலை என்றால் அது வேலை தான். வேலைகளில் வேறுபாடு பார்ப்பதற்கு அவசியம் இல்லை. எங்களது படிப்பிற்கும் தகுதிக்கும் ஏற்ற வேலை கிடைக்கவில்லையே என்று அலைவதைவிட ஏதாவதொரு வேலை செய்து தற்காலிகமான தேவைகளை நிவர்த்தி செய்வது நல்லது. தகுதியான வேலை கிடைக்கும் போது கிடைக்கட்டுமே.

இப்போது பாருங்களேன் ஒரு வரலாற்றுச் சம்பவம், லியோ டால்ஸ்டாய், ரஷ்ய நாட்டினுடைய ஞானி, தத்துவ மேதை என்று போற்றப்படுகிறவர். ஒரு சிறந்த நூலாசிரியர். தன்னுடைய எழுத்துத் தொழிலை வைத்துத்தான் பிழைக்க வேண்டும் என்று அவர் நினைப்பதில்லை. எழுதுவதை தவிர ஏனைய நேரத்தில் வயலில் இறங்கி வேலை செய்வாராம். ஏனைய சிறு சிறு வேலைகளை செய்வாராம்.

ஒரு தடவை அவர் ரயில்வே நிலையத்திற்கு போய் யாரையோ பார்ப்பதற்காக நின்றிருந்தார். அவரது தோற்றத்தை பார்த்தால் ஒரு கூலிக்காரன் மாதிரி இருந்திருக்கு. ரயில் நிலையத்தில் இவரை கைதட்டி ஒரு பெண்மணி கூப்பிட்டாங்களாம். பின்பு அவரை பார்த்து சென்னார் ''ஐயா, ரயில் புறப்படும் நேரம் வந்து விட்டது. பக்கத்திலுள்ள உணவு விடுதிக்கு என்னுடைய கணவர் சாப்பிட போயிருக்கிறார். இன்னும் திரும்பி வரவில்லை. ரயில் புறப்பட்டு விடும் போலிருக்கு. தயவு செய்து அந்த உணவு விடுதிக்கு போய் அவரைக் கூட்டிக்கொண்டு வர முடியுமா என்றார்.

''அவரைப்பற்றி அடையாளம் எல்லாம் சொல்கிறேன். இதை நீங்கள் செய்து தந்தீங்கள் என்றால் அதற்கு தகுந்த கூலி கொடுப்பேன்'' அப்படி என்றாராம்.

உடனே அந்த வேலையை தட்டாமல் அவர் போயிருக்கிறார். அந்த விடுதியில் சாப்பிட்டுக்கொண்டிருந்த அந்த நபரை இவர் அடையாளம் கண்டு கொண்டார். அவரை கூட்டிக்கொண்டும் வந்து விட்டாராம். அவரது லக்கேஜ்சையும் இவரே தூக்கி வந்தாராம்.

நல்லவேளை ரயில் புறப்படுவதற்கு முன்னர் தன்னுடைய கணவரை கூட்டிக்கொண்டு வந்து விட்டார் என்று அந்த அம்மாவுக்கு ஒரே மகிழ்ச்சி. உடனே அந்த அம்மா டால்ஸ்டாய் செய்த அந்த வேலைக்காக ஒரு சிறுதொகையை கூலியாகக் கொடுத்தார். டால்ஸ்டாய் அதைப்பெற்றுக்கொண்டார்.

இதை கவனித்துக்கொண்டிருந்த அவர் கணவர் என்னவென்று விபரம் கேட்டார். அந்த பெண்மணி நடந்தது எல்லாம் சொன்னார். அப்போது அவர் சொன்னார், நீ கூலிக்காரன் என்று நினைத்திருக்கிறது சாதாரண ஆள் இல்லையம்மா. அவர் மிகப்பெரிய எழுத்தாளர் டால்ஸ்டாய். இப்படி என்று சொன்னவுடனே அந்த அம்மாவுக்கு மனதிற்குள் பயம் வந்து விட்டது.

ஐயோ! இவ்வளவு பெரிய மனிதரைப்போய் யார் என்று தெரியாமல் வேலை வாங்கி விட்டோமே என்று பதறினார். என்னை மன்னித்துவிடுங்கள் என்று மன்னிப்பு கேட்டார்களாம். அப்போது டால்ஸ்டாய் சிரித்துக்கொண்டே சொன்னாராம் ''அம்மா என்னை கூலிக்காரராக நீங்கள் நினைத்தது பற்றி எனக்கொன்றும் வருத்தமில்லை. எந்த வேலையும் இழிவானது இல்லை. ஆனால் நான் தான் உங்களை கூலிக்காரராக நினைத்து அந்த சம்பவத்தைக் கொடுத்தேன். இப்பொழுது நீங்கள் டால்ஸ்டாய்ன்னு தெரிந்து போய்விட்டது. அதனால் அந்தப் பணத்தை திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுவிடாதீர்கள். அப்படியென்று நகைச்சுவையாகச் சொன்னாராம். இந்த மனோபாவம் வந்துவிட்டால் இந்த வேலை பெரிது, இந்த வேலை சிறிது, இந்த வேலை கேவலம், அந்த வேலைதான் மதிப்பு அப்படி என்கின்ற தேவையில்லாத மனோபாவம் நமக்கு வேண்டியிருக்காது.

ஏதாவது ஒரு வேலையைச் செய்து எங்களுடைய தேவைகளை பூர்த்தி செய்துகொள்ளலாம் என்கின்ற மனோபாவத்தை எல்லோரும் ஏற்படுத்திக்கொள்ளலாம் அல்லவா.

இந்த மனோபாவத்தை வளர்த்துக்கொள்ளாமல் சிலபேர் இருக்கின்றார்கள். எப்படியாவது அடுத்தவர்கள் தலையில் தடவி அதன் மூலமாக வாழ்ந்து விடலாம் என்ற மாதிரி சிலபேர் இருக்கின்றார்கள். இப்ப பாருங்களேன், ஒருத்தர் வந்தார். அவருக்கு தலைமுடி ரொம்ப இருந்தது. அவருக்கு தலைமுடி வெட்ட வேண்டுமென்ற ஆசை. அந்த தெருவில் ஒரு பையன் விளையாடிக் கொண்டு இருந்தான். அவனைக் கூப்பிட்டார். இங்கே வாருங்கள். உனக்கு முடிவெட்ட வேண்டுமென்று ஆசை இருக்கா என்றார்? அவன் ஆமாம் அப்படி என்றான். சரி என்னோடு சலூனுக்கு வா என்றார். சலூனுக்குப் போய் அந்த சலூன்காரனிடம் சொன்னார். முதலில் எனக்கு முடிவெட்டி விடுங்கள். அதற்குப் பின்னர் பையனுக்கு முடிவெட்டிவிடுங்கள். அவருக்கு முடிவெட்டியாச்சு. பையனுக்கு முடியை வெட்டிக் கொண்டிருங்க. நான் பக்கத்திலுள்ள கடைக்கு போய் விட்டு வந்திடுவேன் என்றாராம். இப்படிச் சொல்விட்டு அவர் போய் விட்டார். பையனுக்கு முடிவெட்டி முடிந்தது. ஆனால் போன வரைக் காணவில்லை. அந்த முடிவெட்டுகிறவர் என்ன நினைத்திருக்கின்றார் என்றால்? அவர் அப்பா என்றும் இவன் அவருடைய பையன் என்று நினைத்திருக்கின்றார். உடனே உங்கள் அப்பா எங்கே என்று கேட்டிருக்கிறார். அப்பாவா? அவர் எனக்கு அப்பா இல்லை. தெருவிலே விளையாடிக்கொண்டிருந்த என்னிடம் முடிவெட்டணுமா என்று கேட்டார். ஆமாம் என்றேன். என்னைக் கொண்டு வந்து உட்கார வைத்துவிட்டு அவர் முடிவெட்டிக்கொண்டு போய்விட்டார் அப்படி என்றானாம். அந்த முடிவெட்டும் தோழர் என்னவாகியிருப்பார் என்று பாருங்கள்.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

# சமஸ்டி அந்தஸ்து ஆட்சேபிக்க முடியாதது

**சமஸ்டி அந்தஸ்து ஆட்சேபிக்க முடியாதது என்று நாங்கள் இயக்கம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு மின்னஞ்சலொன்றை அனுப்பி வைத்துள்ளது.**

**"இனப்படுகொலைக்கு பரிகார நீதியையும் அரசியல் தீர்வுக்கு பொதுஜன வாக்கெடுப்பையும் கோருகின்றோம் என்ற தலைப்பில் கடந்த 2 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்த மின்னஞ்சலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,**



"மனித உரிமைகளை பாதுகாத்தல், ஊக்குவித்தல், அனுசரித்து நடந்துகொள்ளுதல் தொடர்பில் சர்வதேச ரீதியிலும் உள்நாட்டிலும் அதிகளவிலான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகின்ற போதிலும் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமை பற்றிய உலகப் பிரகடனங்கள் மீதான பாரிய மீறுகைகள், அடிப்படைச் சுதந்திரங்களுக்கான உலக மதிப்பை பரிசுத்தமாக மேம்படுத்தும் கடப்பாடுகளில் இலங்கை அரசு தொடர்ச்சியாக தவறிழைத்தே வந்திருக்கின்றது- வருகின்றது.

சமகாலத்திலும் கூட, இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன. இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டுள்ள, பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற மக்கள், அச்சம்பவங்களை வெளி உலகுக்கு பகிரங்கப்படுத்த முனைகின்றனர்.

ஆனால், இலங்கையில் இடம்பெற்ற மனித குலப்படுகொலைகள், மனிதத்துவத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் கேள்விக்குட்படுத்த முடியாத ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ள போதிலும் கூட, "இலங்கை அரசாங்கம் மீது சர்வதேச விசாரணை பொறிமுறையை ஏன் நடைமுறைப்படுத்த முடியவில்லை?" என்ற கேள்வி பெரும் உறுத்தலாக தொக்கி நிற்கின்றது.

இதனால், புதிய சாட்சியங்கள் எங்கே சென்று முறையிடுவது? யாரிடம் நீதி கேட்பது? எனும் கலக்கத்தில் மனிதத்துவத்துக்கு எதிரான குற்றங்கள், சித்திரவதைகள், படுகொலைகள், வன்முறைகள் தொடர்பில் பேசுவதற்கு முன் உந்தப்படுகிறார்கள் இல்லை. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கால ஒத்திவைப்புகள் தமிழ்மொழி பேசும் மக்களின் எஞ்சிய வாழ்க்கையை, நம்பிக்கையீனங்களாலும் ஏமாற்றங்களாலும் இட்டு நிரப்பிக்கொண்டிருக்கின்றது.

"இலங்கையில் மாறி வரும் நிலைமைகளில் ஐ.நா. விசாரணை அறிக்கையை காலநீடிப்புச் செய்வது, அறிக்கையை பலப்படுத்தும் வகையில் மேலும் ஆதாரங்கள் கிடைக்கத் துணைபுரியும்" என்று கூறுவது, புதிய சாட்சியங்களின் தன்முனைப்பு உந்துதலை கட்டுப்படுத்தும் மழுங்கடிக்கும் செயலும் இலங்கை அரசுக்கு பொறுப்புக்கூறல்களிலிருந்து தப்பிப்பிழைத்திருப்பதற்கு நம்பிக்கையுடன் கூடிய நல்லபல வாய்ப்புகளை வழங்கும் செயலும் ஆகும்.

இந்த காலநீடிப்பு, "விசாரணையையும் விசாரணை தொடர்பிலான அறிக்கையையும் நீர்த்துப்போகச் செய்யும்" எனும் ஐயத்தையும் அச்சத்தையும் தமிழ்மொழி பேசும் மக்களை ஆக்கிரமிப்புச் செய்துள்ள சமவேளையில், இலங்கை அரசுக்கு தமிழின அழிப்புக்கு மறுபடியும் மறுபடியும் ஊக்குவிப்பையும் மகிழ்ச்சியையும் பரிபாலனம் செய்துள்ளது.

"ஐ.நா. சபையும் அதன் நிபுணர் குழுவும் இலங்கைக்குள் வந்து அரச வன்முறைகளினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை சந்தித்து வாக்குமூலங்களை பதிவு செய்யலாம்" என்று, இன்று வரையில் இலங்கையின் புதிய அரசு மனம் ஒப்பி கூறாத நிலையில், "முனைய அரசாங்கத்தைப் போலல்லாது இலங்கையின் புதிய அரசாங்கம் மனித உரிமைகள் குறித்த பல விடயங் களில் ஒத்துழைப்பு வழங்க முன் வந்துள்ளதாக" ஐ.நா. கூறுவது, இலங்கையின் புதிய அரசாங்கத்தை தக்கவைப்பதற்காக எவ்வளவு விட்டுக்கொடுப்புகளையும் இலகுபடுத்தல்களையும் செய்வதற்கு தாம் தயார் என்பதான செய்தியையே வெளிப்படுத்துகின்றது.

மனித உரிமைகள் பற்றி பேசுவோர், சமாதானம் குறித்து கவலைகொள்வோர், உலக அமைதிக்காக தமது வாழ்நாளை அர்ப்பணம் செய்தோர் இலங்கையில் நடந்தது, நடைபெற்றுக் கொண்டிருப்பது இருபத்தோராம் நூற்றாண்டின் கட்டமைக்கப்பட்ட மாபெரும் "இனப்படுகொலை" என்றே உறுதி செய்கிறார்கள்.

மாறாக, உலகத்தினுடைய மொத்த மனச்சாட்சியையும் உலுக்கிப்போட்டிருக்கும் இலங்கையில் இடம்பெற்றுள்ள மானுடப்பேரவலத்துக்கெல்லாம் கொடுக்கவேண்டிய அக்கறைகள், செய்யப்படவேண்டிய மீட்பு முயற்சிகள் குறித்து, ஐ.நா. சபை காட்டும் அசிரத்தை, வன்முறைகள், படுகொலைகள், மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டுள்ள உலக சமூகங்கள் எல்லாம் "பொதுநீதியை" பெற்றுக்கொள்ளும் சர்வதேச வழிமுறையை கேள்விக்குற்படுத்துகிறது.

தமிழ்மொழி பேசும் மக்கள் தமது வாழ்வுரிமை பிரச்சினைகள் தொடர்பிலும் தமது இருப்புக்கான போராட்டம் தொடர்பிலும் நியாயங்களை சர்வதேச சமூகத்திடம் ஒப்புவித்த போதெல்லாம் "இலங்கை அரசை கண்காணித்துக் கொண்டிருக்கின்றோம், இலங்கை அரசை அவதானித்துக் கொண்டிருக்கின்றோம்." என்றே சர்வதேச சமூகம் பிரசங்கம் செய்து வந்திருக்கின்றது.

"கண்காணிப்பு-அவதானிப்பு" கையாலாகாத்தனத்தின் நாகரிக முலாம் பூசப்பட்ட இந்தச்சொல்லாடல்களே, இலங்கையில் தமிழ் பேசும் மக்களுக்கு "குழிப்படுக்கையையும் மண் போர்வையையும்" பரிசளித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தால் நிகழ்த்தப்பட்ட "இனப்படுகொலைகள்" தொடர்பாகவும் மனிதத்துவத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாகவும் .போர்க்கால மீறல்கள் தொடர்பாகவும் ஐ.நா.வின் நெறியாள்கையுடன் கூடிய அனைத்துலக விசாரணை சுயாதீனமாக நடைபெறுதல் வேண்டும். உள்ளக விசாரணைகளில் சுத்தமாக நம்பிக்கையிழந்து அதிருப்தியடைந்துள்ள நிலையில், நீதி வழங்குவதை உறுதிப்படுத்தும் சர்வதேச வழிமுறைகளை ஐ.நா. கதவடைப்புச்செய்து வெறுப்பேற்ற மாட்டாது எனும் குறைந்தபட்ச நம்பிக்கையுடனேயே தமிழ்மொழி பேசும் மக்கள் சீவித்திருக்கிறார்கள் என்பதை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கவனத்துக்கு சுட்டிக்காட்டுகின்றோம்.

இயற்கை வளங்களில் முக்கியமானதும் உயிரினங்கள் வாழ்வதற்கு அத்தியாவசியமானதுமான நிலவளம், இந்த நிலவளம் இன்றேல், ஒரு உயிர்கூட வாழ முடியாது எனும் நிலவரம் உள்ளபோது, இலங்கை ஆட்சியாளர்களால் தமிழ்மொழி பேசும் மக்களின் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு கொண்டிருக்கின்றன. ஊசலாடிக்கொண்டிருக்கும் தமது இருப்பை தக்கவைப்பதற்காக தமிழ்மொழி பேசும் மக்கள் நித்தமும் உழன்றுகொண்டிருக்கின்றார்கள். இம்மக்களுக்கு "தக்கன பிழைக்கும் வாழ்க்கையே" பெரும் போராட்டமாக மாறியிருக்கிறது.

தாங்கள் பிறந்து வாழ்ந்து வளப்படுத்திய நிலத்தின் பாதுகாப்புக்கும் அந்த நிலத்தில் உயிர்வாழ்வதற்கு தேவையான சீவனோபாய செயற்பாடுகளுக்கும் நீண்டகால தனி மனித விருத்திக்கும் பாதுகாப்புக்கும் உத்தரவாதமற்ற அச்சுறுத்தலான சூழலில், குறித்த விசாரணை அறிக்கையின் தீர்ப்பானது.

"இனப்படுகொலைக்கு பரிகார நீதி, அரசியல் தீர்வுக்கு பொதுஜன வாக்கெடுப்பு" என்றவாறு அமைய வேண்டும் என்று, மாபெரும் "இன அழிப்புக்கு" உள்ளான மக்களின் ஒருமித்த குரலாக கோருகின்றோம். இவ்வாறு அமைய அனைத்துலக சமூகத்துக்கு தொடர்ந்தும் அழுத்தம் கொடுப்போம் என்பதையும் நீதி எட்டப்படும் வரையில் இந்த அழுத்தம் தொடரும் என்பதையும் ஐ.நா சபையின் அங்கத்துவ நாடுகளுக்கும் பொதுநலவாய அமைப்பின் உறுப்பு நாட்டுத் தலைவர்களுக்கும் இவர்கள் எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கை அரசாங்கத்துக்கும் நினைவுபடுத்துகின்றோம்.

இராணுவ பாதுகாப்பின்மையும், அதனால் உண்டாகிய பீதியும் பொதுவான இராணுவ பாதுகாப்பு அவசியம் தேவை என்ற எண்ணமும் கனடா, அவுஸ்திரேலியா நாடுகளுக்கு சமஸடி ஆட்சிக்கு காரணமாக அமைந்தது போலவே, தமிழ்மொழி பேசும் ஈழத்தின் மக்களுக்கும் அவசியமும் தேவையும் எழுந்துள்ளது.

ஆனால், சர்வதேச அரங்கில் இலங்கை அரசானது, மற்றைய அரசுகளோடு செய்யும் ஒப்பந்தங்களால் தமிழ்மொழி பேசும் மக்களின் தனி அதிகாரம் பற்றிய சமஸடி ஆட்சி அந்தஸ்தை கட்டுப்படுத்த முயல்கிறது.

இத்தகைய ஒப்பந்தங்களால் இலங்கை அரசு தன்னைச் சட்டபூர்வமாக கட்டுப்படுத்திக் கொள்ள முடியுமே தவிர, மனித உரிமை பற்றிய உலகப்பிரகடனத்தை கட்டுப்படுத்த முடியாது.

அதேவேளை தனி அதிகாரம் பற்றிய சமஸடி ஆட்சி அந்தஸ்து குறித்த தமிழ்மொழி பேசும் மக்களின் பொது அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டிய காரிய பூர்வமான, தார்மீகமுறையிலான கடப்பாட்டிலிருந்து வழுவி, ஐக்கிய நாடுகள் சபை தவறிழைக்க முடியாது.

இலங்கை, தமிழகம், புலம்பெயர் நாடுகளிலுள்ள பேராசிரியர்கள், சட்டவாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், படைப்பாளிகள், ஊடகவியலாளர்கள், அரசியல் - மனித உரிமை செயற்பாட்டாளர்கள், கல்வியாளர்கள், புத்திஜீவிகள் பலரை மதிஉரைஞர் குழுமமாகக் கொண்டு, வடக்கு கிழக்கில் செயற்பாட்டு வலையமைப்பைக் கொண்டுள்ள, பல்கலைக்கழக - உயர்கல்வி மாணவர்கள், சிவில் சமூக மனித உரிமை செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், முன்னாள் போராளிகள், சமூக ஆர்வலர்கள் உறுப்புரிமை பெறும் மாற்று அரசியலுக்கான உந்துசக்தி இயக்கமாகிய "நாங்கள்" இயக்கத்தினர் வலியுறுத்துகின்றோம்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இணையம்**

# ஈராக்கின் கலாசார அடையாளங்கள் அழிக்கப்படுவதை தடுக்க வேண்டும்

## உலக நாடுகளுக்கு பான் கீ மூன் அவசர வேண்டுகோள்



**(நியூயோர்க்)**

**ஈராக்கின் முக்கியமான கலாசார அடையாளங்களாக இருக்கும் இடங்களையும், தொல்லியல் பொருட்களையும் நினைவுச் சின்னங்களையும் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் அழிப்பதில் ஈடுபட்டு வருகின்றனர். இதை தடுக்க வேண்டும் என ஐ.நா. தலைவர் பான் கீ மூன் உலக நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.**

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் நமது புராதன கலாசார இடங்களையும், சின்னங்களையும் அழிப்பது ஒரு போர்க்குற்றம். இதை செய்பவர்கள் கண்டிப்பாக தண்டிக்கப்பட வேண்டும் என கோபத்துடன் தெரிவித்துள்ளார்.

மேலும் ஈராக்கில் செயற்பட்டு வரும் அமெரிக்க கூட்டுப்படை துரிதமாக செயற்பட்டு இதை தடுக்க வேண்டும். அதே போல் தொல்பொருள் கடத்தலையும் தடுக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.



இதற்கு பதில் அளித்துள்ள அமெரிக்க கூட்டுப்படை கடந்த சனிக்கிழமை இரவு மட்டும் 12 முறை வான்வழி தாக்குதலில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

அசீரியன் காலத்து நகரமான நிம்ருத் மற்றும் மோசூல் அருட்காட்சியகத்தை அழித்தபின் ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாதிகளின் கவனம் 2200 ஆண்டுகள் பழைமையான ஹாத்ரா நோக்கி திரும்பியுள்ளது குறிப்பிடத்தக்கது. (3)




# வழிபாட்டு தலத்துக்குள் துப்பாக்கிச் சூடு; 6பேர் பலி!

## ஆப்கானிஸ்தானில் கொடூரம்

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலின் மேற்கு பகுதியில் உள்ள ஒரு வழிபாட்டு தலத்தில் கடந்த சனிக்கிழமை ஏராளமானவர்கள் கூடி பிரார்த்தனை செய்து கொண்டு இருந்தனர். அப்போது வழிபாட்டு தலத்துக்குள் நுழைந்த மர்ம ஆசாமிகள், ஓசையை குறைக்கும் சாதனம் (சைலன்சர்) பொருத்தப்பட்ட துப்பாக்கியால் சரமாரியாக பலரை சுட்டு வீழ்த்தி விட்டு தப்பி ஓடி விட்டார்கள்.

கண் இமைக்கும் நேரத்தில் நடந்த தாக்குதலில் அங்கு இருந்த 6 பேர் உடலில் குண்டு பாய்ந்து பரிதாபமாக இறந்தனர். பலர் படுகாயம் அடைந்தனர். படுகாயம் அடைந்தவர்கள் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

சம்பவம் தொடர்பாக 5 பேரை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். கடந்த ஆண்டின் இறுதியில் தலிபான்களுக்கு எதிராக போரிட்டு வந்த நேட்டோ சர்வதேச படையினரில் பெரும்பாலானவர்கள் வாபஸ் பெறப்பட்டனர். இதனையடுத்து தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஆப்கான் படையினர் ஈடுபட்டு வருவது நினைவு கூரத்தக்கது. (3)

# காணாமற்போன மலேசிய விமானத்திற்கு இயந்திரக் கோளாறு காரணமில்லை

## மலேசிய அரசின் ஆய்வறிக்கையில் தகவல்



(கோலாலம்பூர்)


மலேசியன் ஏர்லைன்ஸ் விமானம் MH-370 ஓராண்டுக்கு முன்னர் காணாமற்போனது சம்பந்தமாக மலேசிய அரசாங்கம் வெளியிட்டுள்ள புதிய ஆய்வறிக்கையில், இந்த விமானத்தில் இயந்திரக் கோளாறோ, அல்லது அதன்விமானி அல்லது சிப்பந்திகளில் எவர் மீதும சந்தேகமோ இல்லை என்று தெரிவித்துள்ளது.

ஆனால்விமானம் நீருக்கடியில் விழுந்து விட்டால் சமிக்ஞை அனுப்பி இருப்பிடத்தை காட்டிக் கொடுக்கும் கருவியில் இந்த விமானம் விழுவதற்கு ஒரு ஆண்டுக்கு முன்பாகவே பற்றரி தீர்ந்துபோயிருந்தது என்றும், அதனால்தான் அது விழுந்த நேரத்தல் அதனைக் கண்டுபிடிப்பது சிரமமாகியிருந்தது என்றும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

239 பேருடன் பயணித்த இந்த விமானம் காணாமறபோய் சரியாக ஓராண்டாகும் நிலையில், அதன் எச்சங்களைத் தேடிக் கண்டுபிடிப்பதில் தாம் இன்னும் அக்கறை காட்டவே செய்வதாக மலேசியா மற்றும் அவுஸ்திரேலியாவின் பிரதமர்கள் கூறுகின்றனர்.

இந்தியப் பெருங்கடலின் தென் பகுதியில் இந்த விமானத்தை தேடும் தற்போதைய பணியில் பலன் ஏற்படாமல் போனாலும், கவனிக்கத்தகுந்த அறிகுறிகள் கிடைக்கும் பட்சத்தில் வேறு ஒரு பகுதியிலுங்கூட இந்த விமானத்தை தொடரும் பணி முன்னெடுக்கப்படும் என அவுஸ்திரேலிய பிரதமர் டோனி அப்பாட் தெரிவித்துள்ளார். (3)

# செரஸ் கிரக சுற்றுவட்டப் பாதையில் நுழைந்து நாசா விண்கலம் சாதனை



விண்வெளியில், செவ்வாய் மற்றும் வியாழன் கிரகங்களுக்கு இடையில் பல ஆண்டுகளுக்கு முன்பு செரஸ எனும் சிறிய கிர கம் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த கிரகத்தின் சுற்றுவட்டப் பாதையில் நுழைந்து நாசாவின் டான விண்கலம் சாதனை படைத்துள்ளது.

கடந்த 1801ஆம் ஆண்டு இத்தாலிய வானியல் அறிஞரான கிஸெப்பே பியாசி என்பவரால் செரஸ் எனும் சிறிய கிரகம் கண்டுபிடிக்கப்பட்டது. சூரியனில் இருந்து சுமார் 261 கோடி மைல் தூரத்தில் உள்ளது.

அமெரிக்காவில் உள்ள நாசா விண்வெளி ஆய்வு மையம் கடந்த 2007ஆம் ஆண்டு வெஸ்டா எனும் மற்றொரு சிறிய கிரகம் மற்றும் செரஸ் கிரகம் ஆகியவற்றைப் பற்றி அறிந்துகொள்வதற்காக டான் எனும் விண்கலத்தை ஏவியது.

கடந்த 8 ஆண்டுகளுக்குப் பிறகு, சுமார் 490 கோடி கி.மீ. தூரத்தைக் கடந்த அந்த விண்கலம், செரஸ் சுற்றுவட்டப் பாதையில் நுழைந்தது. அப்போது அது அந்த கிரகத்தில் இருந்து 61 ஆயிரம் கி.மீ. தொலைவில் இருந்தது.

செரஸ் கிரகத்தின் சுற்றுவட்டப் பாதையில் நுழைந்த முதல் விண்கலம் என்ற பெயரை மட்டுமல்லாது, விண்வெளியில் உள்ள இரண்டு சிறிய கிரகங்களின் சுற்றுவட்டப் பாதையை அடைந்த முதல் விண்கலம் எனும் பெருமையையும் டான பெற்றுள்ளது.

கடந்த 2011 மற்றும் 2012ஆம் ஆண்டு வெஸ்டா எனும் சிறிய கிரகத்தை அடைந்தது. அதற்குப் பிறகு, தற்போது செரஸ் கிரகத்தை அடைந்துள்ளது. இனி அடுத்த 16 மாதங்கள் அங்கிருந்தபடியே அந்த கிரகத்தைப் புகைப்படம் எடுத்து அனுப்பவுள்ளது.

அவற்றைக் கொண்டு செரஸ் கிரகம் எவ்வாறு தோன்றியது. அதன் மேற்பரப்பு எப்படியெல்லாம் மாற்றத்துக்கு உள்ளாகிறது என்பவை குறித்து விண்வெளி ஆய்வாளர்கள் ஆராயவுள்ளனர். (3)

# மன்னிப்பு கேட்டார் ஐ.எஸ். தீவிரவாதி

ஈராக் மற்றும் சிரியாவில் தங்கள் பிடியில் இருக்கும் பிணைக் கைதிகளை ஐ.எஸ். தீவிரவாதிகள் தலைதுண்டித்து படுகொலை செய்கின்றனர். இந்த நிலையில், இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஜப்பான் பிணைக்கைதிகள் உள்ளிட்ட மேலை நாட்டினரை முகமது எம்வாசி (வயது-26) என்ற தீவிர வாதி தலை துண்டித்து கொன்றது சமீபத்தில் தெரியவந்தது.

லண்டன் வாழ் குவைத்தை சேர்ந்த அவரை 'ஜிகாதிஜான்' என அழைத்து வந்தனர். தற்போது தீவிரவாதி. எம்வாசியின் தாயார் மற்றும் 4 சகோதரர்கள், சகோதரிகள் லண்டனில் இருந்து தலைமறைவாகி விட்டனர்.

தந்தையும், மூத்த சகோதரியும் குவைத்தில் தங்கியுள்ளனர். 'ஜிகாதிஜான்' யார் என தெரியாமல் இருந்தபோது இவர்கள் லண்டனில் சுதந்திரமாக உலவி வந்தனர். தற்போது இவர்களை பொது மக்கள் எதிர்ப்பதாலும், வெறுத்து ஒதுக்குவதாலும் தலைமறைவாகி விட்டனர். 6 கோடி ரூபா மதிப்பிலான மிகப்பெரிய வீட்டை விட்டு வெளியேறி இரகசிய இடத்தில் தங்கியுள்ளனர்.

இதை அறிந்த முகமது எம்வாசி தனது குடும்பத்தினரிடம் மன்னிப்புக் கேட்டு இருக்கிறான். இது குறித்த கடிதத்தில், தன்னால் குடும்பத்தினருக்கு ஏற்பட்ட பிரச்சினைகள் மற்றும் துன்பத்துக்கு நான்தான் காரணம். அதற்காக மன்னிக்க வேண்டுகிறேன் என தெரிவித்து இருக்கிறான்.

அதேநேரத்தில் குவைத்தில் தங்கியிருக்கும் தீவிரவாதி எம்வாசியின் தந்தையிடம் 'நீங்கள் உங்கள் மகனிடம் இருந்து விலகி இருங்கள். அல்லது நாட்டை விட்டு வெளியேறுங்கள்' என குவைத் எம்.பி.க்கள் பகிரங்கமாக கண்டிப்புடன் தெரிவித்துள்ளனர். (3)

# 13 வது திருத்தச்சட்டத்தை அமுலாக்குவதில் சுகாதார அமைச்சர் உறுதியாகவுள்ளார்

### சுகாதார இராஜாங்க அமைச்சர் ஹஸன் அலி நம்பிக்கை



**(கொழும்பு)**

**13ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதில் புதிய அரசாங்கத்தின் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மிகவும் உறுதியாக இருந்து செயற்படுகி ன்றார் என சுகாதார இராஜாங்க அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமுமான ஹஸன் அலி தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பில் உள்ள பல வைத்தியசாலைகளை பார்வையிட்டு அங்குள்ள குறை நிறைகளை கேட்டறியும் பொருட்டு இராஜாங்க அமைச்சர் ஹஸன் அலி உட்பட அவரது உயரதிகாரிகள் கொண்ட குழுவொன்று நேற்று முன தினம் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தது.

களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் சுகுணன் தலைமையில் வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்று கிழக்கு மாகாணத்திற்கு சகல அதிகாரங்களும் கொண்ட மாகாணசபையாக கிழக்கு மாகாணசபை திகழ வேண்டும் என்ற நோக்கத்திற்காக கிழக்கு மாகாணசபையில் அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கியதாக ஒரு தேசிய அரசாங்கம் ஒன்றினை அமைத்திருக்கின்றோம். அதனூடாக அனைத்து வளங்களையும் பெற்றுக்கொள்ள அனைவரும் முன்வரவேண்டும்.

இலங்கையில், அனைத்து இனங்களுக்கும் அனைத்து அதிகாரங்களும் கிடைக்கவேண்டும் என்பதில் எமது சுகாதார அமைச்சர் உறுதியாக இருந்து செயற்பட்டு வருகின்றார். இந்த நாட்டிலே 13 ஆவது திருத்தச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும் என்றும் அதனூடாக சிறுபான்மை இனம் அனைத்து அதிகாரங்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் அவர் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார்.

மாகாணசபையின் கீழ் இயங்கும் அனைத்து வைத்தியசாலைகளும் முன்வைக்கும் ஒரு முக்கிய பிரச்சினை தங்களை மாகாண சபையின் கீழ் இருந்து விடுபடச் செய்து மத்திய அரசாங்கத்திற்குள இணைப்பதற்கான வேலைத்திட்டங்களை செய்து தரவேண்டும் எனும் கோரிக்கையினை முன் வைக்கின்றார்கள்.

ஆனால் மத்திய அரசு மாகாணத்தின்கீழ் உள்ள அனைத்து வைத்தியசாலைகளுக்கும் ஒழுங்கான முறையில் வளங்களை பங்கீடு செய்திருக்குமானால் எந்த ஒரு மாகாணசபையின் கீழ் உள்ள வைத்தியசாலையும் மத்திய அரசாங்கத்துடன் இணைய வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைக்க மாட்டார்கள். மாறாக மத்திய அரசு ஒழுங்கான முறையில் வளங்களை பங்கீடு செய்யாமையே இதற்கு முழுக்காரணமுமாகும்.

எதிர்வரும் காலத்தில் இவ்வாறான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காகவே 100 நாட்கள் வேலைத்திட்டத்தினை மையமாக வைத்து அமைச்சரின் வேண்டுதல்களுக்கு ஏற்ப கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து வைத்தியசாலைகளுக்கும் சென்று பிரச்சினைகளை ஆராய்ந்து அமைச்சரிடம் கோரிக்கைகளை முன்வைக்கவிருக்கின்றேன்.

அதனொரு கட்டமாக அண்மையில் அம்பாறையில் உள்ள 17 வைத்தியசாலைகளுக்கும் சென்று அங்கு உள்ள வைத்தியசாலைகளின் பிரச்சினைகளை அமைச்சரின கவனத்திற்கு கொண்டு சென்றிருக்கின்றேன்.

30 வருட போராட்ட காலத்தில் இரண்டு இனங்களுக்குள்ளும் ஒரு கசப்புணர்வு இருந்ததன் காரணமாக முஸ்லிம்கள், தமிழர் பிரதேசங்களுக்குச் செல்லாமலும், தமிழர்கள் முஸ்லிம் பிரதேசங்களுக்குச் செல்வதிலும் மனக்கசப்புற்றிருந்தார்கள்.

அந்நிலை இனி மேல் எவரிடமும் வரக்கூடாது. அதனை ஓரங்கட்டிவிட்டு இரண்டு சமூகமும் ஒருவரை ஒருவர் புரிந்து செயற்பட முன்வரவேண்டும்.

வட, கிழக்கு மாகாணம் தமிழ், முஸ்லிம் சமூகத்தினது தாயகம். இக்கோட்பாட்டினை அடிப்படையாக வைத்துத்தான் முஸ்லிம் காங்கிரசும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அரசியல்வாதிகளும் தங்களது அரசியல் சிந்தனைகள் மூலம் செயற்பட்டு வருகின்றார்கள். இதற்கான அனைத்து வேலைப்பாடுகளையும் எமது இரண்டு இனங்களும் ஒன்று சேர்ந்து, பழைய மனக்கசப்புக்களை மறந்து, எமது மக்களுடைய பிரச்சினைகளுக்கு அனைவரும் ஒன்று சேர்ந்து அதிகாரங்களை பகிர்ந்து எமது மக்களின் குறைகளை போக்க உழைக்க வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (3-5)

## அதிக வாக்குகளால் வெற்றி பெறுவேன்

### விநாயகமூர்த்தி முரளிதரன்



(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெறுவேன் என நம்புவதாக முன்னாள் மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போது இவ்வாறு கூறியுள்ளார்.

தான் தொடர்ந்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினராக செயற்படுவதாகவும் மேலும் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவிற்கு தொடர்ந்து ஆதரவளிப்பதாகவும் பொது தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு அதிக வாக்குகள் பெற்று தரும் பொறுப்பை தான் ஏற்றுக் கொள்வதாக மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் முரளிதரன் தெரிவித்துள்ளார். (3)

## 29வீத பெண் ஊடகவியலாளர் மீது இலங்கையில் பாலியல் தொந்தரவு

### சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளன ஆய்வில் தகவல்

இலங்கையில் பணியாற்றும் 29 சதவீத பெண் ஊடகவியலாளர்கள், தமது வேலைத்தளங்களில் பாலியல் தொந்தரவுகளுக்கு உள்ளாவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சர்வதேச ஊடகவியலாளர்கள் சம்மேளனத்தின் ஆய்வில் இந்த விடயம் வெளியிடப்பட்டுள்ளது.

டில்ருக்சி ஹந்துன்நெந்தி என்ற ஊடகவியலாளர்கள் மேற்கொண்ட இந்த ஆய்வின்படி 45 பெண்களில் 28.8 பெண்கள் தாம் வேலைத் தளங்களில் தொந்தரவுக்கு உள்ளாவதாக தெரிவித்துள்ளனர். எனினும் இந்த விடயம் குறித்து முறைப்பாடுகள் எவையும் செய்யப்படுவதில்லை.

பத்திரிகை நிறுவனங்கள் குறித்த முறைப்பாடுகளை, அசட்டை செய்ததன் காரணமாகவே பெண் ஊடகவியலாளர்கள் முறைப்பாடுகளை செய்வதில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

## பாராளுமன்றத்தை கலைக்காவிட்டால் பிரதமர் ரணில் பதவி விலக வேண்டும்

### மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் அநுரகுமார



(கொழும்பு)

100 நாட்களுக்கு பின்னர் பாராளுமன்றம் கலைக்கப்படாவிட்டால் பிரதமர் ரணில் விக்ரமசிங்க பதவி விலக வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த 41 அமைச்சர்களே உள்ளார்கள். 41 அமைச்சர்கள் என்ற சிறிய குழுவை பாராளுமன்றத்தில் வைத்துக் கொண்டு ரணிலுக்கு பிரதமராக செயற்பட முடியாதென அவர் சுட்டிக் காட்டியுள்ளார், (3-5)

## பிரிவுத்துயர் பகிர்வு



**திருமதி. குலசேகரம் ஸ்ரீகரலக்ஷ்மி**

காரைநகர் மல்லிகையைப் பிறப்பிடமாகவும், பிரான்சை வதிவிடமாகவும் கொண்ட குலசேகரம் ஸ்ரீகரலக்ஷ்மி கடந்த 7 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று செவ்வாய்க் கிழமை மு.ப 11மணியளவில் Crematorium du pere Lachaise, 71 Reu des Rondeaux, 75020 paris, France என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.



**சண்முகநாதன் கந்தகுமார்**

வட்டுக்கோட்டை சங்கரத்தை சந்தியைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் கந்தகுமார் கடந்த 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற்று பின்னர் குப்பிளான் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**சிதம்பரப்பிள்ளை கனகசபை**

கரம்பனைப் பிறப்பிடமாகவும், அவுஸ்திரேலியா Canberra வை வதிவிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை கனகசபை கடந்த 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று கால மானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை புதன்கிழமை பி.ப 3மணிக்கு Norwood park Crematorium, 65 Sandford Street,Mitchell ACT 2911, Canberra, Australia என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.

# நாகலாந்தில் கலவரம் பரவும் அபாயம் இன்டர்நெட், எஸ்எம்எஸ் சேவைக்கு தடை

## சிறைக்கைதி படுகொலை தொடர்பாக 22 பேர் கைது

(திமாப்பூர்)

**இந்தியாவின் நாகலாந்து மாநிலத்தில் அசாம் மாநிலத்தை சேர்ந்த பாலியல் குற்றவாளியை பொதுமக்கள் ஒன்று சேர்ந்து சிறையை உடைத்து படுகொலை செய்தது தொடர்பாக இதுவரை 22 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். படுகொலையை கண்டித்து தொடர்ந்தும் போராட்டம் நடப்பதால் இன்டர்நெட், எஸ்.எம்.எஸ் ஆகியவற்றுக்கு மாநிலம் முழுவதும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.**

படுகொலையை கண்டித்து தொடர்ந்து போராட்டம் நடப்பதால் இன்டர்நெட், எஸ்.எம்.எஸ் ஆகியவற்றுக்கு மாநிலம் முழுவதும் இன்று மாலை வரை தடை விதிக்கப்பட்டுள்ளது. திமாப்பூரில் ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்பட்டுள்ளது.

நாகலாந்தின் திமாப்பூரில் பெண் ஒருவரை, சையது பரீத் கான் என்பவர் கடந்த மாதம் 23ஆம் திகதி பலாத்காரம் செய்ததாகப் புகார் எழுந்தது. அவரை பொலிஸார் கைது செய்து திமாப்பூர் மத்திய சிறையில் அடைத்தனர். நீதிமன்ற காவலில் இருந்த சையது பரீத் கானை, ஆயிரக்கணக்கான மக்கள் கடந்த 5ஆம் திகதி சிறையை உடைத்து வெளியில் இழுத்து வந்தனர். அந்தக் கும்பல் அடித்து உதைத்ததில் அவர் பலியானார்.

பலியான சையது, அசாம் மாநிலத்தைச் சேர்ந்தவர். அவரது உடல் கடந்த சனிக்கிழமை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இதற்கிடையில் சையது மீது பொய்க் குற்றச்சாட்டு கூறி அவரை கொன்றுவிட்டதாகக்கூறி அசாம் மாநிலத்தில் கரீம்கஞ்ச் (சையது பரீத் கானின் சொந்த ஊர்) உட்பட பல பகுதிகளில் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அதேபோல் சையது படுகொலையைக் கண்டித்து நாகலாந்திலும் போராட்டங்கள் நடந்து வருகின்றன. இதைத் தொடர்ந்து இன்டர் நெட், எஸ்.எம்.எஸ் போன்றவற்றுக்கு இன்று மாலை 6 மணிவரை நாகலாந்து முழுவதும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திமாப்பூர் நகரில் பிற்பகல் 3 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மூத்த பொலிஸ் அதிகாரி கூறும்போது, "பாதிக்கப்பட்ட பெண் பலாத்காரம் செய்யப்பட்டிருப்பது மருத்துவ பரிசோதனை அறிக்கையில் தெரிய வந்துள்ளது" என்று தெரிவித்தார். வழக்கை விசாரிக்கும் இன்ஸ்பெக்டர் ஜெனரல் வபாங் ஜமீர் கூறும்போது "படுகொலை தொடர்பாக இதுவரை 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். திமாப்பூரில் பதற்றம் நிலவினாலும் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் உள்ளது" என்றார்.

பாதிக்கப்பட்ட பெண் கூறும்போது, "என்னை பலாத்காரம் செய்த நபர் எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் வசித்தார். பலாத்காரம் செய்த பின்னர் அவர் என்னிடம் 5ஆயிரம் ரூபா கொடுத்தார், சம்பவத்தை வெளியில் யாரிடமும் சொல்லாதே என்றார். நான் பணத்தைப் பெற்றுக்கொண்டு, பொலிஸ்நிலையம சென்று நடந்தவற்றைக் கூறி பொலிஸாரிடம் பணத்தை ஒப்படைத்தேன்" என்று கூறியுள்ளார். (3)

## மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்கள் இயக்கிய விமானம்



மகளிர் தினத்தை முன்னிட்டு சென்னையில் இருந்து அந்தமானுக்கு பெண்களே விமானத்தை இயக்கியுள்ளனர்.

சென்னையை அடுத்த மீனம்பாக்கம் உள்நாட்டு விமான நிலையத்தில் இருந்து நேற்று முன்தினம் காலை அந்தமானுக்கு ஏர்-இந்தியா விமானம சென்றது. இந்த விமானத்தை மகளிர் தினத்தை முன்னிட்டு முழுக்க முழுக்க பெண்களே இயக்க ஏர்-இந்தியா நிறுவனம் முடிவு செய்தது.

இதற்காக விமானி தீபா தலைமையில்உதவிவிமானி பாங்குரிஅகர்வால், பணிப் பெண்கள் ரீனா, சத்யா நாயர், அமீயா, நாகனி, ஜோதி ஆகியோர் கொண்ட பெணகள் குழு தயாரானது. இந்த விமானத்தில் 7 குழந்தைகள உட்பட 189 பேர் பயணம் செய்தனர்.சென்னையில் இருந்து அதிாலை அந்தமானுக்கு புறப்பட்டு சென்ற அந்த விமானம், அங்கிருந்து காலை 10 மணிக்கு மீண்டும சென்னைக்கு திரும்பி வந்தது. இதில் 179 பயணிகள் சென்னை வந்து இறங்கினர்.

அந்தமானுக்கு பெண்களே இயக்கிய விமானத்தின் விமானி மற்றும் குழுவினருக்கு அதிகாரிகள் பூங்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தனர். (3)

## இந்தியப்பெண் அவுஸ்திரேலியாவில் கொலை துப்புக் கிடைக்காமல் திணறும் பொலிஸார்

(சிட்னி)

அவுஸ்திரேலியாவில் சொப்ட்வேர இன்ஜினியராக பணியாற்றிய இந்திய பெண் பிரபா (வயது-40) மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார்.



பெங்களூரைச் சேர்ந்தவர் அருண்குமார்; இவரது மனைவி பிரபா. இத்தம்பதிக்கு 10 வயதில் ஒரு மகள் உள்ளார். சொப்ட்வேர் இன்ஜினியரான பிரபா அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் பணியாற்றி வந்தார். சிட்னி புறநகர்ப் பகுதயான வெஸ்ட்மேட் பகுதியில் தங்கியிருந்த அவர் தினமும் புகை யிரதத்தில் பணிக்குச் சென்று வந்தார்.

கடந்த சனிக்கிழமை இரவு வழக்கம்போல் பணி முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தார். பாராமட்டா என்ற புகையிரத நிலையத்தில் இறங்கி அவரது வீடு அமைந்துள்ள வெஸ்ட்மேட் பகுதிக்கு இரவு 9.30 மணி அளவில் நடந்து சென்று கொண்டிருந்தார்.

அப்போது மர்ம நபர் ஒருவர் அவரை வழிமறித்து கத்தியால் குத்தியுள்ளார். இதில் பலத்த காயமடைந்த பிரபா, தனது கணவர் அருண்குமாரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்துள்ளார்.

பதறிய அருண்குமார் அயல் வீட்டுக்காரர் அரவிந்துக்கு தகவல் கொடுத்தார். அரவிந்தும் அப்பகுதி மக்களும் விரைந்து வந்து பிரபாவை மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். அவரது கழுத்து, மார்பு பகுதிகளில் கத்திக் குத்து காயங்கள் இருந்தன. அவருக்கு உடனடியாக அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அதிக இரத்தம் வெளியேறியதால் சற்று நேரத்தில் அவர் உயிரிழந்தார்.

'எதிர் வரும் ஜூன் மாதம் கணவர், குழந்தையைப் பார்ப்பதற்காக பெங்களூர் வருவதற்கு பிரபா திட்டமிட்டிருந்தார். ஆனால் அதற்கு முன்பாகவே அவரது வாழ்க்கையில் விதி விளையாடிவிட்டது' என்று பிரபாவுடன் பணியாற்றும் சக ஊழியர்கள் தெரிவித்தனர்.

இந்த கொலை தொடர்பாக இதுவரை எவ்வித துப்பும் கிடைக் கவில்லை. எனினும் பாலியல் பலாதகார முயற்சி அல்லது கொள்ளை முயற்சியின் போது பிரபா கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று அவுஸ்திரேலிய பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

வீட்டில் இருந்து 300 மீற்றர் தொலைவில்தான் பிரபா கொலை செய்யப்பட்டுள்ளார். எனவே அப்பகுதி சிசிடிவி கமராவில் பதி வான காட்சிகளின் அடிப்படையில் அப்பகுதி குடியிருப்புவாசிகளிடம் பொலிஸார் தீவிர விசாரணையைத் தொடங்கியுள்ளனர். (3)

## "இந்தியாவின் மகள்" படத்தடையானது தற்கொலை செய்தமைக்கு ஒப்பானது

### பட இயக்குநர் லெஸ்லி உட்வின் பேட்டி

'இந்தியாவின் மகள்" ஆவணப்படத்தை தடை செய்தது மூலம் இந்தியா மிகப் பெரிய தவறை செய்துவிட்டது. இது அந்நாடு சர்வதேச தற்கொலை செய்துகொண்டதற்கு சமமானது என்று அப்படத்தின் இயக்குநர் லெஸ்லி உட்வின் தெரிவித்துள்ளார்.



இந்த ஆவணப்படம் ஒளிபரப்பப்பட்ட பின் நேற்று முன்தினம் லண்டனில் பேசிய அவர், உண்மையில் இந்தியாவின் மகள் மூலமாக இந்தியாவிற்கு எனது நன்றியை தெரிவிக்கவே விரும்பினேன். ஆனால் அதை தவறாக புரிந்து கொண்டு அப்படத்தை தடை செய்தது நடைமுறைக்கு முரணாக உள்ளது. நிர்பயாவிற்காக ஒட்டு மொத்த நாடும் எப்படி எழுச்சியுடன் போராடியது என்பதையும், இந்தியா புதிய மாற்றத்தின் பாதையில் நடைபோட தொடங்கியிருப்பதையுமே அப்படத்தில் காட்சிப்படுத்தியுள்ளேன். படத்தை தடை செய்ததன் மூலம் இந்தியா தன்னை தானே சர்வதேச தற்கொலை செய்து கொண்டுள்ளது என்று உட்வின் தெரிவித்தார்.

லெஸ்லி உட்வின் மேலும் கூறுகையில், பிரதமர் மோடி ஒரு மணி நேரம் தனது நேரத்தை ஒதுக்கி இந்த ஆவணப் படத்தை பார்த்தார் என்றால் உண்மையை புரிந்து கொள்வார்.

அவரின் பெண் குழந்தைகளை காப்போம் என்ற இயக்கத்தின் மூலம் சொல்லி வரும் அதே கருத்தை தான் நானும் எனது ஆவணப்படத்தில் முன் வைத்துள்ளேன என்றார்.

முன்னதாக இந்த ஆவணப்படத்தை பி.பி.சி. செய்தி நிறுவனம் அறிவித்த திகதிக்கு முன்னதாக உலகம் முழுவதும் ஒளிபரப்பியது. இப்போதும் அப்படத்தினை பி.பி.சியின் இங்கிலாந்து தளத்தில் பார்க்க வகை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (3)

### பாரதச் செய்தி

## ஜம்மு-காஷ்மீர் பிரிவினைவாத தலைவர் விடுதலையானார்

ஜம்மு-காஷ்மீரில் பிரிவினைவாத அமைப்பின் தலைவர் சிறையிலிருந்து கடந்த சனிக்கிழமை விடுவிக்கப்பட்டதைக் கண்டித்துள்ள பா.ஜ.க. இது தொடர்பாக மக்கள் ஜனநாயகக் கட்சி கூட்டணிக் கட்சியான தங்களுடன் கலந்தாலோசிக்கவில்லை என்று குற்றஞ்சாட்டியுள்ளது.

இதுகுறித்து மாநில பா.ஜ.க. தலைவரும்நாடாளுமன்றஉறுப்பினருமான ஜுகல்கிஷோர்சர்மா நேற்றுமுன்தினம செய்தியாளர்களிடம் கூறுகையில்,

பிரிவினைவாத அமைப்பின் தலைவரான மஸ்ரத் ஆலமை விடுதலை செய்வதற்கு முன்பாக, கூட்டணிக்கட்சி என்ற முறையில் எங்களது அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும். ஆனால், இது குறித்து ம.ஜ.க. எங்களுடன் கலந்தாலோசிக்கவில்லை. இதை சகித்துக்கொள்ள முடியாது. இது குறித்து விளக்கம் கேட்கப்படும்.

எங்களது ஆலோசனையைக் கேட்டிருந்தால் அதற்கு அனுமதி அளித்திருக்கமாட்டோம். இப்போதும் அவர்களது முடிவில் எங்களுக்கு உடன்பாடு இல்லை என அவர் தெரிவித்துள்ளார். இதே வேளை 2010ஆம் ஆண்டில் கலவரம் ஏற்பட காரணமாக இருந்தவர் ஆலம். அந்தக் கலவரத்தில் சுமார் 100பேர் கொல்லப்பட்டனர். இதையடுத்து ஆலம் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (3)

# பறவைகள் சரணாலயத்திற்கெனக் கூறி மன்னார் பிரதேசத்தில் காணி அபகரிப்பு!

## மன்னார் நகரசபை குற்றச்சாட்டு

(குருமன்காடு)

**மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி திட்டங்களுக்கு பல்வேறு முட்டுக்கட்டைகள் மற்றும் இடையூறுகள் ஏற்படுவதாக மன்னார் நகர சபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட 'வன' விலங்குகள், பறவைகள் சரணாலயம்' என்ற போர்வையில் மன்னாரில் குடியேற்றப் பகுதிகளில் அபகரிக்கப்பட்டுள்ள காணிகளினால் தற்போதைய அபிவிருத்தி பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக வங்காலை தொடக்கம் சிறுநாவற்குளம், திருக்கேதீஸ்வரம் போன்ற பகுதிகளிலும், மன்னார் நகரப்பகுதியான பள்ளிமுனை, மன்னார் கோட்டை, சௌத்பார், ஸ்ரேசன் போன்ற பகுதிகளிலும் இவ்வாறு காணிகள் வன விலங்குகள், பறவைகள் சரணாலயம் என்ற போர்வையில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளினால் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளன.

குறிப்பாக கடந்த அரசாங்கம் சம்பந்தப்பட்ட துறை சார்பாக கலந்தாலோசிக்காது, எமது கருத்துக்களை கேட்காது திட்டமிட்ட வகையில் நில ஆக்கிரமிப்பை மேற்கொண்டுள்ளனர்.

இதனால் நகரத்தின் அபிவிருத்திப் பணிகள் முடக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக மன்னார் பிரதான பாலத்தடியில் அமைந்துள்ள கோட்டை பகுதிகளிலும் வன விலங்குகள், பறவைகள் சரணாலயம் என பெயர்ப்பலகைகள் நாட்டப்பட்டுள்ளன.

இப்பகுதியில் மன்னார் நீதிமன்றமும் காணப்படுகின்றது. இவ்வாறு உள்ள நிலையில் இப்படியான நில அபகரிப்புக்கள் என்பது திட்டமிட்ட வகையில் கடந்த அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை இப்படியான சம்பவங்கள் மிக தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

எனவே புதிய அரசாங்கம் மக்களின் நலனை கருத்தில் கொண்டு நல்லாட்சியை வகுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

முதற்கட்டமாக மன்னார் மாவட்டத்தில் உள்ள இத்தடைகளை அகற்றி பொது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு உதவ வேண்டும் என மன்ன்ார் நகர சபை உறுப்பினர் என்ற வகையில் மன்ன்ார் மாவட்ட மக்கள் சார்பாக புதிய அரசை கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன் என மேலும் தெரிவித்தார். (அ-2-250

## பாலிநகர் பொதுச்சந்தையை பயன்பாட்டுக்கு விடுங்கள்

(பனிக்கன்குளம்)

பாலிநகர் பொதுச்சந்தை கட்டடத்தை வர்த்தகர்களுக்கு வழங்குவதற்கு தாமதிப்பது ஏன் என சந்தை வர்த்தகர்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,


யுத்தத்தின் பின்னரான மீள்குடியேற்றத்தின் போது சந்தை கட்டடம் தற்போது அமைக்கப்பட்ட காணிக்குள் வர்த்தகர்கள் காணிக்குத்தகைகளை செலுத்தி கடைகளை அமைத்து வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இந்த நிலையில் மாந்தைகிழக்கு பிரதேச சபையினர் கட்டடம் அமைத்து தருவதாக கூறியபோது வர்த்தகர்கள் பிரதேச சபையிடம் இருந்து நட்ட ஈடு எதனையும் பெறாது தாம் அமைத்த கடைகளை இடித்து அழித்து விட்டு காணியை விடுவித்தனர்.

இதன் பயனாக வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் 1250 00000 ரூபா நிதி ஒதுக்கீட்டில் கடந்த 17.10.2013 - 15.04.2014 காலப்பகுதிக்குள் ஒப்பந்தகாரரால் கட்டடம் கட்டி முடிக்கப்பட வேண்டும் என இருந்த போதிலும் கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்டது.

ஆனால் இதுவரை பொதுச்சந்தை கட்டடம் வியாபாரத்திற்குதிறந்து வைக்கப்படவில்லைஎன சுட்டிக்காட்டப்படுகின்றது.எனவே உரிய அதி காரிகள்உடனடியாகநடவடிக்கைஎடுக்கவேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-28)



**துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) ஆகிய வகுப்புக்களில் கல்வி பயின்று வருகின்ற மாணவர்களுக்கான விசேட கல்விக் கருத்தரங்கு ஒன்று அண்மையில் மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது இதில் சட்டத்தரணி வி.சேனாதிபதி மாணவர்களுக்கு வினாவிடை புத்தகங்களை வழங்கினார். (படம்:- மல்லாவி செய்தியாளர்)**

## வீதி விபத்து விழிப்புணர்வு செயலமர்வு

(முல்லைத்தீவு)

வடக்கு மாகாணசபையின் சுகாதார மற்றும் கல்வி அமைச்சுகளால் வீதி விபத்துக்களை தவிர்க்கும் விழிப்புணர்வு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டு கடந்த வாரயாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறையினரால் 34 ஆம் அணி மருத்துவ மாணவர்க்ளை ஈடுபடுத்தி வட மாகாணம் முழுவதும் பாடசாலைகளில் விழிப்புணர்வை மேம்படுத்தும் நோக்கில் நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் கல்வி வலயங்களில் உள்ள பாடசாலைகளில் இருந்து கலந்து கொண்ட மாணவர்களுடன் வீதி விபத்துக்களை தவிர்த்தல் மற்றும் முதலுதவி பற்றிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.





இந்நிகழ்வுகள் தினமும் காலை 8.30 மணியளவில் ஆரம்பித்து 1.30 மணி வரை இடம்பெற்றது. இறுதியில் வினாக்கள் வினவப்பட்டு சிறப்பாக விடையளித்த மாணவர்களுக்கு சிறு பரிசில்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வுகளில் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

முதலாம் நாள் நிகழ்வு வித்யானந்தா கல்லூரியில் கடந்த 2ஆம் திகதி இடம் பெற்றது. இதில் 6 பாடசாலைகளைச் சேர்ந்த 75 மாணவர்கள் கலந்து கொண்டனர். இரண்டாம் நாள் நிகழ்வு மறுநாள் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இதில் 26 பாடசாலைக்ளைச் சேர்ந்த 114 மாணவர்கள் கலந்து கொண்டனர். மூன்றாம் நாள் நிகழ்வுகள் மல்லாவி மத்திய கல்லூரியில் கடந்த 4ஆம்திகதி இடம் பெற்றன. இதில் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.மாலினி வெனிற்றன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். இதில் 29 பாடசாலைகளைச் சேர்ந்த 122 மாணவர்கள் கலந்து கொண்டனர். கடந்த 6ஆம் திகதி நான்காம் நாள் நிகழ்வு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் இடம் பெற்றது.

இதில் முல்லைத்தீவு வலயக் கல்விப்பணிப்பாளர் திரு மதி.உ.முனீஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். இதில் 23 பாடசாலைகளைச் சேர்ந்த 112 மாணவர்கள் கலந்து கொண்டனர். அதே நாளில் வெலிஓயா, சம்பத்நுவர தேசிய பாடசாலையிலும் 3 பாடசாலைகளைச் சேர்ந்த 120 மாணவர்கள் கலந்து கொண்டனர். (அ-2)

தொடுத்து விட்ட அம்பு; சொல்லி விட்ட வார்த்தை திரும்ப வராது.
– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கூட்டமைப்புக்குள் சிலர் ரணிலுக்கு ஆதரவா?

வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழ் நாட்டில் இருந்து ஒளிபரப்பாகும் தந்தி தொலைக்காட்சிக்கு அளித்தபேட்டி தமிழ் மக்களின் மனங்களைக் கடுமையாகப் பாதித்துள்ளது.

முதல்வர் விக்னேஸ்வரன் பொறுப்பற்றவர். அவரை நான் சந்திக்கப் போவதில்லை என்றெல்லாம் பிரதமர் ரணில் தனது செவ்வியில் தெரிவித்திருப்பது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனைத் தவிர, கூட்டமைப்பின் வேறு எந்த உறுப்பினர்களும் கண்டனம் தெரிவிக்கவில்லை. குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர், பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா போன்றவர்கள் பிரதமர் ரணிலின் செவ்வி குறித்து கண்டு கொள்ளாமை பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் விக்னேஸ்வரனை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கண்டபாட்டில்–பொறுப்பற்ற முறையில் விமர்சித்தார் என்பதற்கு 06.03.2015 அன்று தந்தி தொலைக்காட்சி ஒளிபரப்பிய பேட்டி சாட்சியமாகும்.

சர்வதேச மட்டத்தில் அனைவரும் அந்தப் பேட்டியைப் பார்த்திருப்பர். நிலைமை இதுவாக இருக்கும் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை அதுபற்றி வாய் திறக்காமல் இருப்பது ஏன்?

சில வேளைகளில் முதல்வர் விக்னேஸ்வரன் பற்றி இப்படி ஒரு கருத்தை வெளியிடுமாறு பிரதமர் ரணிலிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை கூறிவைத்ததோ! என்று எண்ணவும் தோன்றுகிறது.

அப்படி ஒரு சாத்தியப்பாடு இல்லை எனின், முதல்வர் விக்னேஸ்வரன் பற்றி பிரதமர் ரணில் கூறிய குற்றச்சாட்டுக்களுக்காக சம்பிரதாயத்துக்கேனும் சம்பந்தர் கவலை வெளியிட்டிருக்கலாம் அல்லவா?

ஆக, பிள்ளையையும் நுள்ளி தொட்டிலையும் ஆட்டுகின்ற கலாசாரம் இங்கு வேலை செய்துள்ளது என்று கூறுவதில் தவறில்லை. இது ஒரு புறம் இருக்க,

இலங்கையில் நடந்த யுத்தம் திட்டமிட்ட இன அழிப்பு என்ற தீர்மானத்தை முதல்வர் விக்னேஸ்வரன் வடக்கு மாகாண சபையில் முன்வைத்து அதை நிறைவேற்றியதே, ரணில் விக்கிரமசிங்க அவர் மீது கொண்ட கடும் கோபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. இதைத் தனது பேட்டியில் ரணிலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் நடந்தது இன அழிப்பு என்ற தீர்மானத்துக்காக ரணில் இத்துணை கோபம் கொண்டு வடக்கின் முதல்வரை திட்டித் தீர்ப்பதற்கான நியாயம் புரியவில்லை.

குறித்த தீர்மானத்தை முதல்வர் விக்னேஸ்வரனே கொண்டு வந்தார். அதில் எங்களுக்குச் சம்பந்தம் இல்லை என்று கூட்டமைப்பின் தலைமை ரணிலிடம் கூறியிருக்கவேண்டும். அவ்வாறு கூறும்போது தான், இவ்வாறானதொரு கோபம் ரணிலுக்கு வந்திருக்க முடியும்.

இது இல்லையெனில், இன அழிப்பு என்ற தீர்மானம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையையும் அல்லவா? ரணில் சாடியிருக்க வேண்டும். அதைச் செய்யாமல் விக்னேஸ்வரனை மட்டும் கடுமையாகக் குற்றம் சாட்டியமைக்குள் மர்மம் இருக்கவே செய்கிறது.

# எல்லை தாண்டும் மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் தவறல்ல!

## ரணிலின் கருத்தை இலங்கை மீனவர்கள் வரவேற்பு

(கொழும்பு)

இலங்கைக் கடற்பரப்பினுள் எல்லை மீறி வந்து மீன்பிடிக்கும் இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்வதில் தவறில்லை என்று இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க் தெரிவித்துள்ள கருத்தானது இந்தியாவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள இலங்கை மீனவர்கள், இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி வந்து தடை செய்யப்பட்ட தொழில்களைச் செய்வதையும், தமது கடல் வளத்தை அழிப்பதையும் அனுமதிக்க முடியாது என்று திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர்.

இந்திய மீனவர்கள் தொடர்பில் இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ள கருத்தைத் தாங்கள் வரவேற்பதாகவும் யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அந்தோனிப்பிள்ளை எமிலியான்பிள்ளை தெரிவித்தார்.

அண்மையில் யாழ்.மாவட்டம் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் எல்லை தாண்டி வந்த இந்திய மீனவர்கள் உள்ளூர் மீனவர்கள் மீது பெட்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தி சிலரைக் காயப்படுத்தியதை அடுத்தே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கடுமையாக நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் பிரதமர் தெரிவித்துள்ள கருத்து கடுமையாக இருந்த போதிலும், அந்த நாட்டின் குடிமகன் என்ற வகையில் அதற்கு முரண்பாடான கருத்தைத் தங்களால் வெளியிட முடியாது என்று குறிப்பிட்ட அவர், இந்திய மீனவர்களை நீண்ட காலமாகவே எல்லை தாண்டி வரவேண்டாம் என்று தாங் கள் எச்சரித்திருந்தும், அவர்கள் அதனைக் கவனத்தில் கொள்ளவில்லை என்றும் கூறினார்.

இருநாட்டு மீனவர்களும் நடத்திய பேச்சுக்களின் போது ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைவாக இந்திய மீனவர்கள் நடந்து கொள்வதாக உறுதியளித்திருந்த போதிலும், அவர்கள் அதனைக் கடைப்பிடிக்கத் தவறியிருப்பதனால், கடுமையான நிலைப்பாட்டை எடுப்பதைத் தவிர தங்களுக்கு வேறு வழி தெரியவில்லை என்றும்.

இரு நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருந்த போதிலும், அடிப்படையில் மீனவர்கள் என்ற வகையில் இந்தப் பிரச்சினைக்கு ஆயுத ரீதியாகத் தீர்வு காண முற்படுவது நாகரிகமற்ற செயல் அல்லவா என்று கேட்டதற்கு, இந்தப் பிரச்சினைக்கு இந்திய மீனவர்கள் எல்லை தாண்டாமல் இருப்பதே ஒரே தீர்வாகும் என்றும் எமிலியான்பிள்ளை பதிலளித்தார்.

எனினும் இதயசுத்தியுடனான பேச்சுக்களின் மூலம் உடன்பாட்டிற்கு வர முடியும் என்றும், அவ்வாறு எட்டப்படுகின்ற முடிவினை கட்டாயம் கடைப்பிடிப்பதற்கு இந்திய மீனவர்களும், இந்திய அரசும் முன்வர வேண்டும் என்றும் யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அந்தோனிப்பிள்ளை எமிலியான்பிள்ளை தெரிவித்தார். (செ-11)

## சட்டத்தரணி நாமல் முறைப்பாடு; விமலிடம் 5 மணி நேர விசாரணை

(கொழும்பு)

அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் செயற்பாட்டாளர் நாமல் ராஜபக்ஷ என்ற சட்டத்தரணி தனக்கு எதிராக செய்துள்ள முறைப்பாட்டுக்கமைய இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு தன்னிடம் நேற்று விசாரணை நடத்தியதாக முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்று காலை 9.30மணியளவில் வீரவன்ஸவிடம் விசாரணைகளை ஆரம்பித்ததுடன் மதிய உணவுக்காக விசாரணைகள் நிறுத்தப்பட்டன.

இதன் போது ஆணைக்குழுவின் அலுவலகத்திற்கு முன்னால் குழுமியிருந்த ஊடகவியலாளர்களிடம் பேசும் போதே வீரவன்ஸ மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மதிய உணவுக்காக விசாரணை நிறுத்தப்பட்ட போது வீரவன்ஸவிடம் மூன்று மணிநேரம் விசாரணைகள் நடத்தப்பட்டிருந்தது.

இதனை தொடர்ந்து மேலும் இரண்டு மணிநேரம் விசாரணை நடத்தும் தேவை காணப்பட்டது.

இதனால், மதிய உணவுக்கு பின்னர் மீண்டும் அவர் விசாரணையில் கலந்து கொண்டார்.

சதிகாரர்கள் தனக்கெதிராக முன்வைத்த முறைபாடுகளுக்கமைய தன்னிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷவின் பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கையில் ஈடுபடும் நபரே இவ்வாறு தனக்கெதிராக முறைப்பாடு செய்துள்ளார்.

இன்று (நேற்று) மாத்திரம் நான் 5 மணித்தியாலங்களாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டேன் இது ஆரோக்கியமான செயற்பாடு ஒன்றல்ல என முன்னாள் அமைச்சர் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார். (செ-11)

## மாந்தை பகுதியில் 25-ம் திகதி வரை மக்கள் மீள்குடியேற வேண்டாம்

### புதைபொருள் ஆராய்ச்சி திணைக்களம் அறிவிப்பு

திருக்கேதீஸ்வரம் மாந்தை பகுதியில் எதிர்வரும் 25ஆம் திகதிவரை மக்கள் மீள்குடியேற வேண்டாம் என்று புதைபொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். திருக்கேதீஸ்வரம் மாந்தை பகுதியில் பூர்வீகமாக வாழ்ந்து வந்த மக்கள் அவர்களது சொந்த காணிகளை துப்புரவு செய்து குடியேற நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது அந்த மக்களை குடியேறவேண்டாம் என்று பொலிஸார் தடுத்து நிறுத்தியிருந்தனர். தமது பூர்வீக காணிகளே அவை என்று மக்கள் தெரிவித்தபோதும், குறித்த காணிகள் புதைபொருள் ஆராய்ச்சித் திணைக்களத்துக்குரியவை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து புதைபொருள் ஆராய்ச்சி திணைக்கள அதிகாரிகள் நேற்று திங்கட்கிழமை குறித்த இடத்துக்கு வந்து பார்வையிட்டதுடன், மக்களுடன் கலந்துரையாடி எதிர்வரும் 25ஆம் திகதிவரை அப்பகுதியில் குடியேற்றம் தொடர்பான வேலைகளை நிறுத்திவைக்கும் படியும் கேட்டுக்கொண்டனர்.

இந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட மக்கள் மார்ச் 25ஆம் திகதி வரை காத்திருப்பதாக கூறியதுடன் 25 ஆம் திகதி எமது காணிகளில் குடியேற அனுமதி மறுக்கப்படும் பட்சத்தில் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றும் தெரிவித்தனர். 1960 ஆம் ஆண்டு இப்பகுதியில் குடியேறிய மக்கள் 1990ஆம் ஆண்டு யுத்த சூழ்நிலை காரணமாக இடம் பெயர்ந்து சென்றிருந்தனர். யுத்தம் நிறைவுபெற்று 2010 ஆம் ஆண்டு அப்பகுதிக்கு மீள்குடியேற வந்தபோது, தொல்பொருள் வலயம் என தெரிவித்து தம்மை மீளக்குடியமர அனுமதிக்கவில்லை என்று குறித்த காணிக்குரிய மக்கள் தெரிவிக்கின்றனர். (செ-11)

## சர்வதேச மகளிர் தின நிகழ்வும் கௌரவிப்பும்

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டமும் (யு.என்.டி.பி) ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் பெண்களை வலுப்படுத்தல் மனித நேயத்தை வலுப்படுத்துவதாகும் என்னும் தொனிப் பொருளில் அமைந்த சர்வதேச மகளிர் தின விழா இன்று 10-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், கௌரவ விருந்தினராக ஐக்கியநாடுகள் அபிவிருத்தி திட்ட (யு.என்.டி.பி) பிராந்திய நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் செ.ஞானகணேசன், சிறப்பு விருந்தினராக ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் அவர்களுக்கு சிறப்பு கௌரவம் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (செ)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



மனித குலத்தை அழைத்து, 'விழியுங்கள், எழுங்கள், குறிக்கோளை அடையும்வரை நில்லாமல் செல்லுங்கள்' என்று உணர்த்துவது ஒன்றுதான் வேலை.

தூயவனாக இரு, அதற்குமேலாக, நேர்மையாக இரு. ஒரு கணமும் நம்பிக்கையை இழக்காதே,நீ ஒளியைக் காண்பாய்.

சாகும்வரை வேலை செய்யுங்கள். நான் உங்களுடன் உள்ளேன், நான் போன பிறகு என் ஆன்மா உங்களுடன் வேலை செய்யும். இந்த வாழ்வு, வரும், போகும்.

செல்வம், புகழ், போகங்கள் எல்லாம் சில நாட்களுக்கே. புழுவைப்போல் சம்சாரத்தில் உழன்று மடிவதை விட உண்மையைப் பிரசாரம் செய்தவாறே கடமை என்னும் களத்தில் உயிர் துறப்பது சிறந்தது. மிகச் சிறந்தது.முன்னேறுங்கள்.!

# டிவில்லியர்ஸின் சாதனையை முறியடித்த மக்ஸ்வெல்

தென்னாபிரிக்க அணியின் தலைவர் டிவில்லியர்ஸின் சாத னையை அவுஸ்திரேலிய அணி யின் அதிரடி வீரர் மக்ஸ்வெல் முறியடித்துள்ளார்.

இலங்கைக்கு எதிரான போட்டி யில் மக்ஸ்வெல் 51 பந்துகளில் சத மடித்தார். இது இந்த உலகக்கிண் ணத் தொடர் ஒன் றில் மிக விரை வாக அடிக்கப்பட்ட சதமாகும்.

இதற்கு முன்ன தாக மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான ஆட்டத்தில டிவில்லியர்ஸ 52 பந்துகளில் சதம டித்ததுதான் சாத னையாக இருந்தது.

அதோடு உல கக் கிண்ணப் போட்டியில் மிக விரைவாக சத மடித்த வீரர் இரண்டாவது வீரர் என்ற பெருமையை யும் பெற்றி ருந்தார் டிவில்லியர்ஸ்.

தற்போது டிவில்லியர்சை மூன் றாவது இடத்திற்கு தள்ளியுள்ளார் மக்ஸ்வெல்.

டிவில்லியர்ஸின் அதிரடி ஆட்ட த்தை பார்த்து பார்த்துதான் மக்ஸ் வெல்லும் தனது அதிரடி ஆட் டத்தை மெருகேற்றிக் கொண்டார்.

இந்நிலையில் டிவில்லியர்சின் சாதனையை உடைத்தெறிந்து குருவை மிஞ்சிய சிஷ்யராக ஆகியி ருக்கிறார் மக்ஸ்வெல். (க)



# ஓய்வை அறிவித்த சங்கா



இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார. தான் இந்த வருடம் ஓகஸ்ட் மாத இறுதிப்பகு தியில் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற வுள்ளதாக அறிவித்துள்ளார்.

கிரிக்கெட் இணையத்தளம் ஒன்றிற்கு இந்த தகவலை அவர் கூறியுள்ளார். நடை பெற்று வரும் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருடன் ஒருநாள் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறவுள்ள குமார் சங்கக்கார ஜூலை. ஓகஸ்ட் காலப்பகுதியில் நடைபெற வுள்ள இரண்டு அல்லது ஒரு டெஸ்ட் தொடரில் விளையாடிய பின்னர் ஓய்வு பெறவுள்ளதாக அறிவித் துள்ளார். இந்திய அணியுடனான டெஸ்ட் தொடரே குமார் சங்கக்காரவின் இறுதி டெஸ்ட் தொடராக அமையவுள்ளது.

உலகக் கிண்ண தொடரில் நேற்று முன்தினம் அடித்த சத்தத்துடன் மூன்று சதங்களை தொடர்ந்து அடித்தவர் என்ற புதிய சாதனை. ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் மூன்று சதங்களை தொடர்ந்து அடித்தவர் என்ற சாதனையில் ஏழாவது வீரராக இணைந்துள்ளார். உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் கூடுதலான சதங்களை அடித்தவர்களில் 5 சதங்களுடன் இரண்டாமிடத்தை பெற்றுள்ளார. அத்துடன் உலகக் கிண்ண தொடரில் கூடுதலான ஓட்டங்களைப் பெற்றவர் என்ற முக்கிய மைல் கல்களைப் பெற்றுள்ளார்.

குமார் சங்கக்கார தனது கிரிக்கெட்டின் வாழ்நாளில் உயரிய நிலையில் தற்போதே இருப்பதாக வர்ணிக்கப்படு கின்றது.

"தான் அந்த நிலையில் இருக்கின் றேனா இல்லையா என்பது எனக்கு தெரியாது. ஆனால் அணிக்கு எது தேவையோ அதை நான் செய்து வரு கின்றேன்" என குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார். (க)

SPORTS
விளையாட்டுச் செய்திகள்








ஐக்கிய அமெரிக்காவின் கராத்தே உயர்தர பயிற்சிகளை பெற்றுவரும் அன்ரோ டினேஸ். கராத்தே ஒவ் ஜப்பான் பெடரேசன் தலைமையகத்தில் நடைபெற்ற கராத்தே உயர்தரதேர்வில் தேரச்சியடைந்து 6ஆவது டான் (6th Dan) கறுப்புப்பட்டிக்கு தரமுயர்த்தப்பட்டுள்ளார். சம்மேளன தலைமையக பிரதம பரீட்சகர் கிராண்ட் மாஸ்டர் டிவைட் ஹேறாலி (8th Dan-Japan) மற்றும் பரீட்சகர் குழு சிகான் மெல்வின். சிகான் ரிம் லாபா. சிகான் ரொட்ரிகஸ் ஆகியோரால் இந்த தேர்வு நடத்தப்பட்டுள்ளது. மேலும் மேற்படி சம்மேளனத்தின் "A" தர கராத்தே நடுவராகவும் தரமுயர்த்தப்பட்டுள்ளார். அன்ரோ டினேஸ் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது



# வெட்டோரி சாதனை

நியூசிலாந்து அணியின் சுழற் பந்து வீச்சாளர் டேனியல் வெட் டோரி. ஒருநாள் போட்டியில் 300 விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்துள்ளார்.

உலகக் கிண்ண தொடரின் ஆப்கானிஸ்தா னுக்கு எதிரான லீக் போட்டியில் 10 ஓவர்களில் 18 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக் கொடு த்து 4 விக்கெட்டு களை வீழ்த்தினார்.

இதில் 2 ஆவது விக்கெட்டை எடுத்த போது அவரது ஒட்டுமொத்த விக்கெட் எண்ணிக்கை 300 ஆக உயர்ந்தது.

இதன்மூலம் ஒருநாள் போட்டி யில் 300 விக்கெட் கைப்பற்றிய முதல் நியூசிலாந்து வீரர் என்ற சாதனையை படைத்தார்.

வெட்டோரி 291 ஒருநாள் போட் டிகளில் விளை யாடி 302 விக்கெட் டுகளை வீழ்த்தியுள்ளார்.

அவருக்கு அடுத்து நியூசிலாந்து வீரர்களில் மில்ஸ் 170 போட்டி களில் 240 விக்கெட்டுகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

உலக அளவில் இந்த மைல் கல்லை கடந்த வர்களில். 36 வயதான வெட் டோரி 12 ஆவது வீரர் ஆவார். (க)

# மானிப்பாய் இந்து வெற்றி

(மானிப்பாய்)

சாவகச்சேரி டிறிபேக் தாரகை விளையாட்டுக்கழகத்துடன் நடை பெற்ற சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் மானிப்பாய் இந்துக்கல்லூரி 19 வயதுப் பிரிவு அணி 7 விக்கெட்களால் வெற்றியீட்டியது.

இரு அணிகளுக்குமிடையிலான 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக் கெட் போட்டி மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற சாவகச்சேரி டிறிபேக் தாரகை அணி முதலில் துடுப்பெடுத்தாடி 29.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் என்.தசிந்தன் 58. எல்.மார்க்சிங் 33 ஓட்டங்க ளையும் பெற்றனர்.

184 என்ற வெற்றியிலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் கள மிறங்கிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி. 26.4 ஓவர்களில் 3 விக் கெட்களை மாத்திரம் இழந்து வெற் றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத் தில் பிரதீபன் 68 ஓட்டங்களைப் பெற் றுக்கொடுத்தார். (க-23-29)

மகமதுல்லா கன்னிச் சதம்

# இங்கிலாந்து அணியை வெளியேற்றி காலிறுதிக்குள் நுழைந்தது பங்களாதேஷ்



பங்களாதேஷ் அணிக்கு எதிரான உலகக் கிண்ண லீக் போட்டியில் 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்த இங்கிலாந்து உலகக் கிண்ணப் போட்டிகளிலிருந்து வெளியேறியது.

அவுஸ்திரேலியாவின் அடிலெய்ட் நகரில் நேற்று நடந்த உலகக் கிண்ண "ஏ" பிரிவு லீக் போட்டியில் இங்கிலாந்து - பங்களாதேஷ் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணியின் தலைவர் ஒய்ன் மோர்கன் களத்தடுப்பை தெரிவு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணிக்கு தமிம் இக்பால் (2), இம்ருல் ஹெய்ஸ் (2) ஏமாற்றினர்.

பின் இணைந்த சௌமியா சர்கார - மகமதுல்லா ஜோடி பொறுப்பாக ஆடியது. மூன்றாவது விக்கெட்டுக்கு 86 ஓட்டங்கள் சேர்த்த போது சர்கார் (40) ஆட்டமிழந்தார். சகிப் அல் ஹசனும் (2) ஏமாற்றினார்.

ஆனால் மகமதுல்லா பொறுப்பாக விளையாடி 103 ஓட்டங்கள் எடுத்தார். இச்சதமானது உலகக கிண்ண வரலாற்றில் பங்களாதேஷ் வீரரால் பெறப்பட்ட முதல் சதமானது.



50 ஓவர்கள் நிறைவில் பங்களாதேஷ் அணி 7 விக் கெட்டுக்கள் இழப்புக்கு 275 ஓட்டங்கள் எடுத்தது.

276 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு மொயீன் அலி (19) ஏமாற்றினார். அலெக்ஸ் ஹேல்ஸ் (27) நிலைக்கவில்லை. தொடர்ந்து ஜோ ரூட் (29), அணித் தலைவர் மோர்கன் (0), ஜேம்ஸ் ரெய்லர் (1) ஏமாற்றினர்.

பொறுப்பாக ஆடிய இயன் பெல் (63), ஜோஸ் பட்லர் (65) அரை சதமடித்தனர். தொடர்ந்து களமிறங்கிய வீரர்கள் சொதப்பவே 48.3 ஓவர்களில் 260 ஓட்டங்களுக்கு இங்கிலாந்து அணி ஆட்டமிழந்தது.

இப் போட்டியில் அடைந்த தோல்வியால் உலகக் கிண்ணப் போட்டிகளிலிருந்து இங்கிலாந்து பரிதாபமாக வெளியேறியது.

போட்டியின் ஆட்டநாயகனாக பங்களாதேஷ் அணியின் மகமதுல்லா தெரிவானார். (க)

## விரக்தியின்...

வயோதிபர்கள், மாற்றுத் திறனாளிகள் போன்றோர் அடங்கலாக 320 பேர் வரை இலங்கையிலுள்ள பல்வேறு சிறைகளில் அடைக்கப் பட்டுள்ளோம்.

குற்றமிழைதத ஒவ்வொரு வருககும் வழங்கக்கூடிய தண்டனைக் காலத்திற்கும் மேலதிகமாக நாம் தண்டனையை அனுபவித்து வருகிறோம். எமது வாழ்க்கையின் அரைவாசிக்கும் அதிகமான காலத்தை சிறைக்கூண்டுக்குள் தொலைத்திருக்கும் நிலையில். எமது குடும்பத்தவர்களும் இன்னோரன்ன துன்பங்களைச் சுமந்துவருகின்றனர்.

எம்மை விடுவிப்பதற்காக அவர்கள் நாளும் பொழுதும் அலைந்து பணத்தைச் செலவிட்டு வறுமைக் கோட்டுக்குக் கீழ்ப்பட்டவர்களாக மாறிவிட்டனர்.

சாதாரண மனித வாழ்வின் இயல்புத்தன்மையை இழந்துவிடும் நிலையில் நான்கு சுவர் சூழந்த கூண்டுக்குள் நாம் முடக்கப் பட்டுள்ளோம். எனவே நாட்டின் தலைமகனாகிய தங்களுக்கு இருக்கக்கூடிய சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி எமக்கு பொது மன்னிப்பு வழங்கி. சீரழிந்து கொண்டிருக்கும் ஒருதொகுதி மக்கள் சமூகத்தைத் தூக்கி நிறுத்துமாறு நாம் கருணைக்கரம் நீட்டுகிறோம்.

முன்னாள் போராளிகளைச் சமூகத்துடன் இணைத்து அவர்களுக்கும் வாழ சந்தர்ப்பம் வழங்கியது போன்று எமக்கும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்குமாறு கோருகிறோம்.

இன்றுமுழுநாடும்அபிவிருத்தியையும் சமாதானத்தையும் சுகவாழ்வையும் அனுபவித்துவரும் நிலையில், எமது மனங்கள் விரக்தியையும், ஏமாற்றத்தையுமே உணர்கின்றன.

எமது விடுதலையின் நியாயத்தை சிங்கள மக்களும் ஏற்றுக் கொண்டிருக்கும் இந்தச் சூழலில் ஜனாதிபதியாகிய தாங்கள் நல்லதொரு முடிவை எடுப்பீர்கள் என்று நம்புகிறோம் என்றுள்ளது.

இந்த மனுவின் பிரதிகள் பிரதமர், பிரதம நீதியரசர், தேசிய நிறைவேற்றுச் சபை, சட்டமா அதிபர், நீதியமைச்சர், சட்டம் ஒழுங்குகள் அமைச்சர், வடக்கு முதலமைச்சர் உட்பட 12 பேருக்கு அனுப்பிவைக் கப்பட்டுள்ளன. (செ-11)

## மைத்திரி...

மல்பரோ மாளிகை, டவுனின் வீதி, பிலங்கேஷ்டர் ஹோட்டல் அருகில் இலங்கை பிரதிநிதிகள் சம்பந்தப்பட்டுள்ள இடங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பிரித்தானிய பாதுகாப்பு செயலாளர் மைக்கல் ஃலேன் லண்டன் பார்க் ஹில்டன் ஹோட்டலுக்கு சென்று ஜனாதிபதியை சந்தித்தார்.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, புனர்வாழ்வு அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் மற்றும் பிரித்தானியாவுக்கான பதில் தூதுவர் சானக்க தல்பஹோவ ஆகியோர் உடனிருந்தனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அவரது பாரியாரும் வெஸ்ட் மினிஸ்டர் தேவாலயத்தில் நேற்று மாலை நடைபெற்ற பொது நலவாய நாடுகளின் நினைவு தின நிகழ்வில் கலந்து கொண்டனர். (செ-11)

## ஐரோப்பிய...

செஹ்ராடி கடந்த வாரம் கொழு ம்பு 3 இல் அமைந்துள்ள கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் அலுவலகத்தில் அமைச்சர் ரிஷாட் பதியுதீனுடனான சந்திப்பொன்றிலேயே இதனை வெளிப் படுத்தினார்.

இச்சந்திப்பில் செஹ்ராடி மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான புதிய அரசாங்கத்தின் உண்மையான செயல்பாடு உலகிற்கான ஜனநாயக வழிமுறைக்கு ஒரு சரியான உதாரணம்.

இலங்கையின் மீன்வள ஏற்றுமதி மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை நீங்கப்படுவதற்கான இலங்கையின் புதிய அரசாங்கம் வழங்கியுள்ள உறுதிமொழிகள் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் சிறந்த தீர்வொன்றை வழங்குவதற்கான சாத்தியம் உள்ளது.

இலங்கை- ஐரோப்பிய ஒன்றிய இருதரப்பு வர்த்தகம் சார்ந்த இடர்பாடுகள் மற்றும் பிரச்சினைகளை தீர்க்கவும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கிடையில், மீன்வள ஏற்றுமதி மீதான மீட்பு உட்பட இதர நடவடிக்கைகளுக்கு இலங்கையின் அக்கறையுடனான, மாத முன்னேற்ற அறிக்கைகள் அனுப்பி வைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

வர்த்தக வரலாற்றில் இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இடையிலான இருதரப்பு வர்த்தகம்தடைகளை தாண்டி முதல் முறையாக பில்லியன் அமெரிக்க டொலர் ஈட்டப்பட்டுள்ளது.

மீன் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கும் வகையில், இலங்கையால் முன்னெடுக் கப்பட்டுள்ள நடவடிக்கைகளை ஐரோப்பிய ஒன்றியம் பாராட்டியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## மோடியிடம்...

சமகால நிலைமைகள் தொடர்பாக வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி வடமாகாணத்திற்கு வருகை தரவுள்ளார். நாங்கள் வட மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தியிருக்கின்றோம். ஆகவே நாமும் எமது மக்களும் எதிர் நோக்கும் பிரச்சினைகளை, குறைபாடுகளை அவரின் கவனத்திற்குச் கொண்டு செல்வோம். குறிப்பாக 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடை முறைப்படுத் மாறு கோருவோம். காரணம் 13ஆவது திருத்தச்சட்டத்தை இந்தியாவே எமக்கு அளித்திருக்கின்றது. ஆகவே அதில் குறைபாடுகள் காணப்படும் பட்சத்தில் அதனை திருத்திய மைத்து முழுமையாக நடைமுறைப படுத்த வேண்டிய தார்மீகப் பொறுப்பும் அவர்களுக்கு உள்ளது. எனவே அது தொடர்பிலான விடயங்கள்தொடர்பில் நாம் விரிவாக பேசுவோம்.

வடக்கு மாகாண சபையில் தற்போது இருக்கும் நிலைமையானது வரவேற்கத்தக்கது. கடந்த சனிக்கிழமை கூட நான் முல்லைத் தீவுக்குச் சென்றபோது தற்போதைய ஆளுநருடன் இணைந்தே சென்றிருந்தேன். ஆரம்பத்தில் எமக்கு காணப்பட்ட அதிகாரங்களை முனனாள் ஆளுநர் தனது கைகளில் எடுத்துச் செயற்பட்டார். ஆனால் தற்போதைய ஆளுநர் எமது செயற்பாடுகளுக்கு பக்கத் துணையாக காணப்படுவதுடன் எந்தவிதமான தலையீடுகளையும் மேற்கொள்ளாதிருக்கின்றார். அந்தவகையில் உறவு சுமுகமாக அமைந்துள்ளது. இருப்பினும் எந்தளவிற்கு எமக்கான முழுமையான அதிகாரப் பகிர்வு கிடைக்கும். எந்தளவுக்கு முழுமை அடையப்போகின்றோம் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டியுள்ளது.

அண்மையில் வடக்கு வந்திருந்த ஜனாதிபதி மைத்திரிபாலவுடனான சந்திப்பு மிகவும் ஆக்கபூர்வமாக அமைந்தது. எந்தவொரு தருணத்திலும் தமிழ் மக்களின் மனதை நோகடிக்கும் வகையில் எந்தவொரு சொல்லையும் அவர் கூறவில்லை. அதற்கு மாறாக நண்பர் ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடு அமைந் திருக்கின்றது. முதலில் தன்னுடைய மருமகனை வடக்கிற்கு அனுப்பினர். அவர் இராணுவ முகாம்களை அகற்றப் போவதில்லை எனக் கூறினார். அதன் பின்னர் காணாமல் போனோர் விடயத்தில் தற்போது ரணில் விக்கிரமசிங்க பதிவு செயயப்பட்டவர்களைத்தவிர எவருமே முகாம்களில் இல்லை. விடுதலைப்புலிகளே கொலை செய்திருக்க வேண்டும் என தமிழ் மக்களின் மனத்தை நோகடிக்கும் வகையில் கருத்துக்களை வெளிப் படுத்தியிருக்கின்றார்.

காணாமல் போனவர்கள் தொடர்ச்சியாக தமது உறவுகளை கேட்டு கதறிக்கொண்டிருக்கின்றார்கள். அனைவருக்கும் முன்னிலையிலேயே பலர் கையளிக் கப்பட் டுள்ளார்கள். அதற்கான பல சாட்சியங்கள் காணப்படுகின்றன. அவ்வாறிக்கையில் அதுபோன்ற சம் பவங்கள் எதுவுமே நடைபெறவில்லை. புலிகளே கொலை செய் திருக்க வேண்டும் எனக் கூறியிருப்பதானது மிகுந்த மனவேத னையை ஏற்படுத்தியிருக்கின்றது. மேலும் அவருக்குரிய பதிலை விரைவில் வழங்குவேன்.

இனப்படுகொலை தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை இனவாத அரசியல் அல்ல. அவர்கள் இனவாதத்தை முன்னெடுப்பார்கள் என்பதற்காக நாம் உண்மையை கூறாமல் இருக்கமுடியாது. நாம் பிரேரணையில் கூறப்பட்டுள்ள அத்தனை விடயங்களும் உண்மையானவை. அதில் எந்தவொரு மாற்றமோ, பொய்மையோ இல்லை. ஏனெனில் வெளிநாட்டு ஸ்தாபனங்கள் தாங்களாக நபர்களிடமிருந்து சாட்சியங்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் தயாரித்த அறிக்கையிலிருந்தே பிரேரணையில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் காணப்படுகின்றன.

இதுவரைகாலமும் தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைகளால், கஷ்டங்களால் எமது வாழ்க்கை எந்தவிதமான சூழலுக்கு வந்துள்ளது என்பதற்கான சகல விபரங்களையும் உள்ளடக்கி இந்த பிரேரணையை நாம் வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றியிருக்கின்றோம். நல்லிணக்கத்தை உண்மையிலேயே ஏற்படுத்த விரும்புகின்றார்கள் என்றால் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு முன்னதாக எமக்குள் காணப்படும் முரண்பாடுகளை அறிந்துகொள்வது அவசியம். எமக்கு என்ன நடந்தது என்பதை அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும். ஆகவே எமக்கு நடந்த விடயங்களை சிங்கள மக்களுக்கும், வெளிநாட்டவர்களுக்கும் அறிவிப்பதற்கான நடவடிக்கையே அதுவாகும். குறிப்பாக இப் பிரேரணை மிகமுக்கினமான ஆவணமாகும். அந்த ஆவணத்தை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அந்த ஆவணமில்லாது நாம் நல்லெண்ணத்தை ஏற்படுத்த முடியாது. அந்த ஆவணத்தில் கூறப்பட்ட தன் பிரகாரம் சில விடயங் கள நடைபெற்றிருக்கின் றன. அதனை ஏற்றுக் கொள்வார்களாயின் நல்லிணக்கத்தை நோக்கிய அடுத்த கட்டத்திற்குச் செல்லமுடியும் என முதலமைச்சர் தெரிவித்தார். (செ-11)

## கல்வி அமை...

பிரதேசங்களில் ஆசிரிய சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களே மேற்படி போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

நேற்றுக் காலை 8.00 மணியளவில் கல்வி அமைச்சின் அலுவலகத்திற்கு சென்று ஆசிரியர்கள் தம்முடைய இடமாற்றத்தை உடனடியாக வழங்குமாறு கோரி அலுவலகத்திற்கு முன்பாக நீண்ட நேரம் காத்து நின்றனர்.

சுமார் ஐந்து மணித்தியாலங்கள் ஆசிரியர்களை சந்திப்பதற்குயாரும் முன்வராத காரணத்தினால் விரக்தியடைந்த ஆசிரியர்கள் கல்வி அமைச்சின் அலுவலகத்தின் பிரதான வாயிலை வழிமறித்து பூட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த ஆசிரியர்கள் ஆசிரிய இடமாற்றச் சபையின் நிபந்தனைக் கேற்ப ஆறு வருடங்களுக்கு மேலாக குறித்த வலயங்களில் கடமையாற்றிய போதிலும் ஆறு வருடங்களுக்கு மேலாகியும் இடமாற்றம் கிடைக்கப்பெறாத நிலையில் கடந்த மாதங்களில் தமக்கான இடமாற்றத்தினை வழங்குமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு கடந்த முதலாம் திகதியன்று இடமாற்றம் வழங்குவதாக உறுதியளித்திருந்தது.

இதற்கமைய ஆசியர்கள் தமது இடமாற்றக் கடிதத்தைக் கோரிய போதிலும் பின்னர் வேறு ஒரு தினத்தில் வழங்குவதாக தெரிவித்தனர். இதே போன்று மூன்று தடவைகள் ஏமாற்றி நேற்று 9 ஆம் திகதி வருமாறும் தெரிவித்திருந்தனர்.

இதற்கமைய நேற்றையதினம் ஆசிரியர்கள் அனைவரும் வந்திருந்த போதும் அலுவலகத்தில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இருந்தும் காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை ஆசிரியர்கள் அலுவலகத்தியே நின்றிருந்த போதும் யாருமே அவர்களைக் கண்டு கொள்வதாகவோ அவர்களுககுரிய பதிலைக் கூறுவதாகவோ தெரியவில்லை.

இதனையடுத்து ஆசிரியர்கள் கல்வி அமைச்சின் செயலாளரின் அலுவலகத்தைப் பூட்டினர். இதன் பின்னர் அங்கு உடனடியாக கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் வருகை தந்தார். ஆயினும் இதன்போது எந்தவித இணக்கமும தோற்றுவிக்கப்படவில்லை.

தொடர்ந்தும் ஆசிரியர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். இதன் பின்னர் சிறித் நேரத்தில் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா வருகை தந்தார். இதனையடுத்து அமைச்சர் தலைமையில் மாகாணத்தின் கல்வித்திணைக்கள அதிகாரிகள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுக்கு இடையில்விசேட கலந்துரையாடலொன்று நீண்ட நேரமாக நடைபெற்றது.

இதன் போது பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கல்வித் திணைக்களத்தின் நுழை வாயிலை மறித்து பூட்டியிருந்தனர். இதனால் அங்கிருந்து உள்ளேயோ அல்லது அதற்கு வெளியேயோ வாகனங்கள் ஏதும் செல்ல முடியவில்லை. இரவு ஒன்பது மணி வரை கதவு பூட்டி மறித்தி ருந்ததால் அங்கு பெரும்களோ பரமே ஏற்பட்டது. இதன் போது மாகாண கல்வி அமைச்சருக்கும் மாகாண சபைகும் எதிராக ஆசிரியர்கள் கோசம் எழுப்பியதுடன் பல்வேறு குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்தனர்.

இவ்வாறான நிலையில் இதற்குரிய தீர்வைப் பெற்றுக் கொடுப்பதாகவும் ஆகவே போராட்டத்தைக் கைவிடுமாறும் மாகாண சபை உறுப்பினர் கஜதீபன் கோரியிருந்தார். ஆயினும் இதற்கு ஆசிரியர்கள எதிர்ப்புத் தெரிவித்து போராட்டத்தினை தொடர்ந்து மேற்கொண்டனர்.

இதன் பின்னர் மாகாண கல்வித் திணைக்கள அதிகாரிகள் பலரும் வந்து ஆசிரியர்களுடன் பேசியிருந்தனர்.

ஆயினும் இதன் போதும் எந்த வித முடிவுகளும் எடுக்கப்படாத நிலையில் வாயிலை முடியதான போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது. இதனால் அமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகள் வெளியே செல்ல முடியாத நிலையும் ஏற்பட்டிருந்தது.

பின்னர் அங்கு வந்த விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மற்றும் கஜதீபன் ஆகியோர் ஆசிரியர்களுடன் பலதடவைகள் பேசிய பின்னரும் வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் ஆகியோர் நாளையதினம் (இன்றைய தினம்) இவ் இடமாற்றங்களினை தருவதாக கையொப்பமிட்டு கடிதம் கொடுத்த பின்னரே ஆசிரியர்கள் அங்கிருந்து விலகிச்சென்றனர். (செ-4)

## ஊழலை விசா...

முன்னாள் கணக்காய்வாளர் சரத் சந்திரசிறி மாயாதுன்ன, ஓய்வு பெற்ற செலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி வழக்கறிஞர்கள் ஞானதாச ஆகியோர் குறித்த ஆணைக்குழுவின் அங்கத்தினர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

மேலும் இவ் ஆணைக்குழுவினால் மகிந்த அரசாங்கத்தில் மேற்கொள்ளப்பட்ட பெரிய அளவிலான திட்டங்கள் மூலம் இடம் பெற்ற பாரிய ஊழல் மோசடிகள் தொடர்பாக அரச வளங்கள் மற்றும் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தல் உட்பட பல காரணங்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது. (செ-11)

## தேசிய அரசை அமைப்...

இலகுவான விடயம் அல்ல என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன லண்டனில் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரித்தானிய கிளையில் மைத்திரி ஆதரவு அணியினர் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தின் போதும், 2009 ஆம் ஆண்டு போர் வெற்றியின் பின்னரும், 2015 ஆம் ஆண்டு பொது வேட்பாளர் வெற்றிபெற்ற பின்னரும் இலங்கையில் ஐக்கியப் படுத்தி மீளகட்டியெழுப்பு சந்தர்ப்பம் கிடைத்தது.

முதலில் கிடைத்த இரண்டு சந்தர்ப்பத்தை நாம் இழந்து போனோம். தற்போது இறுதியான சந்தர்ப்பமே எம்மிடம் எஞ்சியிருக்கின்றது.

பிளவுபட்டு போன நாட்டை ஒன்றுபடுத்தவும் வீழ்ந்து போயுள்ள பொருளாதாரத்தை முன்னேற்றவும் 2015 ஆம் ஆண்டு கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

வடக்கிலும் தெற்கிலும் உள்ள அரசியல் கட்சிகள் அவதூறு அரசியலை நிறுத்த வேண்டும். அவர்களின் சுயநலம் மற்றும் சந்தர்ப்பவாத அரசியல் கைவிடவில்லை என்றால், இன்னும் 10 வருடங்களில் மற்றுமொரு யுத்தம் ஏற்படுவதை தவிர்க்க முடியாது.

அதேவேளை இலங்கையின் ராஜதந்திர சேவையில் ஏற்பட்டுள்ள தோல்வி மற்றும் அவமானத்தை மாற்றி, அதன் புகழையும் சிறப்பையும் மீண்டும் ஏற்படுத்த வேண்டும்.

தூதுவர் பதவிகளும் ராஜ தந்திர பதவிகளும், நண்பர்கள், உறவினர்கள், பந்தம் பிடிப்போர், ஆடம்பரம் தேடிச் செல்வோர் மற்றும் பிள்ளைகளை வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் சேர்க்கும் நபர்களுக்கும் வழங்கப்படக் கூடாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## அகதிகளுக்கான உடன்...

பிடப்பட்டுள்ளது.

அண்மையில் அவுஸ்திரேலியா மனித உரிமைகள் அமைப்பினால் வெளியிடப்பட்ட மறந்து போன சிறார்கள் என்ற அறிக்கை வெளிவந்து ஒரு மாதத்திலேயே ஐ.நாவின் இந்த புதிய அறிக்கை வெளியாகியுள்ளது.

இதன் காரணமாக அவுஸ்திரேலியா தனது மனித உரிமை கடமைகளில் பின்னிற்பதையே காட்டுகின்றது.

இதன் காரணமாக சர்வ[illegible] அளவில் தற்போது அவுஸ்திரேலியாவுக்கு பாரிய நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாகவும் பலதரப்பட்ட விமர்சனங்களும் எழுந்த வண்ணமும் உள்ளது.

அண்மையில் அறிமுகப்படுத்திய இரு குடிவரவு சட்டங்களும் அகதிகளுக்கு சிறந்த சட்டங்கள் அல்ல. இதன் காரணமாக சட்ட வல்லுனரகளின் உதவிகள் எடுப்பதற்கான வசதிகள் தடுக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று நடுக்கடலில் வைத்து விசாரணை செய்வது என்பது சர்வதேச அகதிகள் சட்டத் தினை மீறும் செயலாக உள்ளது.

இதன் காரணமாக இந்த சட்ட மாற்றம் அரசாங் கத்துக்கு சார்பாகவே அமைந்துள்ளது.

இந்த புதிய சட்ட மூலங்கள் அகதிகளை பொறுத்த மட்டில் மிகவும் ஆபத்தான[illegible] என்று சட்டவல்லுனர்கள் தெரிவித்துள்ளனர். (செ-11)




## கொழும்பு...

கள் இருப்பதாக தெரியவருகின்றது.

பிரதமர் மோடியின் இலங்கை விஜயம் எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறவிருக்கும் வேளையில் ஜெயக்குமாரியும் வேறு சில அரசியல் கைதிகளும் விடுதலைப் பெறுவதற்குரிய வாய்ப்பு உண்டென்று நம்பப்படுகின்றது. (ந)

## வெளியே செல்ல...

மிதக்கும் ஆயுதக் களஞ்சியம் தொடர்பான விசாரணைகளின்போதே, நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இந்த மிதக்கும் ஆயுதக் களஞ்சியத்திலிருந்த ஆயுதங்களும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கிய இன்னொரு பாதுகாப்பு நிறுவனத்தின் ஆயுதங்களும் முன்னர் மகிந்த ராஜபக்ஷ அரசாங்க காலத்தில் அச்சுறுத்தும் தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸார் கூறுகின்றனர்.

எனினும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின சகோதரரான கோத்தபாய ராஜபக்ஷ இநதக் குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளார். (எ-11)

### தேவை

ஹோட்டல் ஒன்றிற்கு வேலை செய்யக் கூடிய அனுபவமுள்ள அல்லது பழக விரும்புவோர் தேவை.

T.P : 077 125 8072 (9728)

2 மணித்தியாலத்தில்

### கணினி திருத்தம்

உங்கள் வீடுகளுக்கும் வந்து கணினிகள் திருத்தி தருகிறோம் அழையுங்கள்.

Computer Repair

0779086737 52, Hospital Road, Jaffna.

GUNAA BEST PC (9724)

## சீனா உடன்பாட்...

திருந்த நிலையிலேயே, சீனா இந்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கைக்கான சீனத் தூதுவராக அண்மையில் பொறுப்பேற்ற யிஜி யான்லி யாங் கடந்த வியாழக்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவையும், வெள்ளிக்கிழமை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திருந்தார்.

இதையடுத்து, இச் சந்திப்புத் தொடர்பில் கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில், சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் குறித்து இரு தரப்பும் நட்புரீதியாக கலந்துரையாடியதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன், சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்பு தொடர்பில் வெளிப்படையான கருத்துக்களை சீனத்தூதுவர் பரிமாறிக் கொண்டதாகவும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஆயினும், இச் சந்திப்புகளின் போது கொழும்பு துறைமுக நகரத்திட்டம் குறித்தே முக்கியமாக கலந்துரையாடப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையில் தான் செய்து கொண்ட இருதரப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தங்களை மதிக்க வேணடியது இலங்கை அரசாங்கத்தின் கடமை என்று தனது பெயர் குறிப்பிட விரும்பாத சீனத் தூதரக உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (செ-11)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.